janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 84 | 2022 மார்ச் 06 - 12 | விலை: ரூ.10 | 16 பக்கங்கள் | இதழ் 48




**சிந்தனை சிற்பியாக...**



நகர்ப்புற அமைப்புகளுக்கான தேர்தல்கள் முடிந்து, மாநகர மாமன்ற உறுப்பினர்களும், நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பேரூராட்சி உறுப்பினர்களையும் வாக்காளப் பெருமக்கள் தங்களின் ஜனநாயகக் கடமையை >>>

ப 02


**விஞ்ஞான சோசலிசம்**



சோசலிசக் கருத்துக்கள் காலம் காலமாக இருந்து வந்துள்ளன. பொதுவாக தனி உடமை தோன்றிய பின்னர் அதன் நெருக்கடிகளைக் கண்ட பலர் எல்லோரும் சமமாக இருக்க வேண்டும் என்ற கருத்தை. >>>

ப 05

**ஹிஜாப் தேவையா?**



இரதயாத்திரை நடத்துதல், ராமர் கோயில் கட்டுதல், பாபர் மசூதி இடிப்பு, குஜராத் இனப்படுகொலைகள் என மதகலவரங்களை உருவாக்கி ஆட்சியதிகாரத்தை பிடிப்பதும், ஆட்சியை தக்க வைத்துக் கொள்வதும் பிஜேபி சங்பரிவார் கும்பலுக்கு வாடிக்கையான >>>

ப 06

## நான் என்றும் - எந்த நிலையிலும் உங்களில் ஒருவனாகவே இருப்பேன்!




### சரிநிகர் உரிமை கோரும்

# திராவிட மாடல் விதைப்பதே எனது பணி!

### ‘உங்களில் ஒருவன்’ தன் வரலாறு நூல் வெளியீட்டு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஏற்புரை!

‘உங்களில் ஒருவன்’ தன் வரலாறு நூல் வெளியீட்டு விழாவில் முதல்வர் மு.க. ஸ்டாலின் ஏற்புரை!

‘உங்களில் ஒருவன்’ நூல் வெளியீட்டு விழாவில் ஏற்புரை நிகழ்த்திய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் “நான் என்றும் எந்த நிலையில் உங்களில் ஒருவனாகவே இருப்பேன்” என்றும் குறிப்பிட்டார்.

தி.மு.க. தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதியுள்ளதன் வரலாற்று நூலான ”உங்களில் ஒருவன்பாகம் 1” நூல் வெளியீட்டு விழா சென்னை நந்தம் பாக்கத்தில் உள்ள வர்த்தக மையத்தில் நடைபெற்றது.

இதில், கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்கள் விழாத் தலைமை வகித்திட, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்கள் முன்னிலை வகிக்க, அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தராகுல் காந்தி எம்.பி. அவர்கள் நூலினை வெளியிட்டார்.

தி.மு.க. மாநில மகளிரணிச் செயலாளர் கனிமொழி வரவேற்புரை வழங்கிட, கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன், பீகார் மாநில எதிர்க்கட்சித் தலைவர் தேஜஸ்வியாதவ், ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதலமைச்சர் உமர் அப்துல்லா, ”கவிப்பேரரசு”வை வரமுத்து மற்றும் இனமான நடிகர் சத்யராஜ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இவ்விழாவில் தி.மு.க. தலைவர் அவர்கள் ஆற்றிய ஏற்புரை வருமாறு:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மறைவுக்குப் பிறகு கோடிக்கணக்கான திராவிட முன்னேற்றக் கழகத்தின் உடன்பிறப்புகளின் தலைவனாக நான் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுக்குழுவில் பேசும்போது ஒரு கருத்தை நான் குறிப்பிட்டுச் சொன்னேன்.

`கலைஞர் அவர்களைப் போல எனக்கு எழுதத் தெரியாது.

அவரைப் போல பேசத் தெரியாது.

ஆனால் அனைத்தையும் முயன்று பார்ப்பேன்” என்று நான் அப்போது குறிப்பிட்டேன்.

அப்படி நான் செய்த முயற்சிதான் இந்தப் புத்தகம்.

உங்களில் ஒருவன் என்பதை எந்நாளும் மறக்க மாட்டேன்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் என்ற பெருமையால் அல்ல இந்தத் தமிழ் நாட்டின் முதலமைச்சர் என்ற கர்வத்தால் அல்ல எப்போதும் என்றென்றும் எந்தச் சூழலிலும் எந்தப் பொறுப்பில் இருந்தாலும் உங்களில் ஒருவன் தான் நான் என்பதை எந்த நாளும் இந்த ஸ்டாலின் மறக்க மாட்டான் என்பதன் அடையாளமாகத்தான் எனது வாழ்க்கை வரலாற்று நூலுக்கு ‘உங்களில் ஒருவன்’ என்றே பெயர் சூட்டி இருக்கிறேன்.

சென்னை மாநகரத்தின் வணக்கத்துக்குரிய மேயர் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டபோது `பதவி’ என்று நான் எழுதிய இடத்தில்`பொறுப்பு’ என்று மாற்றி எழுதித் தலைவர் கலைஞர் செய்த திருத்தம்தான் என் வாழ்க்கையில் மறக்க முடியாத பெரிய பாடம் ஆகும். அந்த பொறுப்பில் இருந்து எத்தனை உயர் பொறுப்புக்கு நான் வந்தாலும் ‘உங்களில் ஒருவன்தான் நான்!


தொடர்ச்சி 5ம் பக்கம் >>



### மு.க.ஸ்டாலின் பிறந்த நாளுக்கு டி.ராஜா தொலைபேசியில் வாழ்த்து

மார்ச் 1 அன்று, தி.மு.க. தலைவரும் தமிழக முதல் அமைச்சருமான மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி.ராஜா அவர்கள் பிறந்த நாள் வாழ்த்துக்களை தொலைபேசியில் தெரிவித்தார்.






# சிந்தனைச் சிற்பியாக வாருங்கள்

**பேரன்புமிக்க தோழர்களே!**

**நகர்ப்புற அமைப்புகளுக்கான தேர்தல்கள் முடிந்து, மாநகர மாமன்ற உறுப்பினர்களும், நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பேரூராட்சி உறுப்பினர்களையும் வாக்காளப் பெருமக்கள் தங்களின் ஜனநாயகக் கடமையை நிறைவேற்றியதன் மூலம் தேர்ந்தெடுத்துள்ளனர்.**

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி மகத்தான வெற்றி வாகை சூடிட தமிழக நகர்ப்புற மக்கள் தெள்ளத் தெளிவான தீர்ப்புகளை வழங்கி உள்ளனர்.

வழங்கப்பட்ட தீர்ப்பில் நமது கட்சி வெற்றி பெற்ற இடங்கள், வாகை சூடிய தோழர்கள் ஆகிய முழு விவரங்களும் சென்ற வார இதழில் வெளியிடப்பட்டுள்ளது.

முழு விவரங்களையும் தாமதமின்றி ஜனசக்தியில் வெளியிட்ட தோழர்களுக்கு பாராட்டுக்கள்.

வெற்றிபெற்ற எண்ணிக்கையைவிட மேலும் கூடுதலான வார்டுகளில் வெற்றி பெற்றிருக்க முடியும், அதே போன்று போட்டியிடக்கூடிய இடங்களையும் அதிகரித்து இருக்க முடியும்.

ஏன் குறைந்தது என்பது குறித்து ஆய்ந்தறிந்து, படிப்பினைகளைப் கற்று முன்னேற செய்வோம்.

நகர்ப்புறங்களில் மக்களின் பிரச்சினைகள் மலையெனக் குவிந்து கிடக்கின்றன.

குப்பைக் கூளங்கள், வழிந்தோடும் சாக்கடை கழிவு நீர், குடிப்பதற்கு நல்ல தண்ணீர் இல்லை; இருந்தா லும் தேவையான அளவிற்கு கிடைக்கவில்லை– தெருவிளக்குகள் போதுமான அளவிற்கு இல்லை – பல இடங்களில் புறம்போக்கு நிலமாக இருந்தால் கூட அவைகளுக்கு பட்டா இல்லை.

கோயில் மனைகளில் குடியிருப்போருக்கு வாடகை என்ற பெயரால் அதிகபட்ச கட்டணம், கட்ட முடியாமல் தவிக்கும் ஏழை, எளிய மக்களை குடிமனையை காலிசெய் என்று அச்சுறுத்தல், கல்வி நிலையங்களில் குறைபாடு, ஏழை மக்களால் பெரிய ஆஸ்பத்திரி என்று போற்றப்படும் அரசு மருத்துவமனைகளில் அவலங்கள், மழை பெய்தால் மழை நீர் வடிய வழியின்றி சென்னை மாநகரம் உள்பட நகரங்கள் தண்ணீரில் மிதக்கும் அவலம். தண்ணீர் தேங்குவதால் பஞ்சமின்றி உற்பத்தியாகும் கொசுக்கள். அவைகளின் கடியால் பரவும் நோய்கள். இவை போன்ற எண்ணிலடங்கா பிரச்சனைகளை நகர மக்கள் எதிர் கொண்டுள்ளனர்.

நாம் வாக்களித்து வார்டு உறுப்பினர்களை தேர்வு செய்தால், நமது பிரச்சினைகள் தீரும் என்கிற பெருத்த நம்பிக்கையுடன் மக்கள் வாக்களித்துள்ளனர்.

அவர்களின் நம்பிக்கை வீண்போகாமல் நம்பிக்கை நட்சத்திரமாக தங்களது மக்கள் பணியின் மூலமாக, சேவையின் மூலமாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஜொலிக்க வேண்டும்.

வாக்காளப் பெருமக்கள் வாக்குச்சாவடிக்கு வருகை தந்து, ஆள்காட்டி விரலில் மை வைத்து, வாக்குப் பதிவு இயந்திரத்தில் உள்ள பட்டனை அழுத்தி வாக்களிக்கும் வரை எஜமானர்களாக போற்றப்படுகின்றனர்.

அந்த நொடி வரை தொண்டனாக, சேவகனாக தன்னை வேட்பாளர்கள் கூறிக்கொள்கின்றனர். வாக்களித்த பின்னர் வேட்பாளர் வெற்றி பெற்ற பின்னர் இவர் எஜமானராக மாறுவதும், மக்கள் அவர்களின் தயவை நாடி கைகட்டி நிற்பதும் என்கிற பரிதாபகரமான நிலை மாற்றி அமைக்கப்பட வேண்டும் – என்றென்றும் மக்களை மதிக்கும் மனோநிலையில் உறுப்பினர்கள் செயல்பாடு அமைந்து முன்னுதாரண புருஷர்களாக செயல்படவேண்டும்.

நீரில் வாழ்கின்ற மீன்கள் துள்ளி குதித்து, நீரை விட்டு வெளியேறி கரையில் விழுந்தால், அது எக்கதிக்கு ஆளாக நேரிடுகின்றது என்பதனை ஒவ்வொரு நொடிப்பொழுதும் மக்கள் பிரதிநிதிகள் கவனத்தில் கொள்வது நன்று.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொருவரும் தனக்கு மக்கள் அளித்திட்ட வாய்ப்பை பதவி என்று கருதாது, பொறுப்பு என்பதனை உணர்ந்து பொறுப்புடன் செயல்படுவதையே மக்கள் விரும்புகின்றனர், எதிர்பார்க்கின்றனர்.

மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவோம்! நிறைவேற்றக் கூடிய ஆற்றல் மிக்கவர்களாக செயல்பட்டு, மக்களின் நன்மதிப்பை பெறுவோம்! அதற்கான முயற்சிகளை இடைவிடாது மேற்கொள்வோம்!

நகர்ப்புற அமைப்புகளில் வாழும் மக்களின் தேவையறிய அவர்களுடன் ஒன்றிணைந்து நிற்க வேண்டும்.

மக்களின் பிரச்சனைகளை, துன்பங்களை, துயரங்களை நன்கறிந்து அவைகளை செவிமடுத்துக் கேட்டு அவர்களை அணிதிரட்டி பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டும்.

உலகின் மாமேதையாக போற்றப்பட்டு வரும் தோழர் லெனின் கூறிய, செயல்படுத்திய கருத்தை கற்றுணர்ந்து மட்டுமல்ல செயல்படுத்திட வேண்டும்.

“மக்களிடம் செல், மக்களிடம் கற்றுக்கொள், மக்களைக் கொண்டே தீர்வு காண்” என்ற எதார்த்த உண்மையை நாம் படிக்கவும், பின்பற்றவும் வேண்டும்.

வள்ளுவ பெருந்தகை “கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக” என்ற வைர வரிகளை நெஞ்சில் நிறுத்திட வேண்டும்.

சிந்தனை சிற்பி சிங்காரவேலர் எண்ணற்ற சாதனைகளை புரிந்துள்ளார்.

தமிழகத்தில் முதன்முதலாக உருவான சென்னை மாநகரத்தின் மாமன்ற உறுப்பினராக சிங்காரவேலர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றினார் என்பதனை அனைவரும் நன்கறிவோம்.

அவர் பல தொழிற்சங்கங்களுக்கு தலைவராக இருந்து வழிகாட்டினார்.

ஆலைத் தொழிலாளர்களை மட்டுமல்ல, தலையில் சாப்பாட்டை சுமந்து சென்ற பெண்களை அமைப்பு ரீதியாக அணி திரட்டினார்.

கை ரிக்ஷா இழுக்கும் தொழிலாளர்களை அணி திரட்டி சங்கம் கண்டார்.

சென்னை மாநகரத்தில் வாழும் ஏழை, எளிய மக்களின் குழந்தைகள், கல்வி நிலையங்கள் சென்று கல்வி கற்க வேண்டிய குழந்தைகள் படித்து, பட்டம் பெற்று பல்வேறு அரசு பணிகளுக்கு சென்று பணியாற்ற வேண்டிய குழந்தைகள் பள்ளி செல்லாமல் கந்தல் ஆடையுடன், அழுக்கேறிய உடலோடு தெருக்களில் கிடக்கும் குப்பை கூளங்களை சேகரிக்கும் குழந்தைகளாக, மெரினா கடற்கரையில் முறுக்கு விற்கும் சிறுவர்களாக, தேனீர் கடைகளில் எச்சில் பாத்திரங்களை கழுவி சுத்தம் செய்யும் சிறுவர்களாக, உணவு விடுதிகளில் (ஹோட்டல்) எச்சிலை எடுத்து சுத்தம் செய்யும் சிறுவர்களாக பணிபுரிந்து வந்த கொடுமைகளைக் கண்டார் சிங்காரவேலர்.

இத்தகைய நிலைக்கு சிறுவர்கள் தள்ளப்பட்டதற்கான காரணம் அவர்களின் வறுமையை என்பதனை அறிந்து அதற்கு தீர்வு காண முயன்றார்.

மாமன்ற உறுப்பினரான சிங்காரவேலர் மாமன்ற கூட்டத்தில் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தார்.

**மாநகராட்சிப் பள்ளிகளில் ஏழைக் குழந்தைகளுக்கு ஒரு வேளை மதிய உணவு அளித்தால் ஏழை, எளிய மக்களின் குழந்தைகள் குப்பை பொறுக்கவும், முறுக்கு விற்கவும், டீ கடையில், ஹோட்டல்களில் எச்சில் பாத்திரங்கள் கழுவாமல், எச்சிலை எடுக்காமல், படிப்பதற்கு பள்ளிக்கூடம் வருவார்கள். ஆகவே மதிய உணவுத் திட்டத்தை அமல்படுத்திட வேண்டுமென்று தீர்மானத்தை முன்மொழிந்தார்.**

அவரது தீர்மானம் மன்றத்தால் ஏற்கப்பட்டு மாநகராட்சி நடத்தும் பள்ளிகளில் அமல்படுத்தப்பட்டது.

வெள்ளையர் ஆட்சி காலத்தில் தொடங்கப்பட்ட சிங்காரவேலரின் மதிய உணவுத் திட்டம் இன்று தமிழகத்தில்மதியஉணவுதிட்டமாக, சத்துணவுதிட்டமாக, கோழி முட்டைகளுடன் கூடிய திட்டமாக விருட்சமாக வளர்ந்து, தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி என வளர்ந்துள்ளது.

மாமன்ற உறுப்பினர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், இவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் மேயர், துணை மேயர், நகர்மன்ற தலைவர், துணைத்தலைவர், பேரூராட்சி மன்ற தலைவர், துணைத் தலைவர் அனைவரும் சிந்தனை சிற்பி சிங்காரவேலரை போன்று சிந்திக்க, செல்பட முன்வாருங்கள், வாழ்த்துக்கள்.

**மீண்டும் சந்திப்போம். வணக்கம்.**

**தோழமைமிக்க**

**இரா.முத்தரசன்**

# முதலமைச்சருக்கு பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும், தமிழ்நாடு அரசின் மாண்புமிகு முதலமைச்சருமான சகோதரர் திரு மு.க ஸ்டாலின் அகவை 69ஐ நிறைவு செய்து, 70வது வயதில் அடியெடுத்து வைக்கும் இனிய நாளில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு, அவர் நல்லரோக்கியம் மற்றும் நீண்ட ஆயுளும் பெற்று பல்லாண்டு வாழ்வாங்கு வாழ்ந்திட வாழ்த்துகிறது.

நூற்றாண்டு கடந்த திராவிட இயக்க பாரம்பரியத்தை உள்வாங்கி, நீதிக்கட்சியின் சமூகநீதி போராட்ட பாராம்பரிய தொடர்ச்சியாக உருவான சுயமரியாதை, சமதர்ம இயக்கத்தின் விழுதாக தமிழ் மண்ணில் பதிந்து, விரிந்த திராவிட முன்னேற்றக் கழகத்தில் திரு. மு. க. ஸ்டாலின் 14 வயதில் தொடங்கிய அரசியல் பொது வாழ்வுப் பயணம் சிகரம் தொட்டு. சிறப்புப் பெற்றுள்ளது.

அரசியல் அமைப்புச சட்டம் வரையறுத்துள்ள “ஒன்றிய அரசு” என்ற சொல். கூட்டாட்சி கோட்பாட்டை பாதுகாக்கும் போர்க் குரலாக ஒலிக்க செய்தவர்.

மதவெறி கும்பல், பழைமைவாத சக்திகள், வழக்கொழிந்து வரும் “வர்ணாசிரம” சனாதானத்துக்கு உயிர் கொடுக்கும் முயற்சியை முறியடிக்கும் போராட்டத்தின் சாரதியாக திகழ்பவர்

பன்னாட்டு குழும நிறுவன சக்திகளும், நிதி மூலதன ஆதிக்கமும் ஒன்றிய அரசு அதிகார மையத்தை “பாசிச வகைப்பட்ட ஆட்சியாக கட்டமைக்க, மதச்சார்பற்ற பண்பு வளையத்தை உடைத்து சிதைத்து வரும் சீரழிவுகள் தடுக்கப்பட பரந்துபட்ட அணி அமைத்து வரும் ஜனநாயக புரட்சியாளர்.

நாட்டின் பாதுகாப்பும், சுயசார்பும், மக்கள் நல்வாழ்வும், முன்னேற்றமும் தடைபட்டு கிடக்கும் பேரபாய சூழலில் கூட்டாட்சிக் கொள்கையை, சமூகநீதி ஜனநாயகத்தை மீட்டெடுக்க திரு மு.க.ஸ்டாலின் மேற்கொண்டு வரும் முயற்சிகள் விடியலின் வெளிச்சக் கீற்றாக அமைந்துள்ளன. நாடு முழுவதும் வாழ்ந்து வரும் மக்களின் நன்மதிப்பை பெற்றுத் திகழும் திரு. மு.க ஸ்டாலின் நல்லரோக்கியம் மற்றும் நீண்ட ஆயுளும் பெற்று, பல்லாண்டு வாழ்வாங்கு வாழ்ந்திட, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள பிறந்தநாள் வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

**போரை நிறுத்திடுக!**

**அமைதிக்கான பேச்சுவார்த்தையைத் தொடர்ந்திடுக!**

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வலியுறுத்தல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

கடந்த சில நாட்களாக உக்ரைன் நாட்டின் பல பகுதிகளில் ரஷ்யா நடத்தி வரும் இராணுவத் தாக்குதலின் விளைவாக பெரும் உயிர் சேதமும், பொருள் சேதமும் ஏற்பட்டுள்ளன. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இராணுவ தாக்குதலைத் தவறு என்று கருதுவதோடு உக்ரைனில் ரஷ்யப் படைகள் மேலும் முன்னேறிச் செல்வதை நிறுத்த வேண்டும் என்றும், உடனடியாகப் போர் நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும் என்றும், அமைதியை மீட்டு, மீண்டும் பேச்சுவார்த்தைக்குத் திரும்பிட வேண்டும் என்றும் வலியுறுத்துகிறது.

கடந்த சில மாதங்களாக, அமெரிக்கா மற்றும் நேட்டோ அமைப்பு உக்ரைன் மற்றும் அதன் கிழக்கு ஐரோப்பிய நேச நாடுகளுக்கு அதி நவீன ஆயுதங்கள் அளித்ததையும், ரஷ்ய எல்லைப்புற பகுதிகளில் ஏவுகணைகளை நிறுத்தி, இரு நாடுகளுக்கு இடையே பகையுணர்வை அதிகரிக்கச் செய்ததையும், அந்தப் பிராந்தியத்தில் அமைதி மற்றும் நிலைத்தன்மைக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியதையும் நாம் அனைவரும் அறிவோம்.

இந்த இராணுவ மோதல் இரு நாடுகளுக்கும் எவ்வித தீர்வையும் வழங்காது என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நம்புகிறது. மேலும், எரிபொருள், இயற்கை எரிவாயு மற்றும் மூலப் பொருள்கள் ஆகியவற்றின் சந்தையைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன், இது போன்ற தலையீடுகளை அமெரிக்கா ஒரு முன்னோட்டமாகப் பயன்படுத்திக் கொள்ளவே இந்த இராணுவத் தாக்குதல் உதவும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

கிழக்கு ஐரோப்பிய பகுதிகளில் அமெரிக்கா, நேட்டோ மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொண்டு வரும் இராணுவ விரிவாக்கத்தை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது.

ரஷ்யாவின் பாதுகாப்பு நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும்; ரஷ்யாவுக்கு எதிரான அனைத்து, ஒருதலைப்பட்சமான மனிதநேயமற்ற தடைகளையும் திரும்பப் பெற வேண்டும்; 2014 ஆம் ஆண்டு ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய இரு நாடுகளும் ஏற்றுக்கொண்ட மின்ஸ்க் ஒப்பந்தம் மதிக்கப்பட வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது.

உக்ரைன் நாட்டின் இறையாண்மை மற்றும் பிரதேச ஒருமைப்பாட்டுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மதிப்பளிக்கிறது. ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே பரஸ்பரம் நம்பிக்கை மற்றும் சுமூகமான நட்புறவு நிலவ வேண்டும் என்று விரும்புகிறது.

அந்நிய தலையீட்டுக்கு இடம் தராமல், தற்போதைய பிரச்சனைக்கு இருதரப்பு பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்வு காண இரு நாட்டு அரசாங்கங்கள் மேற்கொள்ளும் முன்முயற்சியை வரவேற்பதுடன், பேச்சுவார்த்தை மூலமாக அமைதி திரும்பும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நம்புகிறது.

**மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வாக்களித்தவர்களுக்கு**

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி நன்றி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில நிர்வாகக்குழுக் கூட்டம் பிப். 24 அன்று சென்னை நகரில் உள்ள மாநிலக் கட்சி அலுவலகத்தில் வை.செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு, மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், துணைச் செயலாளர்கள் கே.சுப்பராயன் எம்.பி., மு.வீரபாண்டியன், சி.மகேந்திரன், நாகை எம்.செல்வராஜ் எம்.பி., முன்னாள் எம்எல்ஏக்கள் ஜி.பழனிசாமி, நா.பெரியசாமி, எம்.ஆறுமுகம், வை.சிவபுண்ணியம், பி.பத்மாவதி, டி.ராமசாமி, எஸ்.குணசேகரன் மற்றும் வி.அழகிரிசாமி எக்ஸ்.எம்.பி., தமிழ்நாடு ஏஐடியூசி பொதுச் செயலாளர் டி.எம்.மூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் திமுகழக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை ஆதரித்து வாக்களித்து மாபெரும் வெற்றி பெறச் செய்த வாக்காளர்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில நிர்வாகக்குழு நன்றி தெரிவித்துக் கொள்கிறது. மதவெறியை தூண்டியும், வெறுப்பு அரசியலை பரப்பியும், சமூக மோதல்களை உருவாக்க முனைந்த வலதுசாரி சக்திகளையும், குறிப்பாக பாஜகவையும் பத்தாண்டுகளாக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை நடத்தாமல், ஜனநாயக உரிமையை பறித்த அஇஅதிமுகவையும் நிராகரித்த வாக்காளர்களுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில நிர்வாகக்குழு பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு மாநில நிர்வாகக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# உலக மூலதனம் மற்றும் தன்னலக் குழுக்களிடம் உக்ரைன் மக்கள் பலியாகிவிடக் கூடாது!

## ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை

**ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய தலைமைக் குழுவின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:**

டானெட்ஸ்க் மற்றும் லுகான்ஸ்க் குடியரசுகள் முறையீடு செய்ததைத் தொடர்ந்து, நாஜி வன்முறையாளர்களை அமைதிப் பாதைக்குத் திரும்பச் செய்யும் நோக்கத்துடன் ரஷ்யா ஒரு இராணுவஅரசியல் நடவடிக்கையைத் தொடங் கியுள்ளது. தற்போது எடுக்கப்பட்டுள்ள இந்த நடவடிக்கை டான்பாஸ் பகுதியில் அமைதியை உறுதிப்படுத்தவும், அமெரிக்கா மற்றும் நேட்டோ அமைப்பின் அதிகரித்து வரும் அச்சுறுத்தலுக்கு எதிராக ரஷ்யாவின் பாதுகாப்பைத் தற்காத்துக் கொள்ளவும் வகை செய்கிறது.

வார்சா உடன்படிக்கை கைவிடப்பட்ட பிறகு கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இராணுவமயமாக்கம் தொடர்ந்து அரங்கேறியது நிதர்சனமான உண்மை ஆகும். யூகோஸ் லாவியா நாட்டைச் சீர்குலைப்பதில் அமெரிக்கா வின் மூர்க்கத்தனமான சூழ்ச்சிகள் வெளிப்பட்டன. உக்ரைனை அடிமைப்படுத்தத் துடிக்கும் அமெரிக்க மற்றும் நேட்டோ அமைப்பின் திட்டங்களை நிச்சயம் நிறைவேறவிடக் கூடாது. இது போன்ற வஞ்சக திட்டங்கள் ரஷ்யாவின் பாதுகாப்புக்கு கடுமையான அச்சுறுத்தல்களை உருவாக்குகிறது என் பதோடு இந்தத் திட்டங்கள் உக்ரைன் மக்க ளின் நலன்களுக்கும் முரணானது ஆகும்.

எவ்வாறாயினும், அமெரிக்கா உலக அரங்கில் அதற்குச் சாதகமானப் பலன்களை அதிகரித்துக் கொள்ளவே முயலுகி றது. ரஷ்யாவுக்கு எதிரான தடைகள், நார்டு ஸ்ட்ரீம்2 குழாய் கட்டமைப்பைத் தகர்ப்பது, ஐரோப்பாவில் போர் ஆகியவற்றால் ஐரோப் பிய நாடுகளில் பெரும் பொருளாதார இழப்புகள் உண்டாகும் என்பது போன்ற எந்த ஒரு விஷயமும் அமெரிக்காவின் அத்தகைய முயற்சியைத் தடுக்க முடியவில்லை. இத் தகைய ஆபத்தான தன்மை கொண்ட அமெரிக்க கொள் கைகள் குறித்து உலக மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டியது மிக முக்கியம் ஆகும். போருக்கு எதிரான பரந்துபட்ட இயக்கங்களின் அனுபவங்களை உலக மக்கள் நினைவுகூருவதும் முக்கியம் ஆகும். அத்தகையதொரு இயக்கத்தின் உருவாக்கமானது அமைதியை விரும்பும் ரஷ்ய மற்றும் உக்ரைன் மக்களுடன் ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்துவதோடு, சுதந்திரமான வளர்ச்சிக்கான அவர்களது உரிமையைப் பாதுகாக்கும்.

**உக்ரைனைப் பண்டோராமயமாக்கும் தொடர்ச்சியான முயற்சிகளின் விளைவுகளை நிர்மூலமாக்குவதில் இருந்து ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி அதன் செயல்பாடுகளைத் தொடருகிறது. அந்தப் பிரதேசத்தின் கொள்கை கள் வெறித்தனம் கொண்ட தேசியவாதிகளின் சர்வாதிகாரத்தால் பல வழிகளிலும் உருவாக்கப் படுகின்றன.**



அவர்கள் உக் ரைன் மக்களை அச்சுறுத்துவதோடு, ஒரு மூர்க்கத்தனமான அரசியல் வளர்ச்சிப் போக்கை ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் மீது திணிக்கிறார்கள். இத்தகைய அழுத் தங்களுக்கு அடிபணிந்த செலன்ஸ்கி, டான்பாஸ் பகுதியில் அமைதி மற்றும் ரஷ்யாவுடன் இணக்கமான நல்லுறவைப் பேணும் அதிபராகத் திகழ்வார் என்ற நம்பிக்கையில் அவரைத் தேர்ந்தெடுத்த சக குடிமக்களின் நலன்களுக்குத் துரோகம் இழைத்துவிட்டார்.

டான்பாஸ் பகுதி மக்களைப் பாதுகாத்திட வேண்டும் என்ற நிலைப்பாட்டை ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சி மேற் கொண்டிருக்கும் இந்தச் சூழலில், டானெட்ஸ்க் மற்றும் லுகான்ஸ்க் மாகாணங்களின் அப்பாவி மக்களுக்கும், அகதிகளுக்கும் அனைத்துவித உதவிகளையும் வழங்க வேண்டியது அவசியமாகிறது. எனவே, அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும், ஆதரவையும் வழங்குமாறு ரஷ்ய மக்களுக்கு அறைகூவல் விடுக்கிறோம்.

வன்முறைக் கிளர்ச்சியாளர்களை அமைதிப் பாதைக் குத் திரும்பச் செய்வதும், நேட்டோ அமைப்பின் ஆக்கி ரமிப்புப் போக்கை கட்டுப்படுத்துவதும் காலத்தின் கட்டாயம் ஆகும்.

இராணுவம் மற்றும் நாஜிக்களின் அச்சு றுத்தலை ஒழிப்பதன் மூலமே ரஷ்யா, உக்ரைன் மற்றும் இதர ஐரோப்பிய நாடுகளில் மக்களின் பாதுகாப்பை நிரந்தரமாக உறுதி செய்திட இயலும். பாசிசத் தின் எழுச்சியைத் தடுப்பதிலும், அமைதியைப் பேணுவதிலும் மனிதநேய அடிப்படையிலான ஒத்துழைப்பு மற்றும் மக்கள் இயக்கங்களின் வழிமுறைகளைப் பரந்த அளவில் நாம் மேற் கொள்ள வேண்டியது அவசியம் என்று நாம் கருதுகிறோம்.

அமைதியை உறுதிப்படுத்துவது, சமுதாய முன்னேற்றம், சமூக நீதி மற்றும் சோஷலிசப் பாதையில் ஆக்கத்திறன் கொண்ட முயற்சி மற்றும் மேம்பாடு என்பதே ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடு ஆகும்.

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

**மலர்** 84 **இதழ்** 48

# உக்ரைன் போர் நடுவில் எம் இந்தியர் அழுத சொல்!

21 வயது இந்திய மாணவர் நவீன், மார்ச் 1ஆம் தேதி காலை உக்ரைன் நாட்டின் கார்கீவ் நகரில் உணவு வாங்குவதற்காக வரிசையில் நின்ற போது குண்டு வெடித்ததில் இறந்து விட்டார். பிணவறையில் இருக்கும் அவரது உடலை வாங்குவதற்கும் ஆளில்லாத அவலம்.

16 ஆயிரத்துக்கும் அதிகமான இந்தியர்கள், படிப்பதற்கும் பணிபுரிவதற்கும் உக்ரைன் நாட்டில் வாழ்கிறார்கள். போர் தொடங்கிய பின்பு சுற்றிலும் வெடிச்சத்தம். கட்டிடங்களின் நிலவறைகள், மெட்ரோ சுரங்க வழிகள், பதுங்கு குழிகளில் உயிர் பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். உணவும், தண்ணீரும் அருகி வருகின்றன; வெகுவிரைவில் கிடைக்காமல் போய்விடும்.

அவர்களது கண் முன்னால், மற்ற நாடுகளைச் சார்ந்த மாணவர்களும் பணியாளர்களும் அந்தந்த நாடுகளால் வெளியேற்றப்பட்டு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். இந்திய மாணவர்கள் சமூக ஊடகங்களில் கதறுகிறார்கள். டாட்டாவின் ஏர் இந்தியா விமானங்கள் ஒன்பது முறை சென்று, ருமேனியா எல்லையை ஒட்டியுள்ள சௌர்னிவ்ட்சி என்ற நகரில் உள்ள இந்தியர்களை அழைத்து வந்திருக்கின்றன. அங்கு போர் நடக்கவில்லை. போரின் நடுவே இருக்கும் கீவ், கார்கீவ் நகரங்களிலிருந்து மாணவர்களைக் கொண்டு வர முயற்சியில்லை.

ரயில் அல்லது வண்டிகள் பிடித்து அடுத்த நாட்டுக்கு வந்துவிடுமாறு இந்திய அதிகாரி ட்வீட் செய்திருக்கிறார். வரும்போது அமெரிக்க டாலர்கள், கோவிட் தடுப்பூசி போட்டதற்கான சான்றிதழ் எடுத்துக்கொண்டும், இந்திய தேசியக் கொடியை பதித்துக் கொண்டும் வரவேண்டுமாம். எங்கு போனாலும் ஆணைகளிட்டு பழகிய அதிகாரவர்க்க ஆணவம், குண்டு வெடித்து உயிர் போகுமா, உணவின்றி உயிர் போகுமா என்ற அச்சத்தில் ஓடி வருபவர்களிடமும் நிபந்தனை விதிக்கிறது.

தாங்கள் ரயில்களில் இருந்து தாக்கப்படுவதாகவும், ரயில்களில் இருந்து தூக்கி எறியப்படுவதாகவும் மாணவர்கள் தெரிவிக்கிறார்கள். உக்ரைனியர்களே, இந்தியரைக் கத்தியால் குத்திக் கொலை செய்வதாகவும் செய்தி வந்திருக்கிறது. அடுத்த நாட்டு எல்லைக்கு அவர்கள் வருவதெப்படி?

இந்திய அரசிடம் பயணிகள் விமானம் எதுவும் இல்லை. 144 விமானங்களை டாடாவிடம் தூக்கிக் கொடுத்து விட்டு, இப்போது கெஞ்சுகிற கொடுமை!

மோடி, கடந்த பிப்ரவரி 22ஆம் தேதி பேசும்போது இந்தியாவில் ‘ஒரு இந்தியா, ஒரே உடல்நலம்‘ என்ற திட்டத்தைக் கொண்டு வரப் போகிறோம். இந்தியாவில் ஏராளமான மருத்துவ கல்லூரிகளைத் தொடங்க தனியார் நிறுவனங்கள் முன்வர வேண்டும். நல்ல கொள்கைகளை மாநில அரசுகள் வகுத்து, தனியாருக்கு தேவைப்படும் அளவுக்கு நிலங்களை ஒதுக்கித் தரவேண்டும் என்று அறிவித்திருக்கிறார்.

தொடர்ந்து, கோவிட்19 தடுப்பூசியை மிகச் சிறந்த முறையில் போட்டதற்காக இந்திய மருத்துவத் துறையை மோடி பாராட்டியிருக்கிறார். அரசு பொது மருத்துவமனைகள் 93 சதவிகித தடுப்பூசிகளைச் செலுத்தின.

தனியார்கள் போட்டதெல்லாம் வெறும் 7 சதவிகிதம்தான்.

அப்பட்டமான இந்த உண்மையை மூடி மறைத்து, பொத்தாம் பொதுவாகப் பாராட்டி, மருத்துவக் கல்வியையும், மருத்துவமனைகளையும் தனியாரிடம் கொடுப்பதிலேயே கண்ணாக இருக்கிறார் மோடி. பாரதிய ஜனதாவுக்கு கார்ப்பரேட் நலன்கள் மட்டுமே முக்கியமே தவிர மக்கள் நலன் அல்ல.

லட்சக்கணக்கான ரூபாய் விமானப் பயணத்திற்காக செலவிட்டு, புரியாத மொழியில் பேசுகிற நாடுகளில் போய் மருத்துவம் படிக்க வேண்டிய துயரம் இந்திய மாணவர்களுக்கு ஏன் நேர்ந்திருக்கிறது? இங்கு தனியார் ‘கல்வி வள்ளல்கள்’ வாங்குகிற கட்டணம் அவ்வளவு அதிகம்! அரசு கல்லூரிகளில் அனுமதிக்கப்படும் வழியையும் இப்போது நீட் போட்டு தடுத்து விட்டார்கள். ஆனால் உக்ரைன், சீனா போன்ற நாடுகளில் நீட்தேர்வு இல்லாமலேயே எளிதில் மருத்துவப் படிப்பில் சேர்ந்து, இங்கு ஆகும் செலவை விடக் குறைவான கட்டணத்தில் படிக்க முடியும்; திரும்பி இந்தியாவில் வந்து மறுபடியும் கட்டணம் கட்டி மருத்துவம் செய்வதற்கான உரிமத்தைப் பெற முடியும்.

நமது இளம் மாணவர்களை இப்படிப்பட்ட அவசியமற்ற துயரங்களில் ஆழ்த்துவதைப்பற்றி மோடி அரசுக்கு கொஞ்சமும் கூச்சம் இல்லை;


வெங்காயப் புகழ் நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், “அவர்கள் ஏன் நமது நாட்டை விட்டு அங்கு சென்று படிக்கிறார்கள். நான் அவர்களை தோளில் தூக்கிக் கொண்டா வரமுடியும்“ என்று பொரிந்து கொட்டியிருக்கிறார்.

வெட்கமற்ற இந்த அரசை எதிர்த்து மக்கள், களத்துக்கு வந்தாக வேண்டும்!

NEWAGE
Central Organ of the Communist Party of India
WEEKLY

**தலையங்கம்**
(பிப். 27 - மார்ச். 05)

# வேலைவாய்ப்புகள் இல்லாத வளர்ச்சி



**இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம் (CMIE) பிப்ரவரி 21ல் வெளியிட்ட அறிக்கையின்படி இவ்வாண்டின் இரண்டாவது மாதத்திலேயே நாட்டின் வேலையில்லா விகிதம் பெரிய அளவில் தாவிக் குதித்து 7.89ஆக எகிறியுள்ளது. இது வெறும் புள்ளிவிபரம் மட்டுமே, எதார்த்தம் இன்னும் இருளடைந்து கொடுமையானது.**

அநேகமாக இளைஞர்கள், அவர்களில் இளமையைக் கடந்தவர்களின் நிலையைத் தனியே குறிப்பிடத் தேவையில்லை, அனைவருமே ஏதாவது ஒரு வேலை எந்த மட்டத்தில் இருந்தாலும் சரி கிடைக்காதா என்ற சவாலைச் சந்திக்கின்றனர். முன்இளமை பதின் பருவத்தினர் வாழ்வையும் அவநம்பிக்கை சூழ்ந்துள்ளது. நடுத்தர, அடித்தட்டு மக்கள் பிரிவினர் முழுமைக்கும் வாழ்க்கை என்பது அடைய முடியாத வாழ்வாதாரத்திற்கான வழிகளைத் தேடியலைதல் என வரையறுக்கப்பட்டுள்ளது.

இச்சூழ்நிலையில் இவ்வாண்டு நிதிநிலை அறிக்கை அடுத்த ஐந்தாண்டுகளில் 60 லட்சம் வேலை களை உருவாக்குவதாக மார்தட்டுகிறது; கடந்த ஆண்டுகளிலும் கொட்டி முழக்கியது எப்போதும் தரிசு நிலமாகத் தோன்றியதைப்போல, இதுவும் ஒரு நீண்டகாலக் கனவு. இந்த உறுதிமொழி பொருளாதாரத்தைச் சிறிதாவது மீட்க எண்ணினாலும், அதற்கு மாறாக பங்குவிற்பனைகளை வலிமைப்படுத்தியும், முதலீடுகளை அதிகரிக்காதது மூலமாகவும் பொருளாதார நிகழ்முறைகள் நடத்தப்படுகின்றன. இதனால் பல தரப்புகளிலும் பன்முக நெருக்கடிகள் விளைகின்றன.

அதன் ஓர் உதாரணம்தான், சூரிய மின் உற்பத்தித் திறனில் உத்தரப்பிரதேசம் 2022ல் பிற மாநிலங்களைவிட பின்தங்கியுள்ளது என்பது. எரிசக்தி பொருளாதாரம் மற்றும் நிதிசார் ஆய்வு நிறுவனத்தின்படி, உபியின் 10.7 கிகா வாட்ஸ் மின்உற்பத்தி திட்டஇலக்கு இந்திய மாநிலங்களின் இரண்டாவது பெரிய திட்டம். ஆனால் உபியின் மந்தமான எரிசக்தி உற்பத்தியானது மாற்று எரிசக்தி துறையில் 2022ல் இந்திய நாட்டின் உற்பத்தி திட்டஇலக்குத் திறன் 175 கிகா வாட்ஸ் என்பதை அடைவதில் பாதிப்பை ஏற்படுத்தும் என அந்நிறுவனம் மேலும் சுட்டிக்காட்டியது.

2022க்குள் உபி 14.1 கிகா வாட்ஸ் திறன் மாற்று எரிசக்தி உற்பத்தியைத் தொடங்குவது என்பது திட்டம்; ஆனால் அக்டோபர் 2021 வரை அம்மாநிலம் 4.3 கிகா வாட்ஸ் திறனுக்கான, அதாவது திட்ட இலக்கில் வெறும் 30 சதவீத, கட்டமைப்புகளையே நிறுவியுள்ளது. உபி திட்ட இலக்கைச் சாதிப்பதில் ஏராளமானவற்றை இழந்து வெறும் 19 சதவீதம் மட்டுமே முடித்திருப்பதால், இழப்பைச் சரிகட்டி 10.7 கிகா வாட்ஸ் திறன் இலக்கை எட்ட இன்னும் செய்ய வேண்டியது மிக மிக அதிகம் என மின்சாரக் கொள்கை ஆய்வாளர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். இந்தியாவின் மாற்று எரிசக்தி தேவையில் பத்தில் ஒரு பங்கு உபியின் பொறுப்பு என்பதால், அம்மாநிலம் சோர்ந்து தள்ளாடி நடக்க வேண்டிய தூரம் இன்னும் எவ்வளவோ அதிகம். இந்நிலையில், எதார்த்தத்தில் பொதுத் துறை நிறுவனங்களின்பால் அடி ஆழத்தில் அரசிடம் குடிகொண்டிருப்பது திவால் மற்றும் கடமை தவறுவதே ஆகும்.

பொதுத்துறை நிறுவனங்கள் தேய்ந்து போதலைச் சந்திப்பதும் வேலைவாய்ப்புகள் எப்படிச் சுருங்குகின்றன என்பதும் மற்றுமொரு உதாரணம். நிதி பற்றாக்குறை மற்றும் முன்முயற்சிகள் எடுப்பது குறைவதால் அவை மேலும் தலைகுப்புறச் சரிந்து தனியார்மய நடவடிக்கைகள் தொடர்கின்றன. வங்கி ஊழியர்களின் பேரமைப்பான ஏஐபிஇஏ மற்றும் ஒன்றிய நிதியமைச்சர் இடையே டிசம்பர் 15ல் நடைபெற்ற சமாதான பேச்சுவார்த்தையில், “வாங்கிய கடனை வேண்டுமென்றே திரும்பக் கட்டத் தவறும் கார்ப்பரேட் நிறுவனங்களால் பொதுத் துறை வங்கிகள் நெருக்கடிக்கு இழுத்து வரப்பட்டுள்ளன” என்பது சுட்டிக் காட்டப்பட்டது.

செயல்படாத சொத்துகள் மலைபோல் குவிந்து போவதில் மிகப் பெரும் பங்கு கார்ப்ரேட் நிறுவனங்களைச் சார்ந்தது என்பது அப்பட்டமாகக் கண்ணை உறுத்தும் உண்மையாகும். வட்டியும் அசலும் இரண்டும் திரும்பச் செலுத்தப்படாத இத்தகைய கடன்கள் வேறுவழியின்றி ரத்து செய்யப்படும். இந்நாட்டின் மக்களை ஏமாற்றியது வங்கிகள் தேசியமயம் அல்ல; மாறாக வேண்டுமென்றே கடனைத் திரும்பச் செலுத்தாத கார்ப்பரேட்டுகள் மற்றும் பெரும் வணிகக் குழுமங்களே வங்கிகளை நெருக்கடியில் ஆழ்த்தின என்பது தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமின்றி அவை தேசப் பொருளாதாரத்தையும் முச்சந்தியில் இழுத்து வந்து நெருக்கடியில் தள்ளியுள்ளன.

தனியார்மயத்தை நோக்கி எடுக்கப்படும் ஒவ்வொரு நடவடிக்கையும் நாட்டை மேலும் ஏழ்மையிலும் பற்றாக்குறையிலும் ஆழ்த்தி, வேலைகளைப் பறித்து, அப்படிப் பறிக்கப்பட்ட வேலைகளை மீண்டும் பெறுவதற்கான வாய்ப்புகளையும் அகற்றிவிடுகிறது. இதனோடுகூட நாட்டு மக்கள் தேசத்தைக் கட்டுவதற்காக வரி மூலம் அளிக்கும் பணமும் இழக்கப்படுகிறது. மக்களின் கடும் உழைப்பால் அளித்த செல்வத்தை அரசு அபகரிப்பது குறித்து அரசிடம் எந்தக் கணக்கும் இல்லை, பொறுப்புணர்வும் இல்லை. குறைந்தபட்சம் இந்நிகழ்முறையில் அடங்கியுள்ள ஒட்டுமொத்தமான நடவடிக்கைகள் பற்றிய வெள்ளை அறிக்கையை மக்கள் முன் சமர்ப்பிக்க வேண்டும் என்ற பொறுப்பை அரசு நிறைவேற்றலாம்.

ஆனால் பங்குவிற்பனை வெகு சாதாரணமாகி ஏறத்தாழ அதுவே இக்காலத்தின் நாள்தோறும் நிகழும் நடவடிக்கையானது. நமது வாழ்வின் தேவைகளை நிறைவேற்றும் அடிப்படையான தொழில்துறை உற்பத்திப் பிரிவுகளான உருக்கு, நிலக்கரி, எரிசக்தி, தண்ணீர், எரிபொருள், உணவு, மருந்து போன்றவை விற்பனைக்காக என்று காட்சிப்படுத்தப்பட்டுள்ளன அட, விற்கிறார்களே, நல்ல விலை கிடைக்குமா என்றால், அதுவும்கூட அப்பிரிவுகளை வாங்கும் கார்ப்பரேட் நிறு வனங்கள் திருப்தி அடையும் வகையில், அவர்கள் ஏற்கும் விலைக்கு, விற்கிறார்கள்; மேலும் அத்தொழில்பிரிவுகளில் புதிய முன்னெடுப்புகளைத் தொடங்க முதலீடு செய்வதற்கு ஆர்வமற்ற அவர்களின் ஒரே நோக்கம் நிதிமயமாக்கல் அதுவே மூலதன உருவாக்கத்தின் புதிய கட்டம்: உற்பத்தியில் ஈடுபடாமல் லாபத்தைக் குவித்தல். நிதிமயமாக்கல், புதிய உலகப் பொருளாதார ஒழுங்குமுறையில் சேர்ந்து தேசத்தைக் கட்டியெழுப்பும் நிகழ்முறையில் எவையெல்லாம் மீதம் விட்டு வைக்கப்பட்டனவோ அவற்றையும்கூட நாசமாக்குகிறது. நம்முடைய சாதனைகளின் அடையாளமாக உயர்ந்தோங்கி நிற்கும் கோபுரங்கள், ஒன்றன்பின் ஒன்றாய் வீழ்கின்றன, வேலைவாய்ப்புகள் மறைகின்றன. பொது மக்கள் வாழ்க்கையைப் பசி, கொள்ளை நோய் மற்றும் இருள் பெருகிச் சூழ்கிறது.

இருப்பினும் எல்லாவற்றையும் இழந்துவிடவில்லை. நாம் நம்பிக்கை கொள்வதற்குக் காரணங்கள் உள்ளன. வாழ்க்கை நடத்திச் செல்ல எவ்வளவு கடினமான வேலை கிடைத்தாலும் அதைத் தேர்வு செய்து ஏற்க பெண்கள் தயாராகிவிட்டார்கள். ‘இப்பணிகள் பெண்களுக்கானது அல்ல’ என இதுவரை அனுமதிக்கப்படாத பணிகளையும் செய்வதற்குத் தற்போது பெண்கள் துணிந்துவிட்டார்கள். அந்த வகையில் இதுவரை பெண்கள் அனுமதிக்கப்படாத நிலக்கரி சுரங்கங்களில் இப்போது பெண்கள் பணியாற்றுவது மட்டுமின்றி வெடி வைத்துத் தகர்க்கும் குழுக்களிலும் சேர்ந்துள்ளனர்!

‘பெண்கள் இப்படித்தான் இருக்க வேண்டும்’ என்ற ஸ்டீரியோடைப் கட்டுக்களை தூக்கி எறிந்து சவால்களை ஏற்கின்றனர். ஒடிஷா மாநிலத்தின் பல்ராம் திறந்தவெளி புராஜெக்டில் இங்குலா சுரங்கப்பகுதியில் பதினைந்து பெண்கள் வெடி வைக்கும் குழுவில் இடம் பெற்றுள்ளனர். ஒவ்வொரு நாளும் 12 முதல் 15 டன் வெடிமருந்துகளைக் கட்டுப்படுத்தி இயக்கி வெடிக்கும் மிக முக்கியமான பணியை ஆற்றி வருகின்றனர். இவ்வேலையின் ஆபத்துகளும் கஷ்டங்களும் இப்பணிகளை ஏற்பதிலிருந்து பெண்களைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. பல்ராம் நிலக்கரி உற்பத்திப் பிரிவில் ஆண்டுக்கு 60 லட்சம் டன்கள் நிலக்கரி வெட்டி எடுக்கப்படுகிறது என்பது ஒன்றே புதிய விடியலை நோக்கிய மறுக்க முடியாத நம்பிக்கையைப் பறைசாற்றுகிறது.

*(மார்ச் 8 சர்வதேசப் பெண்கள் தினம் கொண்டாட செம்மாந்து விழா எடுப்போம்!)*

தமிழில்: நீலகண்டன்,



எஸ். தோதாத்ரி


**சோசலிசக் கருத்துக்கள் காலம் காலமாக இருந்து வந்துள்ளன. பொதுவாக தனி உடமை தோன்றிய பின்னர் அதன் நெருக்கடிகளைக் கண்ட பலர் எல்லோரும் சமமாக இருக்க வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தனர்.**

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற சங்கப்பாடல் சமுதாயத்தில் அசமத்துவ நிலை தோன்றிய காலத்தில் எழுத்திருக்க வேண்டும்.

## தத்துவார்த்தம் 19

"எல்லோரும் எல்லாப் பெரும் செல்வமும் எய்தலாலே இல்லாரும் இல்லை உடையார்களும் இல்லை மாதோ !" என்று கம்பன் கூறுவது சமத்துவக் கருத்தாகும். "எல்லாரும் எல்லாமும் பெற வேண்டும் – இங்கு இல்லாமை இல்லாத நிலை வேண்டும்" என்று கண்ணதாசன் இதனை தற்காலத்திற்கு ஏற்றபடி கூறினார். ஆனால் இவை எல்லாம் விஞ்ஞான சோசலிசம் ஆகிவிடுமா என்பது கேள்வி. இதற்கு சரியான விடை அளித்தவர்கள் மார்க்சும், எங்கெல்சும் ஆவர். "கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையின்" நான்காவது பிரிவில் மார்க்ஸ் பலவகை சோசலிசம் பற்றிக் கூறுகிறார். ஏங்கல்ஸ் அவருடைய கற்பனாவாத சோஷலிசமும், விஞ்ஞான சோஷலிசமும் என்ற நீண்ட கட்டுரையில் இந்த இரண்டையும் வேறுபடுத்திக் காட்டுகிறார். மார்க்சின் காலத்திற்கும், அவருக்கு முந்திய காலத்திலும் இருந்த பல சோசலிசவாதிகளின் பெயர்களை மட்டும் இங்கு குறிப்பிடுவோம். அவர்கள் பூரியர், சின்மோண்டி, ஒவன், புருதான், தாமஸ் மூர் போன்ற பலர் ஆவர். இவர்களில் பிரெஞ்சுக்காரர்களும் உண்டு, ஆங்கிலேயர்களும் உண்டு. இவர்கள் அனைவரும் இருபெரும் புரட்சிகளின் தாக்கத்தினால் தங்கள் கருத்துக்களை உருவாக்கினர்.

# விஞ்ஞான சோசலிசம்



## வரலாற்றுப் பொருள்முதல்வாதம் 7

இவர்கள் ஐரோப்பாவில் தோன்றிய மறுமலர்ச்சியின் தாக்கத்துக்கு உள்ளானவர்கள். இங்கிலாந்தில் இடம்பெற்ற தொழில் புரட்சி முதலாளித்துவத்தை விரைவாக வளர்த்தது. இதனால் வர்க்க முரண்பாடுகள் தீவிரமடைந்தன. பிரான்ஸ் சற்று பின்தங்கிய நாடு. அங்கு பிரெஞ்சுப் புரட்சியானது நிலவுடமை சக்திகளை அழித்தது. அதற்கு எதிராக ஒரு பெரிய சிந்தனைப் புரட்சியை ஏற்படுத்தியது. இதன் விளைவாகத் தோன்றிய அறிவாளிகள் தாம் நாம் மேலே குறிப்பிட்டவர்கள். இவர்கள் சமூக முரண்பாடுகளைக் கண்டு ஒரு மாற்று அமைப்பு பற்றி சிந்தித்தனர். இதன் விளைவாகத்தான் இவர்கள் சமதர்மம் பற்றி பேசினர். இதனை கற்பனாவாத சோஷலிசம் என்று மார்க்ஸ் அழைக்கிறார்.

மார்க்ஸ் அவருடைய கம்யூனிஸ்ட் அறிக்கையில் கடைசிப் பகுதியில் இதனை வகைப்படுத்துகிறார். அவர் முதலில் கூறுவது பொய்யான அல்லது நிலப்பிரபுத்துவ சோசலிசம் என்பது.

**உரிமைகள் இழந்த நிலப்பிரபுத்துவத்தினர் கற்பனா ரீதியாக பூர்ஷ்வாக்களுக்கு எதிராக போராடத் தொடங்கினர். இவர்கள் பழங்காலத்தைப் பற்றிப் பேசினர். உழைக்கும் வர்க்கத்தை தங்கள் பக்கம் ஈர்ப்பதற்காக சமத்துவக் கருத்துக்களைப் பேசினர். பூர்ஷ்வாக்களை கேலி செய்தனர். இவர்களுடன் பூசாரிகளும் சேர்ந்துகொண்டனர்.**

கிருத்து வத்தில் சோசலிசம் உள்ளது என்று கூறினர். கிருத்துவம் எளிமை, துறவரம், சமத்துவம் ஆகியன பேசுகிறது என்று கூறினர். இது கிருத் துவ சோசலிசம் எனப்படுகிறது. மதத்தை இணைத்து சோச லிசம் பேசுவது எளிதான, கேவலமான செயல் என்று மார்க்ஸ் கூறு கிறார். இந்த வகைக்கு நிலப்பிரபுத்துவ சோசலிசம் என்ற பெயர்.

அடுத்தது குட்டிபூர்ஷ்வா சோசலிசம். இத்தகைய கருத்தை விரிவாக்கியவர் சிஸ்மோண்டி என்பவர். அக்காலத்தில் பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளில் பூர்ஷ்வாக்கள், பாட்டாளிகள் ஆகியோர் வேகமாக வளர்ந்தனர். இவர்களுக்கு நடுவில் மற்றொரு வர்க்கமும் உருவாயிற்று. இது குட்டி பூர்ஷ்வா வர்க்கம் எனப்பட்டது. இவர்களில் கிராமப்புற விவசாயிகளும் உண்டு. நகர்ப்புற சிறு உடமையாளர்களும் உண்டு. இவர்களுக்கு இரண்டு முகங்கள் உண்டு. முதலாளிகள் போலவும், பாட்டாளிகள் போலவும் இருப்பார்கள். இவர்கள் ஊசலாட்டம் மிகுந்தவர்கள். இவர்கள் முன்வைத்த சோசலிசத்தை மார்க்ஸ் குட்டி பூர்ஷ்வா சோசலிசம் என்று அழைக்கிறார். இவர்கள் முதலாளித்துவ அமைப்பு, வேலைப்பிரிவினை, பணப் பெருக்கம், சுரண்டல் ஆகியவற்றை கடுமையாக விமர்சனம் செய்தார்கள். அந்த அளவிற்கு இவர்கள் முற்போக்கானவர்கள். ஆனால் இதற்கு மாற்று அமைப்பாக பழைய உற்பத்திமுறை வேண்டும், பழைய தொழில்முறை வேண்டும் என்று கூறினார்கள். இது வேகமாக வளர்ந்து வரும் உற்பத்தி சக்திகளை பழமைக்குள் சிறைவைக்கும் முயற்சியாகும். இது இவர்களது பிற்போக்கு ஆகும்.

மற்றொரு வகை சோசலிசம் பூர்ஷ்வா சோசலிசம். இதன் நோக்கம் பூர்ஷ்வா வர்க்கம் நிலைத்திருக்க வேண்டும். இதற்காக பல மனிதநேய நடவடிக்கைகளை இவர்கள் முன்வைத்தனர். இதில் மனிதநேயவாசிகள், சீர்திருத்தவாதிகள், விலங்குகளுக்கு இன்னல் கொடுப்பதை எதிர்ப்பவர்கள் ஆகியோர் அடங்குவர். இதற்கு சிறந்த உதாரணம் பூர்தான் ஆவார். இதன் சாராம்சமான கருத்த பூர்ஷ்வா அமைப்பு இருக்க வேண்டும், உழைக்கும் வர்க்கத்திற்கு நன்மைகள் வேண்டும், புரட்சி என்பது கூடாது. இருக்கும் அமைப்பை மாற்றாமலேயே எல்லா நன்மையும் பெறவேண்டும். இவர்கள் பல சீர்திருத்தங்களை முன்வைத்தனர்.

இந்த வகை சோசலிசத்தில் கற்பனைகள் அதிகம். அறிவுபூர்வமான சமுதாயத்தை மாற்ற முடியும், சீர்திருத்த முடியும் என்ற போக்கு இருந்தது. எல்லா மனிதனையும் சமமாக பார்க்கும் மனிதநேயம் இருந்தது. ஆனால் பழமை நோக்கும் இருந்தது. இதன் விளைவாக இது தோல்வியே கண்டது.

இதிலிருந்து வேறுபட்டது விஞ்ஞான சோசலிசம். இதனை உருவாக்கியவர்கள் மார்க்சும், ஏங்கெல்சும். இதில் பாட்டாளி வர்க்க சார்பு என்பது முக்கியமானது. வர்க்கப் போராட்டத்தின் மூலம்தான் சோசலிசத்தை அடைய முடியும் என்ற கருத்து இதில் உள்ளது. உபரி மதிப்பின் மூலம் முதலாளிகள் அடையும் லாபத்தை தடுக்க முதலாளித்துவம் ஒழிக்கப்படவேண்டும் என்று இது கூறுகிறது. இதற்கு உரிய பாதை பாட்டாளி வர்க்கத்தின் தலைமையிலான புரட்சி ஆகும்.

தொடர்புக்கு: 98947 83657

---

>> 01ம் பக்கத் தொடர்ச்சி

உங்களில் ஒருவனான எனது அனுபவங்களில் சிலவற்றை இந்தச் சமுதாயத்துக்குச் சொல்லியாக வேண்டும் என்ற கடமையின் காரணமாக அவ்வப்போது சிறுசிறு பகுதிகளாக நான் எழுதிய பதிவுகளின் தொகுப்புதான் இந்தப் புத்தகம் !

எனது இருபத்து மூன்று வயதுவரையிலான வாழ்க்கைதான் இந்தப் புத்தகம்.

1976 ஆம் ஆண்டு பிப்ரவரி 1 அன்று மிசாசட்டத்தின் படி நான் கைது செய்யப்பட்டு சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டேன். இதற்கு இடைப்பட்ட ஆண்டுகளில் நடந்த வரலாற்றுச் சுவடுகள்தான் இந்தப்புத்தகம்.

நான் தனி மனிதனல்ல ! ஒரு கொள்கைக் கூட்டம் !

இந்தப் புத்தகத்தில் நான் மட்டுமல்ல, நூற்றுக்கணக்கான மனிதர்களின் முகங்களை நீங்கள் பார்க்கலாம். நினைவில் இருக்கும் பெயர்களைத்தான் குறிப்பிட்டுள்ளேன். என்னோடு பயணப்பட்ட மனிதர்கள், எனக்குத் துணையாக வந்தவர் கூட்டம் பெரியது. நான் தனிமனிதனல்ல ஒருகூட்டம் என்பதை இதன் மூலம் நீங்கள் அறியலாம். இது கொள்கைக் கூட்டம் என்பதையும் அறியலாம்.

திராவிட இயல் கோட்டை – இந்தியா முழுவதும் கொண்டு செல்வோம் !

அனைத்து தேசிய இனங்களுக்கும் சரிநிகர் உரிமை தரப்பட வேண்டும் என்பதுதான் திராவிடவியல் கோட்பாடு. இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியம் ஆகும். அதைத்தான் அரசியல் அமைப்புச் சட்டமும் சொல்கிறது. அனைத்து மாநிலங்களும் அதிக அதிகாரம் கொண்ட சுயாட்சித்தன்மை கொண்டதாக இருக்கவேண்டும். இந்த மாநிலங்களின் ஒன்றியமான இந்திய அரசானது கூட்டாட்சி முறைப்படி செயல்பட வேண்டும் என்பதுதான் திராவிடவியல் கோட்பாடு. இந்த திராவிடவியல் கோட்பாட்டை, தமிழகத்தில் மட்டுமல்ல; இந்தியா முழுமைக்கும் எடுத்துச் செல்ல வேண்டும் என்பதற்காகத்தான் ராகுல்காந்தி அவர்களும் –பினராயி விஜயன் அவர்களும்– உமர் அப்துல்லா அவர்களும்– தேஜஸ்வீ அவர்களும்– இங்கே அழைக்கப்பட்டுள்ளார்கள்.

கூட்டாட்சி குறித்த ராகுலின் பேச்சைப் பாராட்டுகிறேன் !

கூட்டாட்சித் தத்துவத்தின் நெறிமுறைகள் குறித்து சகோதரர் ராகுல்காந்தி அவர்கள் அதிகம் பேசத் தொடங்கி இருப்பதற்கு நான் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொண்ட வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்படவேண்டும். அதற்கு அகில இந்தியக் காங்கிரஸ், கம்யூனிஸ்ட் கட்சிகளும் அனைத்து மாநிலக் கட்சிகளும் குரல்கொடுக்க வேண்டும்.

தமிழகத்தின் அரசியல் தலைவர்கள்–அமைச்சர் பெருமக்கள் –எனது நெருங்கிய நண்பர்கள்– கழகத்தின் முன்னணியினர் – கலை உலகத்தைச் சேர்ந்தவர்கள் – சட்டமன்ற உறுப்பினர்கள் –நாடாளுமன்ற உறுப்பினர்கள்– அரசு அலுவலர்கள் – பத்திரிகையாளர்கள் – கழக உடன்பிறப்புகள் என அரங்கம் நிறைந்துள்ளது. உங்கள் அனைவருக்கும் தனித்தனியாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களால் உருவாக்கப்பட்டவன் நான்.

உங்களால் வளர்த்தெடுக்கப்பட்டவன்நான்.


என்றும் உங்களில் ஒருவனே ! என்றும் உங்களில் ஒருவனே ! என்பதைச் சொல்லி விடைபெறுகிறேன் ! நன்றி வணக்கம் !

இவ்வாறு திமுக தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

## எமது எச்சரிக்கை

– கவிஞர் பரிணாமன்



ஆதிக்கப் போரினில் முன்பே தோற்றவர்
மறைமுகப் போரிது !
அட்லாண்டிக் ட்ரீட்டி உக்ரேனுக் கெதற்கு?
அமெரிக்க கேடிது !
போனி யாகாத ஆயுதக் குவியலின்
புகைச்சல் தானி !
பூமியை மிரட்டும் வல்லர சாட்டம்
அல்லாமல் வேறெது?
உலக வளங்களைப் பங்கிட வேஎழும்
கலகப் பூசலிது?
உக்ரேன் மக்களைப் பணயம் வைப்பவர்
சூதன்றி வேறெது?
இயற்கைச் செல்வத்தைக் கொள்ளையடிப்பவர்
இயக்குவ தேயிது...
இட்லர் வீழ்ந்ததை அறிந்தும் அஞ்ஞான
மயக்க மோயிது?
மரண யாபாரம் நிறுத்தப்பட வேண்டும்
நம்புவிக் கோளிது !
மகிழ்ச்சி யாகவே அனைவரும் வாழ்ந்திட
இடந்தான் வேறெது?



# ஹிஜாப் தேவையா?

## பெண்களே முடிவு செய்து கொள்ளட்டும்!





-ஜி.மஞ்சுளா

**இரதயாத்திரை நடத்துதல், ராமர் கோயில் கட்டுதல், பாபர் மசூதி இடிப்பு, குஜராத் இனப்படுகொலைகள் என மதகலவரங்களை உருவாக்கி ஆட்சியதிகாரத்தை பிடிப்பதும், ஆட்சியை தக்க வைத்துக் கொள்வதும் பிஜேபி சங்பரிவார் கும்பலுக்கு வாடிக்கையான ஒன்றுதான். ஆனால் கடந்த 5ஆண்டுகளில் பெண்களை மையப்படுத்தி பிரச்சனையை உருவாக்கி கலவரங்களை தோற்றுவிக்க முயலும் புதிய உத்தியை கையாண்டு வருகிறது சங்பரிவார் கும்பல். முத்தலாக், சபரிமலை தொடங்கி ஹிஜாப் வரை அதை நாம் காண முடியும்.**

கேரளா, சபரிமலை ஐயப்பன் கோயிலில் அனைத்து பெண் களையும், அதாவது 10வயதுக்கு மேல் 50வயது வரையிலான பெண்கள் வரக்கூடாது என்ற தடையை நீக்கி அனைவரையும் அனுமதிக்கலாம் என்று 2018 செப்டம்பர் 28ம் தேதி உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால் தேசிய ஐயப்ப பக்தர்கள் சங்கம், நாயர் சொசைட்டி உள்ளிட்ட அமைப்புகள் பெண்களின் மாதவிடாய் என்பதை காரணமாக கூறி அந்த தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு மனுக்களை தாக்கல் செய்தன.

சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை தொடர்ந்து கேரளாவில் சபரிமலை கர்ம சமிதியின் கீழ் பல்வேறு இந்து அமைப்புகள் இணைந்து மொத்தம் 7 முழுஅடைப்பை கேரளா முழுவதும் நடத்தின. அக்டோபர் துவங்கி ஜனவரி 2019 வரை தொடர்ந்து கலவரங்களை உருவாக்கும் நோக்கில் தொடர்ச்சியாக வன்முறை தீவைப்பு சம்பவங்கள் நடைபெற்றது.

2018,அக்டோபரில் பத்தனம் திட்டாவில் முதல் முழுஅடைப்பு துவங்கியது. அக்டோபர் 18ம் தேதி இரண்டாவது முழுஅடைப்பின் போது மலையாள நடிகர் பாஜக உறுப்பினர் கொல்லம் துளசி சபரிமலை கோயிலுக்குள் நுழையும் பெண்களை பாதியாக கிழிக்க வேண்டும் என வெளிப்படையாகவே கூறினார்.

ஐயப்ப பக்தர்கள் என்ற போர்வையில் ஆர்.எஸ்.எஸ் கும்பல் சபரிமலையில் தங்கி பதட்டத்தை ஏற்படுத்தினர். பக்தர்கள் வேடமிட்டு போராட்டம் செய்ய சபரிமலையில் குவிந்த ஆர்.எஸ்.எஸ். தொண்டர்களை கைது செய்தது இடது முன்னணி அரசு. பக்தர்களின் உரிமையில் கேரள அரசு தலையிடு செய்வதாக ஆர்.எஸ்.எஸ் நாடகமாடியது.

ஆனால் வழக்கு தொடர்ந்தவர்களில் பிரேர்னா என்பரின் கணவர் பாஜகவை சார்ந்தவர் என்ற செய்தி வெளியானபின் தான் பாஜகாவின் இரட்டைமுகம் அம்பலமானது. சபரிமலையில் அனைத்து வயது பெண்களையும் அனுமதிக்க வேண்டும் என கோரி ஆர்.எஸ்.எஸ். மூத்த தலைவர்கள் 2006ம் ஆண்டு உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து ஏன்? என கேள்வி எழுப்பினார் கேரள அமைச்சர் கடகம்பள்ளி சுரேந்திரன்.

வழக்கு தொடர்ந்தவர்களே இப்போது தீர்ப்புக்கு எதிராக போராடுகிறார்கள். பாஜகாவும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பும் அரசியல் ஆதாயத்துக்காக மக்களை குழப்புகிறார்கள் என கூறினார். 2019ல் நடைபெறவிருந்த நாடாளுமன்ற தேர்தலில் தனக்கான அரசியல் ஆதாயத்தை மையப்படுத்தியே சபரிமலை பிரச்சனையை கையாண்டது பாஜக.

அடுத்த வருடம் 2023ல் கர்நாடக சட்டமன்ற தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் ஹிஜாப் பிரச்சனையை தற்போது கையில் எடுத்துள்ளது கர்நாடக பாஜக. கர்நாடக மாநிலம் உடுப்பி மாவட்டம் குந்தாபுரா அரசு பி.யு.கல்லூரியில் 11 மற்றும் 12வகுப்பு இஸ்லாமிய மாணவிகள் ஹிஜாப் அணிந்து வருவதற்கு சென்ற வருடம் 2021 டிசம்பரில் தடை விதிக்கப்பட்டது. டிசம்பர் 31ம் தேதி இதைக் கண்டித்து ஆறு மாணவிகள் தர்ணாவில் ஈடுபட்டனர். ஆனால் கல்லூரி நிர்வாகம் மாணவிகளை நுழைவாயிலில் நிறுத்தியது. இந்த பிரச்சனை அருகிலுள்ள குந்தாப்பூர் கல்லூரிக்கும் பரவியது. அங்கும் ஹிஜாப் அணிந்த மாணவிகள் கல்லூரிக்கு வெளியே நிறுத்தப்பட்டனர். இதைக் கண்டித்து இஸ்லாமிய மாணவர்கள் போராட்டத்தில் இறங்கிய போது இந்து மாணவர்கள் காவித்துண்டை அணிந்து போராட்டம் நடத்தினர்.

ஆளும் பாஜக அரசோ சீருடைவிதிகளை கட்டாயமாக கடைபிடிக்க வேண்டும் என உத்தரவிட்டது. ஆர்.எஸ்.எஸ் சின் மாணவர் அமைப்பான அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத் **(ABVP)** கலவரங்களை உருவாக்கும் நோக்கில் பல இடங்களில் காவி கொடி பிடித்து ஜெய் ஸ்ரீராம் என முழங்கினர்.

ஷிமோகோ பகுதியில் நூற்றுக்கணக்கணக்கான இந்து மாணவர்கள் ஜெய் ஸ்ரீராம் என கோஷமிட்டு தேசியக் கொடி ஏற்றும் கம்பத்தில் காவிக் கொடி ஏற்றும் அளவிற்கு சென்றனர். கர்நாடக அமைச்சர் ஈஸ்வரப்பா ''இங்கு மட்டும் இல்லை. செங்கோட்டையிலும் காவிக் கொடி ஏற்றப்படும்'' என கலவரத்தை தூண்டும் வகையில் பேசினார்.

மண்டியா பகுதியில் கல்லூரிக்கு சென்ற இஸ்லாமிய மாணவி பீவி முஸ்கான் கானை காவிக் கொடி ஏந்தியவர்கள் முற்றுகையிட்டு ஜெய் ஸ்ரீராம் என முழங்கினர். ''ஹிஜாப் அணிவது எங்களின் உரிமை. அரசமைப்பு எங்களுக்கு இந்த உரிமையை வழங்கி இருக்கிறது. ஒரு சிறிய துண்டு துணிக்காக அவர்கள் எங்கள் கல்வியை பறிக்க பார்க்கின்றனர்'' எனக் கூறிய முஸ்கான் தனக்கு எதிராக கோஷம் எழுப்பியவர்கள் பெரும்பாலோனர் வெளி ஆட்கள் என்றும் கூறினார்.

மாணவர்களுக்கு சிலர் காவிக்கொடி, துண்டு, குல்லா ஆகிய வற்றை வினியோகிக்கும் வீடியோக்களும் வெளியாகியது. பாஜக சூரத்திலிருந்து 50லட்சம் காவித்துண்டுகள் இதற்காக வாங்கியதாக குற்றம் சாட்டுகிறார் காங்கிரஸ் தலைவர் டி.கே. சிவக்குமார். திட்டமிட்டு கலவரத்தை தூண்டும் நோக்கில் பாஜக செயல்படுவது ஹிஜாப் பிரச்சனையிலும் அம்பலமாகியுள்ளது.

ஹிஜாப் ஒரு மத அடையாள சின்னம் அதை அணியக்கூடாது என்றால் இந்து பெண்கள் அணியும் குங்குமம், முக்காடு போன்றவை மத அடையாளங்கள் தானே? அதை அணியலாமா? இது குறித்து பாஜக சொல்வது என்ன? திலகம், குங்குமம் ஆகியவற்றை நீக்க மாணவிகளை வற்புறுத்தும் கல்வி நிறுவனங்கள் மீது கடும் நடிவடிக்கை எடுக்கப்படும் என கர்நாடக கல்வித்துறை அமைச்சர் நாகேஷ் அறிவித்துள்ளார்.

எனவே மதஅடையாளங்களோடு அனைத்து மாணவர்களும் கல்விகூடங்களுக்கு வரக்கூடாது என்பதல்ல பிரச்சனை. இஸ்லாமிய மாணவிகள் கல்வி கூடங்களுக்கே வரக்கூடாது என்பது தான் ஆர்.எஸ்.எஸ் பாஜக விரும்புவது. கலவரங்களை உருவாக்குவது உடனடியான தேர்தல் அரசியல் லாபங்களுக்கு மட்டுமல்ல. ஆர்.எஸ்.எஸ்.பாஜக அமைக்க விரும்பும் இந்துராஸ்டிரத்தில் யார் இருக்க வேண்டும் எப்படி இருக்க வேண்டும் என்கின்ற தங்கள் கனவையும் ஒவ்வொரு செயல்பாட்டிலும் அவர்கள் வெளிப்படுத்துகின்றனர்.

''இந்துக்கள் மட்டுமே இந்த மண்ணின் குழந்தைகள். இந்த மண்ணிலே வாழும் பிற மதத்துக்காரர்களை இந்த மண்ணின் குழந்தைகள் என்று சொல்வது இந்துக்களின் பெருந்தன்மையை காட்டுகிறதே தவிர, உண்மை அதுவல்ல. பாரசீகர்களும், யூதர்களும் தங்கள் சொந்த நாட்டில் இருந்து இந்தியாவுக்கு வந்தவர்கள். ஆனால் கிறிஸ்துவர்களும், முஸ்லீம்களும் இந்த நாட்டுக்கு ஆக்கிரமிப்பாளர்களாக வந்தவர்கள். தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட வந்தார்கள். உள்ளூர் மக்களை அடிமைப்படுத்த வந்தார்கள்.''

ஆர்.எஸ்.எஸ்.சின் கொள்கை விளக்க நூலில் கோல்வால்கர் கூறியிருக்கும் கருத்துகள் இவை.

**மதவெறியோடு மக்களை பிளவுபடுத்தும் சங்பரிவார் கும்பலுக்கு எதிராக தங்கள் உரிமையை நிலைநாட்ட வீரத்தோடு இஸ்லாமிய பெண்கள் நிற்கிறார்கள். அரசியல் சாசனம் தந்துள்ள தனிமனித உரிமைக்காக போராடுகிறார்கள்.**

**முக்கியமாக கல்விக்கான தங்கள் உரிமைக்காக போராடுகிறார்கள் என்பதையே முஸ்கானின் வார்த்தைகள் நமக்கு தெளிவுபடுத்துகின்றன. எந்த உடை அவர்களை ஒடுக்குவதாக நாம் கருதுகிறோமோ அதையே ஆயுதமாக ஏந்தி கல்வி கற்கும் வாய்ப்பை அவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்பதே இஸ்லாமிய சமூக பெண்கள் முன்வைக்கும் கருத்தாக உள்ளது.**

''இன்று ஊரின் அத்தனை பெண்களும் கல்வி அறிவு பெறுகிற வாய்ப்பை இந்த பர்தா வழியே பெற்று இருக்கிறார்கள் என்பதே எனக்கு பெரிய விசயமாக இருக்கிறது. பர்தாவோடு இன்று அவர்கள் ஜாமியா மில்யாவிற்குள் நுழைந்திருக்கிறார்கள். கைவிரல் உயர்த்த ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்கள் முதலில் கல்வியை எடுக்கட்டும். தன் காலில் நிற்கட்டும். பிறகு முடிவுகளை எடுக்கட்டும்'' என இஸ்லாம் பெண்களின் யதார்த்த நிலையை பதிவு செய்துள்ளார் கவிஞர் சல்மா.

இந்தியாவில் இஸ்லாமிய பெண்கள் நாட்டில் ஒடுக்கப்பட்ட பட்டியல் சாதி மற்றும் பழங்குடியின பெண்களை காட்டிலும் கல்வியில் பின்தங்கியுள்ளார்கள் என தேசிய புள்ளிவிவர அறிக்கை கூறுகிறது. இத்தகைய சூழலில் இஸ்லாமிய பெண்களின் கல்விக்கான உரிமை போராட்டங்கள் எத்தகைய முக்கியத்துவம் உள்ளது என்பது புலப்படும்.

ஜீன்ஸ் அணிந்ததாலோ, அரைக்கால் சட்டை அணிந்ததாலோ, ஹிஜாப் அணிந்ததாலோ கல்லூரிக்குள் அனுமதிக்கப் படாத மாணவிகளுக்கு நாங்கள் ஆதரவு அளிக்கிறோம், ஆணாதிக்கத்தை எதிர்ப்பதில் ஒவ்வொரு பெண்ணின் வழி என்னவென்பதை அவளே முடிவு செய்துக் கொள்ளட்டும்'' என்ற பெண்கள் அமைப்புகளின் உரத்தக்குரலும், ஒற்றுமையும் இஸ்லாமிய பெண்களை மட்டுமல்ல. அனைத்து பெண்களையும் வீட்டுக்குள் முடக்க நினைக்கும் ஆர்.எஸ்.எஸ் சங்பரிவார் கும்பலின் பெருங்கனவை நிச்சயம் சிதைக்கும்.

தொடர்புக்கு: **9790752080**

## மதம் கடந்த மனிதநேய செயலுக்கு பாராட்டுகள்

கேரள மாநிலத்தின் தலாயி என்ற பகுதியைச் சேர்ந்த சலீம் தன் பெண்ணான ரமீசாவுக்கு மாப்பிள்ளை தேடி வந்தார்.

வந்தவர்கள் அனைவரும் வரதட்சிணை எதிர்பார்க்கவே அவர்களை தட்டிக் கழித்தபடியே இருந்தார். மேலும் பலர் திருமணத்தை ஆடம்பரமாக நடத்த வேண்டும் என்ற கோரிக்கையையும் வைத்தார்கள்.

''நமக்கு என்ன வசதி வாய்ப்பு இல்லையா? ஏன் இப்படி அல்லாடுகிறீர்கள்?''என்று கேட்டார் அவரது மனைவி ரூபினா. ''எல்லாம் காரணமாகத்தான்''என்று சொல்லி வந்தார் சலீம்.

இறுதியாக அவர் எதிர்பார்த்தபடியே ஒரு மாப்பிள்ளை கிடைத்தார். திருமண நாளும் நிச்சயிக்கப்பட்டது.

ரமீசாவின் திருமணத்தின் போது மேலும் ஐந்து பெண்களின் திருமணமும் அதே மேடையில் நடைபெற்றது.

திருமணத்துக்கு வந்திருந்த அனைவரும் இந்தத் திடீர் திருமணங்களைக் கண்டு வியந்து போனார்கள்.

ரமீசாவின் தந்தையான சலீம் ஆரம்ப கட்டத்தில் இருந்தே தனது மகளுக்கு வரதட்சணை வாங்காத ஒரு நபரையே திருமணம் செய்து வைக்க வேண்டும் என்ற முடிவில் உறுதியாக இருந்துள்ளார். மேலும் தனது மகளின் திருமணத்தை எளிமையான முறையில் நிகழ்த்தி, ஆடம்பர திருமணம் நடத்த ஆகும் செலவுக்கான பணத்தைக் கொண்டு பொருளாதாரத்தில் கீழ் உள்ள ஐந்து பெண்களுக்கு திருமணத்தை செய்து வைக்க வேண்டும் எனவும் திட்டமிட்டதாக கூறப்படுகிறது.

இதன்படி கேரள மாநிலம் வயநாடு, எடச்சேரி, கூடலூர், மலப்புரம், மேப்பயூர் பகுதிகளிலுள்ள பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த ஐந்து குடும்பப் பெண்களைத் தேர்வு செய்து அவர்களது திருமண செலவுகளை ஏற்றுக்கொண்டார்.

முனவர் ஷாப் என்பவர் தலைமையில் எளிமையான முறையில் திருமண விழா நடைபெற்றது.

6 பேரில் இரண்டு பேர் இந்து பெண்கள் மற்றும் நால்வர் இஸ்லாமியர்கள்..

அதன்படி இரண்டு திருமணங்கள் இந்து முறைப்படியும் மூன்று திருமணங்கள் இஸ்லாமிய முறைப்படியும் நடந்தன. இதனைத் தொடர்ந்து தன் மகள் உட்பட 6 மணப்பெண்களுக்கும் தலா 10 சவரன் நகையை சலீம் வழங்கினார். 6 பேருமே ஒரே மாதிரியான புடவையை அணிந்திருந்தனர்.

சலீமின் இந்த மதம் கடந்த மனிதநேய செயலுக்கு பாராட்டுகள் குவிந்துள்ளது !

**– அம்ரா பாண்டியன்**



# சங்கே முழங்கு!

## நாட்டைக் காப்போம்! மக்களைக் காப்போம்!



## 2022 மார்ச் 28, 29

# பொது வேலை நிறுத்தம்

## ஆயத்த பணி குறித்த அனைத்து சங்க முடிவுகள்

அகில இந்திய பொது வேலை நிறுத்தம் மார்ச் 28,29 ஆகிய தேதிகளில் நடைபெற இருக்கிறது. கொரோனா மூன் றாவது அலையாலும், ஐந்து மாநில சட்டப்பேரவைத் தேர் தல்களாலும், வேலைநிறுத்த தேதிகளை மாற்ற வேண் டிய கட்டாயம் ஏற்பட்டது. தமிழ்நாட்டிலும் பொங்கல் பண் டிகை, அதனைத் தொடர்ந்த நகர்ப்புற உள்ளாட்சித் தேர் தல்கள் ஆகியவற்றால் பொது வேலைநிறுத்தம் மீதான கவனம் குறைந்துவிட்டது. ஜனவரி 10ஆம் தேதிக்குள் அனைத்து தொழிற்சங்க வேலைநிறுத்த ஆயத்த மாநாடுகள் மாவட்ட அளவில் நடைபெற வேண்டும் என்ற முடிவை மிகப் பெரும்பாலான மாவட்டங்கள் நிறைவேற்றி விட்டன. தேதி மாற்றத்தால் மண்டல மாநாடுகள் நடைபெறவில்லை.

எனவே மீண்டும் முழு கவனத்துடன், மார்ச் 28,29 பொது வேலைநிறுத்த ஆயத்தப் பணிகளை மேற்கொள்வதற்காகத் திட்டமிட அனைத்துத் தொழிற்சங்கங்களின் கூட்டம் பிப். 23 அன்று சென்னையில், தொமுச அலுவலகமான கலை ஞரகத்தில், கி.நடராஜன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் மா.பேச்சிமுத்து,(தொமுச), ஜி. சுகுமாறன் (சிஐடியு), டி.எம்.மூர்த்தி, (ஏஐடியுசி), டி.வி.சேவியர் (ஐஎன்டியூசி), மு.சுப்பிரமணியம் (எச்எம்எஸ்), வி.சிவகுமார், (ஏஐயுடியுசி), ஆர்.சம்பத் (டபிள்யுபிடியுசி) எம்.திருநாவுக்கரசு,(ஏஐசிசிடியூ), ஏ.எஸ்.குமார்(எல்டியுசி) க.பேரறிவாளன் (எல்எல்எஃப்), வெங்கடேசன் (எம்எல்எப்), உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கோரிக்கைகள்:**

- தொழிலாளர் சட்ட தொகுப்புகள் நான்கையும் கைவிடு!
- மின்சார திருத்தச் சட்டத்தைத் திரும்பப் பெறு! விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்று!
- தேசிய பணமாக்கும் கொள்கை உள்ளிட்ட எந்தப் பெயராலும், பொதுத் துறை நிறுவனங்களைத் தனியார் மயமாக்காதே!
- வருமான வரி செலுத்தும் அளவுக்கு வருவாய் இல்லாத குடும் பங்களுக்கு, மாதம் ஒன்றுக்கு 7,500 ரூபாய் வீதம் நிவாரணம் வழங்கு!
- மகாத்மா காந்தி ஊரக வேலைஉறுதி திட்டத்துக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்து! நகரங்களுக்கும் விரிவு படுத்து!
- கட்டுமான, உடலுழைப்பு தொழிலாளர்கள் அனைவருக்கும் விரிவான சமூக பாதுகாப்பு திட்டங்களை அமலாக்கு! ஏற்கனவே இயங்குகிற, மாநில நல வாரியங்களை சீர்குலைக்காதே!
- அங்கன்வாடி, ஆஷா, சத்துணவு மற்றும் இதர திட்ட ஊழியர் களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தையும், சமூகப் பாதுகாப்பையும் உறுதிசெய்!
- கொரோனா பெருந்தொற்றில் பணிபுரிந்த முன் களப் பணியா ளர்களுக்கு உரிய பாதுகாப்பும், காப்பீடு வசதிகளும் வழங்கு!
- விவசாயம், கல்வி, மருத்துவம் மற்றும் அதிஅவசிய மக்கள் பயன்பாட்டுத் துறைகளில் பொது முதலீட்டை அதிகப்படுத்து! செல்வவளம் மிக்கவர்களிடமிருந்து சொத்துவரி வசூலித்து இதற்கான நிதியைத் திரட்டி, தேசிய பொருளாதாரத்திற்கு புத்துயிரூட்டி புனர்நிர்மாணம் செய்!
- பெட்ரோலிய பொருட்கள் மீதான கலால் வரியைக் குறைத்து, அனைத்து பொருட்களின் விலையேற்றத்தைக் கட்டுப்படுத்து!
- காண்ட்ராக்ட் தொழிலாளர்களை நிரந்தரப்படுத்து! அதுவரை சம வேலைக்கு சம ஊதியம் வழங்கு!
- புதிய ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்து, பழைய ஓய்வூதி யத்தை செயல்படுத்து! பிராவிடண்ட் பண்ட் குறைந்தபட்ச ஓய்வூதியத்தை கூடுதலாக்கு!

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்த ஆயத்த இயக்கங்களை சிறப்பாக நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

## தொழில் வளர்ச்சிக்கு முதலீடு இல்லை,

# வேலை இல்லாதவர்களுக்கு சாவதைத் தவிர வேறு வழியில்லை



-டாக்டர் ஞான் பதக்



**மோடி அரசு பணமதிப்பிழப்பை அறிவித்த 2016 நவம்பர் முதல் இந்தியாவில் வேலையின்மை பெரும் பிரச்சனையாகி வருகிறது. அந்த அறிவிப்புக்குப் பிறகு பல லட்சக் கணக்கான தொழில் நிறுவனங்கள் மூடப்பட்டதாலும் பிற நிறுவனங்களில் 25 சதவீத அளவு உற்பத்தி குறைப்பாலும் பல லட்சம் உழைப்பாளி மக்கள் உடனடியாக வேலைஇழந்தனர்.**

2018 தொடக்கத்தில் வேலையின்மை, 45 ஆண்டுகளில் இல்லாத உச்சத்தைத் தொட்டது. இதில் அவலம், வேலை யின்மை நாளுக்கு நாள் மக்களைத் தற்கொலைக்கு அதிகமாகத் தூண்டுகின்றன. கோவிட் தொற்று நெருக்கடியின் முதல் ஆண்டு 2020ல் தற்கொலை செய்துகொண்டவர்களில் அதிகபட்சம் வேலை இழந்தவரே ஆவர். பொதுவெளியில் தற்கொலை குறித்த அரசுத் தரப்புத் தகவல்கள் மேலும் கிடைக்காதபோதும் நாளிதழ்களில் வேலை இல்லாத காரணத்தாலேயே தற்கொலை செய்து கொண்டார்கள் என்ற செய்திகள் நிரம்பவே வெளிவந்தன.

அச்செய்திகள் எப்போதையும்விட உரத்து எச்சரிக்கை மணி அடித்தன. ஆனால் அந்த ஒலி மோடி அரசின் கேளாச் செவியில் விழுந்ததா? என்பதே கேள்வி? இது குறித்து நன்கு அறிந்திருந்தாலும் அரசு ஆழ்ந்த தூக்கத்தில் இருப்பதுபோல நடித்தது என்பது மக்களவையில் அமைச்சரே அளித்த பதிலில் அம்பலமானது.

2020ம் ஆண்டு வேலைஇல்லாத காரணத்தால் 3548 மக்கள் தற்கொலை செய்து கொண்டனர் என தேசிய குற்ற ஆவணங்கள் பீரோ (**NCRB**) அமைப்பின் 2020ம் ஆண்டிற்கான அறிக்கை தரவு களை மேற்கோள் காட்டி நித்தியானந்த ராய், உள்துறை ராஜாங்க அமைச்சர், அளித்த எழுத்துபூர்வமான பதில் உண்மையை வெளிப்படுத்த நாடே அதிர்ச்சி அடைந்தது.

2020ம் ஆண்டில்தான் கரோனாவை விரட்ட நாட்டு மக்களுக்கு பாத்திரங்களை அடித்து அல்லது மணியாட்டி ஒலி எழுப்பவும், அல்லது விளக்குகளை ஏற்றவும் நான்கு நாட்கள் வழங்கியும்; மற்றும் சிலமணிநேரம் விளக்கை அணைக்க பல நாட்களும் வழங்கிய பிரதமர் நரேந்திரமோடி முழுமையான ஊரடங்கை அமல்படுத்த மக்களுக்கு வெறும் நான்கு மணி நேர அவகாசம் மட்டுமே அளித்தார் என்பதை நினைவுபடுத்துவது பொருத்தமானது.

ஏனெனில் எந்த முன்னேற்பாடும் இல்லாத அவ்வறிவிப்பால் நாட்டின் தொழிற்சாலைகளின் கதவுகள் இழுத்து மூடப்பட, பொரு ளாதாரச் செயல்பாடுகள் நிலைகுலைந்து நின்றன. அந்நாட்களில் இந்தியநாடு முழுவதும் சாலைகளில் சாரிசாரியாகப் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், தங்கள் மகளிர் மற்றும் குழந்தைகளை அழைத் துக் கொண்டு உணவின்றி, வழியில் உணவு கிடைக்கும் நம் பிக்கையும் இன்றி, இரவு பகலாக வெயிலில் நடந்து சென்ற கொடுமையை உலகமே பார்த்தது. தங்கள் சொந்த கிராமங்களை நோக்கி நடந்து சென்றவர்களில் பலர் வழியிலே மடிந்தனர்; அவர் களுக்கு நிவாரணம் வழங்க வேண்டிய நிலை வந்தபோதுதான் இந்த அரசு மடிந்தவர்கள் பற்றிய எந்த விவரமும் இல்லை என நாடாளுமன்றத்தில் அறிவித்தது.

இருப்பினும் வேலையில்லாத காரணத்தால் தற்கொலை செய்து கொண்டவர்கள் பற்றிய முழு விவரமும் ஒன்றிய அரசிடம் இருப்பதை அவர்கள் மறுக்க முடியாது. இப்போது அந்தத் தற்கொலைக்கான பழியை - அரசின் செயலின்மை மற்றும் தற்கொலை செய்து கொண்ட மக்கள் குறித்த தங்கள் உணர்வற்ற தன்மையையும் மூடி மறைத்து பெருந்தொற்றின் மீது சுமத்த முயல்கிறார்கள். ஆனால் நம்நாட்டைப் பெருந்தொற்று தாக்குவதற்கு முன்பும்கூட அதிகரித்து வந்த தற்கொலைகளுக்கான பழியை யார் மீது அவர்கள் சாட்ட முடியும்?

மோடி அரசு ஆட்சிக்கு வந்த 2014ம் ஆண்டு 2,207 ஆக இருந்த தற்கொலைகள், ஆண்டுக்காண்டு அதிகரித்ததை அரசின் 'தேசிய குற்ற ஆவண பீரோ'வின் தரவுகள் அம்பலப்படுத்துகின்றன. அதில் 2015ல் 2,723 ஆக உயர்ந்து, பின் 2016 ஒரு ஆண்டில் மட்டும் 2298ஆகக் குறைந்தாலும் 2016க்குப்பின் தொடர்ச்சியாக மொத்த தற்கொலைகள் அதிகரித்தபடி உள்ளது. 2017ல் வேலை யில்லாதோர் தற்கொலை 2,404; 2018ல் 2,741; 2019ல் 2,851. 2020ம் ஆண்டில் வேலையில்லாதோர் தற்கொலை ஐந்து மாநிலங்களில் பின்வருமாறு அதிகமாக உள்ளது: முதலில் கர்னாடகா 720, அடுத்து மகாராஷ்டிரா 625, தமிழ்நாடு 336, அசாம் 234 மற்றும் உபி 227.

தற்கொலைகளுக்கு வேலையின்மை தவிர, திவால் அல்லது கடன் சுமை அதனோடு தொடர்புடைய அடுத்த காரணங்களாக உள்ளன. அமைச்சரின் பதிலில் 2018 முதல் 2020வரை திவால் அல்லது கடன் சுமையால் தற்கொலை செய்து கொண்டவர்கள் 16,091 எனக் கூறப்பட்டுள்ளது. இதே காரணங்களுக்காக தொற்று தாக்குதலுக்கு வெகு காலம் முன்பு 2018லேயே தற்கொலை மொத்த எண்ணிக்கை 4,970; அதுவே 2019ல் 5,908 ஆக உயர்ந் தது. 2020ல் அதற்கு முந்தைய ஆண்டைவிட குறைவாக 5,213 தற் கொலைகள் நடந்தன. தற்கொலைகளுக்குக் காரணம் கோவிட் பெருந்தொற்று எனப் பழி சுமத்துவது முழுமையாக உண்மை யில்லை என்பதை நிரூபிக்கிறது.

தொற்று இல்லாமலும்கூட அக்கொள்கைகள் வேலைமின்மை யையும் வாழ்வாதார இழப்பையும் அதிகரித்துத் தற்கொலைக்குத் தூண்டுகிறது.

மகாராஷ்டிராவை உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால் அங்கு ஒவ்வொரு வருடமும் விவசாயிகளின் தற்கொலை மிக அதிகமாக உள்ளது. திவால் அல்லது கடன் காரணமான தற் கொலைகளிலும் 1341 என அம்மாநிலம் முதல் இடத்தில் உள்ளது. அடுத்து கர்னாடகா 1025, தெலுங்கானா 947, ஆந்திரப் பிரதேசம் 782 மற்றும் தமிழ் நாட்டில் 524பேர்கள் கடன் காரணமாகத் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

இதில் இன்னும் மோசம், 2022 23ம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில் நாட்டின் வேலையில்லாத உழைப்புச் சக்தி மக்களுக்கு எந்த ஒதுக்கீடும் அளிக்கப்படவில்லை. ஆனாலும் ஒன்றிய உள்துறை ராஜாங்க அமைச்சர் வேலை வாய்ப்பை அதிகரிக்கவும் தற்கொலைகளைத் தடுக்கும் நோக்கில் மனஅழுத்தத்தைக் கட்டுப்படுத்தி குறைக்கவும் அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருவதாக நாடாளுமன்றத்தில் கூறுகிறார்.

என்றாலும் அதிகரித்து வரும் வேலையின்மை மற்றும் தற் கொலைகளின் எண்ணிக்கை அமைச்சர் கூறிய திட்டங்களின் பரிதாபகரமான தோல்வியைச் சுட்டிக் காட்டுகின்றன.

நியூஏஜ், தமிழில்: **நீலகண்டன்**

## மாநில நிர்வாகக்குழு, மாநிலக்குழு கூட்ட அழைப்பு

**அன்புமிக்க தோழர்களே வணக்கம்.**

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில நிர்வாகக்குழு மற்றும் மாநிலக்குழுக் கூட்டங்கள் நாகப் பட்டினம் நகரில் உள்ள வி.பி.என். திருமண அரங்கத்தில் 17.03.2022, 18.03.2022 மற்றும் 19.03.2022, 20.03.2022 ஆகிய தேதிகளில் கீழ்க்கண்டவாறு நடைபெறும்.

கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் டி.ராஜா அவர்கள் கலந்து கொள்கிறார். தோழர்கள் தவறாது குறிப்பிட்ட நேரத்தில் பங்கேற்க வேண்டுகிறோம்.

**1. மாநில நிர்வாகக்குழுக் கூட்டம்**

2022 மார்ச் 17 மற்றும் 18 வியாழன், வெள்ளி ஆகிய இரு தினங்கள் நடைபெறும். 17.03.2022 வியாழன் காலை 10 மணிக்கு கூட்டம் தொடங்கும்.

**2. மாநிலக்குழுக் கூட்டம்**

2022 மார்ச் 19 மற்றும் 20 சனிக்கிழமை, ஞாயிறு ஆகிய இரு தினங்கள் நடைபெறும்.

கூட்டம் 19.03.2022 சனிக்கிழமை காலை 10 மணிக்கு தொடங்கும். மாநில நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் மாநிலக்குழு உறுப்பினர்கள் கூட்டத்திற்கு உரிய காலத்தில் வந்து கலந்து கொள்ளு மாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

வாழ்த்துக்களுடன்

தோழமைமிக்க,


(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்

**தொடர்புக்கு:**

எம்.செல்வராசு எம்.பி.
செல்: 93603 12289

எஸ்.சம்மந்தம், மாவட்டச் செயலாளர்
செல்: 97885 18737

கோ.பாண்டியன்,
மாநிலக் கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர்
செல்: 94423 40874



**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தோழர் தா.பாண்டியன் முதலாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, கட்சியின் மாநிலக்குழு அலுவலகமான பாலன் இல்லத்தில் பிப்.26 அன்று காலை 10 மணிக்கு அவரது படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.**

நிகழ்ச்சியில் மூத்த தலைவர் ஆர்.நல்லகண்ணு, மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மாநில துணைச் செயலாளர்கள் கே.சுப்பராயன் எம்.பி., மு.வீரபாண்டியன், மாநில செயற்குழு உறுப்பினர்கள் ந.பெரியசாமி, க.சந்தானம், தென்சென்னை மாவட்டச் செயலாளர் எஸ்.ஏழுமலை, வடசென்னை மாவட்டச் செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி, மத்திய சென்னை மாவட்ட செயலாளர் பா.கருணாநிதி, அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் அகில இந்திய பொதுச் செயலாளர் இரா. திருமலை. ஜனசக்தி சார்பில் இளசை கணேசன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.




சென்னை

தேவராஜ், சி.சிவசாமி, மாவட்ட பொருளாளர் யூ.கே.சுப்ரமணியன், மாமன்ற உறுப்பினர்கள் எம்.டி. மோகன், மல்லிகா புருஷோத்தமன், பிரபா ரவீந்திரன், சாந்தி சந்திரன், மற்றும் தெற்கு மண்டல செயலாளர் ஏ. சுப்பிரமணியன், மத்திய மண்டல செயலாளர் கே. ரவீந்திரன், மதுக்கரை தாலுகா செயலாளர் கே.ஆர். தங்கராஜ், முன்னாள் மாமன்ற உறுப்பினர் கே.புருஷோத்தமன், என். சந்திரன், ஆர். கந்தசாமி, முருகேசன், ஸ்ரீராம், எம். தங்கவேல், ஏபி மணிபாரதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**விருதுநகர்:** விருதுநகர் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகம் முன்பு தா.பா. படத் திற்கு மலரஞ் சலி செலுத்தி வீர வணக்கம் செலுத்தப்பட்டது. மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ்

தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சிக்கு வட்டார செயலாளர் முனியப்பன் தலைமை தாங்கினார்.

இதில் மாவட்ட செயலாளர் எஸ்.தேவராசன், மாவட்ட துணை செயலாளர் கோபால், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் எஸ். கலைச்செல்வன், சி.மாதையன், ஒன்றிய துணை செயலாளர் சம்பத், நகர செயலாளர் விஜயபாரதி, துணை செயலாளர் தர்மராஜா, மாவட்டக்குழு உறுப்பினர்கள் ஆர்.லட்சுமணன், கிருஷ்ணன், முத்து, நாகராஜ், புதுப்பட்டி பழனி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

தருமபுரி பிஎஸ்என்எல் அலுவலகம் எதிரில் நடந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் கே.மணி தலைமை வகித்தார். மாவட்ட பொருளாளர் எம்.மாதேஸ்வரன் தா.பா. உருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார்.

மாவட்டச் செயலாளர் எஸ்.தேவராசன், மூத்த நிர்வாகி அப்புனு ஆகியோர் அஞ்சலி செலுத்தி பேசினர்.

# தா.பாண்டியன்

## முதலாம் ஆண்டு நினைவு நாள்

**தஞ்சை:** தா.பா. அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஒன்றுபட்ட தஞ்சை மாவட்ட மதிப்புமிகு தியாகத் தலைவர் எம்.காத்தமுத்து 31ஆவது நினைவு நாளும் தஞ்சை மாவட்ட கட்சி அலுவலகம் முன்பு மாவட்ட செயலாளர் முத்து உத்திராபதி தலைமையில், தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் சி.மகேந்திரன் மலரஞ்சலி செலுத்தி உரையாற் றினார்.

**கோவை:** கோவை ஜீவா இல்லத்தில் தா.பா. உரு வப்படத்திற்கு மாலை அணிவித்து நினைவஞ்சலி செலுத் தப்பட்டது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செய லாளர் வி.எஸ். சுந்தரம் தலைமை தாங்கினார். மாநில பொருளாளர் எம்.ஆறுமுகம் தா.பாண்டியன் குறித்து புகழுரை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் கட்சியின் மாவட்ட துணை செயலாளர்கள்

எம்பி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், மாநில குழு உறுப்பினர்கள் செந் தில்குமார், பாலமுருகன், இளைஞர் மன்ற மாவட்ட செயலாளர் கணேசமூர்த்தி, மாதர்சங்க மாவட்ட செயலாளர் பாண்டிச்செல்வி, ஏஐடியுசி முத்துமாரியம்மன், சமுத்திரம் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். அருப்புக்கோட்டையில் வட்ட செயலாளர் முனியசாமி, மாவட்ட குழு உறுப்பினர் இளங்கோ, மீனவர் சங்க செல்வம் உள்பட பலர் கலந்து கொண்டனர். தளவாய்புரத்தில் வட்ட செயலாளர் வீராச்சாமி, தவிச அய்யணன், ஒன்றிய கவுன்சிலர் லி.பகத்சிங் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**தருமபுரி:** தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் பழைய பேருந்து நிலையம் அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த தா.பா. திருவுருவ படத்திற்கு பென்னாகரம் முன்னாள் சட்டமன்ற உறுப் பினரும், மாநில செயற்குழு உறுப்பினருமான ந.நஞ்சப்பன் மாலை அணிவித்து மலர்

இதில் ஏஐடியூசி மாவட்ட துணைத் தலைவர் சுதர்சனன், உள்ளாட்சி பணியாளர் சங்க மாவட்டத் தலைவர் என்.மனோகரன், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாவட்டக்குழு உறுப் பினர் வணங்காமுடி, நிர்வாகி சின்னராசு, அனைத்திந்திய மாணவர் பெருமன்ற பொறுப்பாளர் தமிழமுதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு மலர் தூவி மரியாதை செய்தனர்.

இண்டூர் பஸ் நிலையத்தில் நடந்த நிகழ்ச்சிக்கு வட்டார பொறுப்பாளர் எம்.சிவன் தலைமை வகித்தார்.

இந்த நிகழ்ச்சியில் திமுக ஒன்றிய செயலாளர் எச்சனஅள்ளி சண்முகம், இந்தியக் கம்யூனிஸ்ட கட்சி மாவட்ட பொருளாளர் எம். மாதேஸ்வரன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் எஸ்.சின்ன சாமி,மூத்த நிர்வாகி அப்புனு,இ ண்டூர் வட்டார பொருளாளர் மாதையன் மற்றும் பொன்மாரி, மாது, சரவணன், பெரியண்ணன், ஆர்.சின்னராஜி




தஞ்சை




கோவை

உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்.

ஏரியூரில் நடந்த நிகழ்ச்சிக்கு வட்டார செயலாளர் கே.வி.அழ கேசன் தலைமையில் வட்டார பொருளாளர் காமராஜ், பஞ்சாயத்து தலைவரும், மாவட்டக்குழு உறுப்பினருமான ஆர்.தொட்டி மற்றும் நிர்வாகிகள் மரியாதை செய்தனர்.

பாப்பாரப்பட்டி பஸ் நிலையத்தில் நடந்த நிகழ்ச்சியில்



**உழைக்கும் வர்க்கத்திடமிருந்தும் வெகு மக்களிடமிருந்தும் பிரிக்கமுடியாதவாறு கட்சி பொறுப்பாளர்கள் ஒன்றிணைந்து நின்று செயல்பட வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் அது பெயர் அளவிலான கட்சியாக மட்டுமே இருக்கும் – லெனின்**

எல்.ஆர்.கிருஷ்ணராஜ் தலைமையில் மாவட்டக்குழு உறுப்பினர்கள் எல்.வி. சின்னசாமி, மாதம்மாள், கிளை செயலாளர் பொன்னியப்ன் உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர்.

நல்லம்பள்ளி மாதேமங்கலத்தில் வெங்கட்டம்பட்டி கிளை செயலாளர் வழக்கறிஞர் பி.பிரசாந்த் தலைமையில் மாதேமங்கலம் கிளை செயலாளர் சண்முகம், பாளையத்தானூர் கிளை செயலாளர் சிவன், துணை செயலாளர் பழனிசாமி,நிர்வாகி நவீன்குமார், மாதையன், ருத்ரமூர்த்தி உள்ளிட்டோர் மலர் தூவி மரியாதை செய்தனர்.

அரூரில் மாவட்ட துணைச் செயலாளர் கா.சி.தமிழ்க்குமரன் தலைமையில் நகர செயலாளர் ப.முருகன், வட்டார செயலாளர் அல்லிமுத்து, மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்ஆர்.நடராஜ் மற்றும் நிர்வாகிகள் மரியாதை செலுத்தினர்.

பாப்பிரெட்டிப்பட்டி வட்டம் பொம்மிடியில் வட்டார செயலாளர் எம்.சுப்ரமணி தலைமையில் நிர்வாகிகள் ராமர், சின்னராஜ் ஆகியோர் மரியாதை செய்தனர்.

சின்னம்பள்ளி சின்னகடமடை பஸ் நிலையத்தில் வட்டார செயலாளர் சி.சிவன் தலைமையில் மாவட்டக்குழு உறுப்பினர் மகேந்திரன், அனைத்திந்திய மாணவர்பெருமன்ற மாநிலக்குழு உறுப்பினர் எஸ்.வெங்கடேசன் மற்றும் நிர்வாகிகள் மரியாதை செலுத்தினர்.

**நெல்லை :** நெல்லை பாலன் இல்லத்தில் நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. வி.தொ.ச. தலைவர் வி.தங்கையா தா.பா. படத்திற்கு மாலை அணிவித்தார். மாவட்டச் செயலாளர் எஸ்.காசிவிஸ்வநாதன், நெல்லை மாவட்ட ஏஐடியூசி பொதுச் செயலாளர் இரா.சடையப்பன், நெல்லை மண்டல பொறுப்பாளர் எம்.எஸ்.பாலகிருஷ்ணன், பாளையங்கோட்டை ஒன்றியப் பொறுப்பாளர் கே.முத்துக்கிருஷ்ணன், அலுவலகச் செயலாளர்கள் ஏ.முத்துக்கிருஷ்ணன், மோகன் நெல்லை கூலித் தொழிலாளர் சங்கத் தலைவர் ஏ.வெடிகண்ட பெருமாள், தெரு வியாபாரத் தொழிலாளர் சங்கத் தலைவர் பி.கிருஷ்ணன், பாளை. கூலித் தொழிலாளர் சங்கத் தலைவர் ஆயிரத்தான் உட்பட ஏராளமானோர் பங்கேற்றனர்.

**நாகை:** நாகப்பட்டினம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் எஸ்.சம்பந்தம் தலைமையில் தா.பா. திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து, அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கோ.பாண்டியன் ஒன்றிய செயலாளர், வி.ராமலிங்கம் மாவட்ட பொருளாளர், கே.பாஸ்கர் மாவட்ட செயலாளர் வி.தொ.ச., பி.சின்னத்தம்பி மாநில பொதுச் செயலாளர், தமிழ்நாடு ஏஐடியுசி மீனவத்தொழிலாளர் சங்கம், ரகுமான் நாகை ஏஐடியுசி மாவட்ட பொறுப்பாளர், உ.ராஜேந்திரன் மாவட்டத் தலைவர் தமிழ்நாடு ஏஐடியுசி மீனவர் தொழிலாளர் சங்கம் உள்ளிட்டோர் கலந்துகொண்டு புகழஞ்சலி செலுத்தப்பட்டது.

**சேலம்:** சேலம் மாவட்ட கட்சி அலுவலகத்தில் நினைவேந்தல் நிகழ்ச்சி மாவட்ட பொருளாளர் எம்.ராமன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் டி.வி.கருணைதாஸ் தா.பா.படத்திற்கு மாலை அணிவித்தார். மாவட்ட செயலாளர் ஏ.மோகன், மாநில குழு உறுப்பினர் பி.பரமசிவம் ஆகியோர் நினைவுகள் குறித்து பேசினார். இதில் மாநில குழு உறுப்பினர் சங்கீதா பாலதண்டாயுதம், மண்டல செயலாளர்கள் எம்.ஷாநவாஸ்கான், ஆர்.எல்.செல்வராஜ், நிர்வாக குழு உறுப்பினர்கள் எம்.கந்தசாமி ஆர்.ரமேஷ், ஏஐடியூசி மாவட்ட பொருளாளர் எஸ்.சம்பத் மற்றும் என்.பி.மணிவேல் பா.தினேஷ் பி.ராமமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

**காஞ்சிபுரம் மாவட்டம்:** காஞ்சிபுரம் மாவட்டம் மறைமலை நகர் கட்சி அலுவலகத்தில் நினைவஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது. எல்.மேகநாதன் தலைமையேற்றார். கே.கே. சுப்ரமணியன், ஏ.ராஜ் குமார் முன்னிலை வகித்தனர். ஏஐடியூசி மாவட்ட தலைவர் எம். சங்கையா, காஞ்சி ஆ.மூர்த்தி, சேகுவேராதாஸ் உள்ளிட்டோர் தா.பா. திருவுருவப்படத்திற்கு மலர் தூவி புகழ் அஞ்சலியும் செலுத்தினர்.

காஞ்சிபுரத்தில் ப.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஜே. கமலநாதன் தொகுதிக் குழு செயலாளர், ஆ. மூர்த்தி, தா.சுந்தரமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்ட தோழர்கள் கலந்துகொண்டு புகழ் அஞ்சலி செலுத்தினர். மதுராந்தகம் மெய்யூரில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில் தா.பா. அவர்களுக்கு சேகுவேரா தலைமையில் நினைவஞ்சலி செலுத்தப்பட்டது. பி.எஸ். எல்லப்பன், கிளை செயலாளர் ப. மணிகண்டன், எஸ்.வி.சங்கர், ஞானசேகரன், பரத் குமார், விஷ்வா உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

**பல்லாவரம்:** பல்லாவரம் பகுதி குழு சார்பாக பிள்ளையார் கோவில் தெருவில் உள்ள மாவட்ட குழு உறுப்பினர் ஜே.பூபாலன் இல்லத்திற்கு அருகிலும், பல்லாவரம் பஸ் நிலையம் அருகி லும் தா.பா. வின் படத்துக்கு மலர் அஞ்சலியும் வீரவணக்கமும் செலுத்தப்பட்டது.

நிகழ்வில் பல்லாவரம் பகுதி செயலாளர் கே.ரவி, ஆலந்தூர் தொகுதி குழு செயலாளர் முனுசாமி மற்றும் பொழிச்சலூர் ராஜேந்திரன், இந்திராணி, குமாரி மீனா, தரணி, வெங்கடேசன், ராமு, சிங்காரவேலு, பிரவீன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்

**தென்காசி மாவட்டம்:** சிவகிரியில் நகர செயலாளர் பி.பால சுப்பிரமணியன் தலைமையில் தா.பா.அவர்களுக்கு நினைவு அஞ்சலி கூட்டம் நடைபெற்றது. ராயகிரியில் நகர செயலாளர் சமுத்திரம் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட குழு உறுப்பினர் சமுத்திரக்கனி மற்றும் பலர் கலந்து கொண்டனர். செங்கோட்டையில் ஏஐடியூசி மூத்த தோழர் சாமி தலைமையில் நடைபெற்றது. தாலுகா செயலாளர் மாரியப்பன், துணைச் செயலாளர் பழனிச்சாமி, சுப்பிரமணியன் ஆகியோர் பங்கேற்றனர். தென்காசி தாலுகா ஆயிரப்பேரியில் தாலுகா செயலாளர் எம்.எஸ்.கிட்டப்பா தலைமையில் நடைபெற்றது. கிளைச் செயலாளர் கோவிந்தன் துணைச் செயலாளர் துரைராஜ் மற்றும் பலர் பங்கேற்றனர். திருவேங்கடம் தாலுகா குருவிகுளத்தில் தாலுகா செயலாளர் அந்தோணி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட குழு உறுப்பினர் கணேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர். புளியங்குடியில் டி.என்.புதுக்குடி கிளை செயலாளர் எஸ்.சீனிவாசன் தலைமையில் நடைபெற்ற அஞ்சலி கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் த.இசக்கித்துரை, ஏஐடியுசி மாவட்ட செயலாளர் த.சுப்பையா ஒன்றிய செயலாளர் ப.வேலு, புளியங்குடி கிளை செயலாளர் மணிகண்டன், நகர் மன்ற உறுப்பினர் வே.பாக்கியம் மற்றும் பல தோழர்கள் கலந்து கொண்டு வீரவணக்கம் செலுத்தினர். கடையம் ஒன்றியம் கீழஆம்பூரில் நடைபெற்ற அஞ்சலி கூட்டத்தில் ஒன்றிய செயலாளர் வேலாயுதம், விவசாய சங்க தலைவர் சட்டநாதன், ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் ஈஸ்வரன், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் பரமசிவன், ஹரிஹரன் மற்றும் பல தோழர்கள் கலந்து கொண்டு வீரவணக்கம் செலுத்தினர்.

**மணப்பாறை:** மணப்பாறை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் தா.பா. நினைவு புகழ் அஞ்சலி செலுத்தப்பட்டது ஒன்றிய செயலாளர் தங்கராசு தலைமை வகித்தார். நகர செயலாளர் ஜனசக்தி உசேன் முன்னிலை வகித்தார். திருச்சி புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் பழனிச்சாமி புகழ் உரை நிகழ்த்தினார். மாவட்ட குழு உறுப்பினர்கள் சௌக்கத்அலி, ராகமத்துனிஷா, நல்லுச்சாமி, ராஜேந்திரன், பெருமாள், ஒன்றியகுழு உறுப்பினர்கள், நகரகுழு உறுப்பினர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

**கரூர் :** கரூர் மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் தா.பா. நினைவுதினம் அனுசரிக்கபட்டது. நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் எம்.ரத்தினம், மாவட்ட துணை செயலாளர்கள் கே.சண்முகம், எஸ்.மோகன் குமார், புலியூர் பேரூராட்சி மன்ற உறுப்பினர் கே.கலாராணி ஏஐடியூசி ஜி.பி.எஸ். வடிவேலு, தாந்தோணி ஒன்றிய துணை செயலாளர் எல்.அருண் குமார் மற்றும் தோழர்கள் கலந்துகொண்டு நினைவஞ்சலி செலுத்தினர்.

**தாந்தோனி ஒன்றியம்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தாந்தோனி ஒன்றியம் புத்தாம்பூர், ஆறுரோடு, வடுகப்பட்டி கிளைகளின் சார்பில் ஆறுரோட்டில் தா.பா. திருவுருவப்படத்திற்கு மாலை அனுவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. மூத்த தோழர் கோ.வெள்ளையப்பன் தலைமை தாங்கினார். மாவட்டக் நிர்வாக்குழு உறுப்பினர் ஆர். தங்கவேல், மாவட்டக்குழு உறுப்பினர் ஆர்.சிவசண்முகசுந்தரம் ஆகியோர் நினைவஞ்சலி உரை நிகழ்த்தினர். நிகழ்ச்சியில் ஒன்றிய குழு உறுப்பினர் வி.சாமிநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**குளித்தலை:** குளித்தலை பேருந்து நிலையம் காந்தி சிலை அருகில் தா.பா. திருவுருவப்படத்திற்கு மாலை அனுவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. தாலுகா செயலாளர் எம்.பி.செல்வம் தலைமை தாங்கினார். மாவட்டக் குழு உறுப்பினர் பி.பாலன் நினைவஞ்சலி உரை நிகழ்த்தினார். நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் பி.ராஜேந்திரன், வட்டக்குழு உறுப்பினர்கள் எஸ்.முருகேசன், பி.மாணிக்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**தூத்துக்குடி :** தூத்துக்குடி மாவட்ட கட்சி அலுவலகம் பாலன் இல்லத்தில் தா.பா. நினைவஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது. தூத்துக்குடி மாநகரமன்ற உறுப்பினர் ஜி.தனலெட்சுமி, தா.பாண்டியன் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மாவட்ட செயலாளர் எஸ்.அழகுமுத்து பாண்டியன், இரா.கிருஷ்ணமூர்த்தி, பிரபாகர் ஆகியோர் புகழஞ்சலி உரை நிகழ்த்தினர். நிகழ்ச்சியில் மாநகர செயலாளர் ஞானசேகரன், துணை செயலாளர் மாடசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**வேலூர்:** வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு பேருந்து நிலையத்தில் தா.பா. திருவுருவப்படத்திற்கு தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் சார்பில் நா.சே.தலித்பாஸ்கர் தலைமையில் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் பிரகாசம், எம்.பாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**பாபநாசம்:** தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் அருகே அம்மாபேட்டையில் தா.பா. நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அம்மாப்பேட்டை ஒன்றியச் செயலாளர் ஆர்.செந்தில்குமார் தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாவட்டத் தலைவர் ஆர்.எஸ். பாலு, ஒன்றிய நிர்வாகிகள் எஸ்.திருநாவுக்கரசு, ஆர்.ரமேஷ்குமார் உள்பட பலர் கலந்துக் கொண்டனர்.

**திருப்பூர் மாவட்டம்:** திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை தாலுகா அலுவலகத்தில் தா.பா.உருவப்படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் திருப்பூர் மாவட்ட குழு உறுப்பினர் வி.சௌந்தரராஜன். ஜீவா நகர் கிளை செயலாளர் பி.சுப்பிரமணியம். கணேசாபுரம் கிளை செயலாளர் ஏ.செல்வராஜ். உடுமலைப்பேட்டை நகர கிளை மேற்கு செயலாளர் சி.வெங்கடேஷ், மூத்த தோழர் ஆர்.குருசாமி அலுவலகப் பொறுப்பாளர் வி.தங்கவேல் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**திருச்சி மாநகர்:** திருச்சி மாநகர் உறையூரில் 23வது வார்டு பகுதியில் வை. புஷ்பம் எக்ஸ்.எம்.சி. தலைமையில், 23வது வார்டு மாமன்ற உறுப்பினர் க.சுரேஷ் மற்றும் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் சிவா, மாவட்டக்குழு உறுப்பினர்கள் சத்யா, ஆயிஷா, இப்ராஹிம், சூர்யா வார்டு செயலாளர்கள் முருகன், சுரேஷ் முத்துசாமி, ஆனந்தன், நாகராஜன் ஏஐடியுசி ஆட்டோ சங்க நிர்வாகிகள் ராஜா, ரமேஷ் திமுக வட்ட பிரதிநிதி பாண்டித்தேவர் காங்கிரஸ் விசுவநாதன் தொலைத்தொடர்பு தொழிற்சங்கம் அதிகாரிகள் சங்கம் காமராஜ் மாணவர் பெருமன்றம் ஆனந்த்,பாட்ஷா மற்றும் முருகேசன் உள்ளிட்ட ஏராளமானோர்பங்கு பெற்று தா. பா. திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

மாவட்ட அலுவலகத்தில் மாநில நிர்வாக குழு உறுப்பினர் த.இந்திரஜித் தலைமையில், ஏஐடியுசி மாவட்ட தலைவர் நடராஜா முன்னிலையிலும், பகுதி செயலாளர்கள் பிரான்சிஸ், செல்வகுமார் சுந்தர்ராஜன் செம்பட்டு ராஜா கட்டுமான சங்கம் முருகன், அலுவலக செயலாளர் அன்பழகன், அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற மாநகர் மாவட்ட தலைவர் முருகேசன் உள்ளிட்ட பெரும் திரளான நிர்வாகிகள் பங்கேற்றனர்.

திருச்சி மாநகர் 9வது வார்டில் செயலாளர் ஆனந்தன் தலைமையிலும் 10வது வார்டில் மாவட்ட குழு உறுப்பினர் ஆயிஷா தலைமையில் நடைபெற்றது. திமுக மாமன்ற உறுப்பினர் முத்துக்குமார் பங்கேற்றார். 11 வது வார்டில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் சிவா தலைமையிலும், 22வது வார்டு செயலாளர் சுரேஷ் முத்துசாமி தலைமையிலும், இருபத்தி நான்காவது வார்டில் செயலாளர் துரைராஜ் தலைமையிலும் தா.பா. முதலாம் ஆண்டு நினைவு நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

**ஈரோடு:** ஈரோட்டில் கட்சியின் மாவட்ட அலுவலகத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் திருநாவுக்கரசு தலைமையில் நடைபெற்ற தா.பா. நினைவு நாள் நிகழ்ச்சியில், கட்சியின் மாநிலக் குழு உறுப்பினர் ஸ்டாலின் குணசேகரன் கலந்து கொண்டு தா.பாண்டியனின் உருவப் படத்தை திறந்து வைத்து மலரஞ்சலி செலுத்தினார். கட்சியின் மாவட்ட நிர்வாகக் குழு உறுப்பினர் துளசிமணி, மாவட்ட பொருளாளர் பிரபாகரன், மாவட்ட துணைச் செயலாளர் செல்வராஜன், மாவட்டக்குழு உறுப்பினர்கள் மகாலிங்கம், வரதராஜன், நாகராஜன், ஈரோடு வட்டாரச் செயலாளர் சோமசுந்தரம், வட்டாரப் பொருளாளர் ரமணி, சென்னிமலை ஒன்றிய செயலாளர் நாகப்பன், கலை இலக்கிய பெருமன்ற மாவட்டச் செயலாளர் துரையரசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.


**பவானி:** பவானியில் நகர செயலாளர் வழக்கறிஞர் பாலமுருகன் தலைமையில் நினைவேந்தல் கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சியில், கட்சியின் ஈரோடு வடக்கு மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் மூத்த வழக்கறிஞர் ப.பா.மோகன் கலந்து கொண்டு தா.பாண்டியனின் உருவப்படத்தை திறந்து வைத்து உரையாற்றினார். கட்சியின் மாநில கட்டுப்பாட்டுகுழு உறுப்பினர் மணிவேல் ‘கடைசி மூச்சு இருக்கும் வரை என் நாவால் நாட்டு மக்களை தட்டி எழுப்புவேன் ‘என்ற தலைப்பில் உரையாற்றினார்.


**மயிலாடுதுறை :** மயிலாடுதுறை மாவட்டத்தில் சீர்காழி, கொள்ளிடம், செம்பனார்கோயில், குத்தாலம், மயிலாடுதுறை என ஐந்து ஒன்றியங்களிலும் தா.பா. திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. இதில் மாவட்ட செயலாளர் சீனிவாசன் செம்மனார் கோயிலிலும், குத்தாலத்திலும், மயிலாடுதுறையிலும் கலந்துகொண்டு தா.பா.வின் புகழையும், அவருடைய தியாகத்தையும் மிக விரிவாகவும் விளக்கமாகவும் தோழர்களுக்கு எடுத்துரைத்தார்.



ஈரோடு


மணப்பாறை



விருதுநகர்



தருமபுரி

தமிழ் நாடு கலை இலக்கிய பெருமன்ற மாவட்ட நிர்வாகி நடிகர் சிங்கார வேல் தலைமையில் வட்டார செயலாளர் எம்.பெருமாள், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் புல்லாறு உள்ளிட்டோர் மரியாதை செய்தனர். பாப்பாரப்பட்டி அம்மன் நகரில் வட்டார துணை செய லாளர் எம்.வி.குழந்தைவேல் தலைமையில் மரியாதை செய்தனர்.

நல்லம்பள்ளி இலளிகத்தில் வட்டார செயலாளர்



**மனிதனும் இயற்கையும் ஒருங்கே பங்கேற்கும் நெகிழ்ச்சியே உழைப்பு என்பதாகும். உழைப்பின் மூலம் இயற்கையை ஒழுங்குபடுத்தி நிர்வகிக்கும் ஆற்றலை மனிதன் இயற்கையின் மீது செலுத்துகிறான்.**

**- மார்க்ஸ்**



- டாக்டர்
ஜி.ஆர்.இரவீந்திரநாத்



# உக்ரைனில் சிக்கியுள்ள மாணவர்களை விரைந்து மீட்டிடுக!



**அமெரிக்கா தனது அரசியல் பொருளாதார, ராணுவ மேலாதிக்கத்தை உலகம் முழுவதும் நிலைநாட்ட தீவிரமாக முயன்று வருகிறது.**

தனது ஒற்றை மேலாதிக்கத்தின் கீழ் உலகை கொண்டுவர வெறித்தனமாக செயல்படுகிறது.

அதற்கு தனது தலைமையிலான நேட்டோ ராணுவக் கூட்டணியையும் பயன் படுத்துகிறது.

சோவியத் அச்சுறுத்தலை காரணம் காட்டி மேற்கத்திய நாடுகளை உள்ளடக்கிய ராணுவ கூட்டணியை உருவாக்கியது.

1991 ல் சோவியத் யூனியன் சிதறுண்டு போனது. சோசலிச நாடுகளின் பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்ட வார்ஸா ராணுவக் கூட்டணியும் கலைந்துவிட்டது.

இந்நிலையில் நேட்டோ கூட்டணியும் கலைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாமல், அமெரிக்காவும், மேற்கத்திய நாடுகளும் தங்களின் அரசியல் பொருளாதார ராணுவ மேலாதிக்கத்திற்காக நேட்டோவை தொடர்ந்து வலுப்படுத்தின.

ரஷ்யாவை சுற்றி வளைக்கும் நோக்குடன் பல்வேறு கிழக்கு ஐரோப்பிய நாடுகளை நேட்டோவில் உறுப்பினர்களாக இணைத்தன. அந்நாடுகளில் அமெரிக்காவின் அணு ஆயுதம் தாங்கிய ஏவுகணைகள் ரஷ்யாவிற்கு எதிராக நிறுத்தப்பட்டன.

இது ரஷ்யாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை அதிகரித்து வந்தன. இந்நிலையில், ரஷ்யாவின் அண்டை நாடான உக்ரைனையும் நேட்டோவில் இணைக்க தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன.

இதற்கு ரஷ்யா கடும் எதிர்ப்பு தெரிவித்து வந்தது . பேச்சு வார்த்தை மூலம் பிரச்சனையை தீர்க்க கடுமையான முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால், அமெரிக்காவும், நேட்டோ கூட்டணி நாடுகளும் ரஷ்யாவின் நியாயமான கோரிக்கைகளை ஏற்கவில்லை.

‘கிழக்கு நோக்கி நேட்டோவை விரிவாக்கம் செய்ய மாட்டோம்‘ என அளித்த வாக்குறுதியையும் நேட்டோ கூட்டணி தொடர்ந்து மீறி வருகிறது. உக்ரைன் ஆட்சியாளர்களும் ரஷ்யாவின் பாதுகாப்பை கருத்தில் கொள்ளாமல் நேட்டோவில் இணைய தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டனர்.

இத்தகைய நிலைமைகளால், உக்ரைன் மீது ரஷ்யா ராணுவ ரீதியாக தலையிடும் துரதிருஷ்ட நிலை ஏற்பட்டுள்ளது.

ரஷ்யாவின் நியாயமான கோரிக்கைகளை அமெரிக்காவும் அதன் தலைமையிலான நேட்டோ கூட்டணி நாடுகளும் ஏற்றிருந்தால் இந்த நிலைமைகள் உருவாகி இருக்காது. அமெரிக்கா மற்றும் நேட்டோவின் செயல்பாடுகள் ஐரோப்பா முழுவதும் பதற்றத்தை உருவாக்கி இருக்கிறது. உலக சமாதானத்திற்கு, முன்னேற்றத்திற்கு அச்சுறுத்தலை உருவாக்கி உள்ளது.

**உக்ரைனில் மருத்துவக் கல்வி பயிலும் ஏராளமான மாணவர் களும், இதர துறைகளில் படிக்கும் மாணவர்களும் மிகப்பெரிய பாதிப்புக்கு உள்ளாகி உள்ளனர். இது மிகுந்த வேதனையை தருகிறது. அம்மாணவர்களுக்கு உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை மத்திய அரசு முன்கூட்டியே செய்ய தவறிவிட்டது. பல்வேறு நாடுகள் தங்கள் நாட்டு மாணவர்களையும், குடிமக்களையும் முன்கூட்டியே உக்ரைனிலிருந்து பாதுகாப்பாக தங்கள் நாடுகளுக்கு அழைத்துச் சென்று விட்ட நிலையில், இந்திய அரசு இதில் போதிய அக்கறை செலுத்தவில்லை.**

மோடி அரசு முன்கூட்டியே திட்டமிட்டு இந்திய மாணவர்களையும் அங்குள்ள குடிமக்களையும் மீட்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தால் இப்படிப்பட்ட அவல நிலை ஏற்பட்டிருக்காது. இந்திய மாணவர்கள் மெட்ரோ ரயில் நிலையங்களிலும் குண்டு துளைக்காத பதுங்கு இடங்களிலும் தஞ்சம் புக வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.

உணவு, குடிதண்ணீர் போன்ற அடிப்படை தேவைகள் கூட இல்லாமல், பணம் இல்லாமல் அவர்கள் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். உக்ரைன் நிலவரம் குறித்து முன்கூட்டியே சரியான கணிப்புக்கு வர மத்திய அரசு தவறிவிட்டது. மத்திய அரசின் உளவுத்துறை தோல்வி அடைந்து விட்டதோ என்ற சந்தேகமும் எழுகிறது. அது மட்டுமன்றி இந்தியாவின் பொதுத்துறை நிறுவனமாக இருந்த ஏர் இந்தியாவை தனியார் நிறுவனமான டாட்டாவிற்கு விற்று விட்டதும், இந்திய மாணவர்களை உரிய நேரத்தில் மீட்பதில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அதைப் போலவே விமான கட்டணங்கள் மிகப்பெரிய அளவிற்கு அதிகரித்ததும் மாணவர்களை பாதிப்படைய செய்தது. கட்டண உயர்வால் ஏற்பட்ட பொருளாதார பிரச்சினைகளால் மாணவர்களால் உடனடியாக நாடு திரும்ப முடியவில்லை. எனவே, இனிமேலும் கால தாமதம் செய்யாமல் உடனடியாக இந்திய மாணவர்களை மீட்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும். அவர்களின் பயணச் செலவு முழுவதையும் மத்திய அரசே ஏற்க வேண்டும்.

அவர்களுக்கு தேவையான உணவு, குடிநீர்,பாதுகாப்பான தங்கும் இடம் போன்றவற்றை கிடைப்பதை உறுதி செய்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக அரசு உக்ரைனில் பயிலும் தமிழக மாணவர்களை மீட்ப்பதற்கு உதவி மையத்தை உருவாக்கி இருப்பது வரவேற்கத்தக்கது. தமிழ்நாடு முதலமைச்சர், பிரதமருக்கு கடிதம் எழுதியிருப்பதும் வரவேற்புக்குரியது.


உக்ரைனில் இருந்து திரும்பும் மாணவர்களின் பயணச் செலவையும் தமிழ்நாடு அரசே ஏற்கும் என அறிவித்துள்ளதும் பாராட்டத்தக்கது. தமிழக மாணவர்களை மீட்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள மத்திய அரசுக்கு கூடுதல் அழுத்தத்தை தமிழக அரசு கொடுக்க வேண்டும்.

வெளிநாட்டில் படித்துவிட்டு வரக்கூடிய தமிழக மருத்துவ மாணவர்கள் ,பயிற்சி மருத்துவராக பயிற்சி பெறுவதற்கான கட்டணம் ரூ 3,54,000 என்பதிலிருத்து ரூ 29400 ஆக தமிழக அரசால் குறைக்கப்பட்டுள்ளது. இது வரவேற்புக் குரியது.பாராட்டத்தக்கது. அவர்கள் பயிற்சி மருத்துவர்களாக சேர்வதை எளிமையாக்க வேண்டும்.நாடு முழுவதும் ஒரே சீரான கொள்கையை உருவாக்கிட வேண்டும். அவர்களுக்கான பயிற்சி மருத்துவ இடங்களை 7.5 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாக அதிகரிக்க வேண்டும். மாவட்ட மருத்துவமனைகளிலும் அவர்கள் பயிற்சி பெற அனுமதிக்க வேண்டும். அவர்களுக்கு விடுதி வசதிகளை வழங்குவதுடன், பயிற்சிகால உதவி ஊதியமும் வழங்கிட வேண்டும்.

தமிழகத்திலும், வெளிமாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் மருத்துவம் பயிலும் தமிழக மாணவர்கள் நலன் காக்க ‘‘மருத்துவ மாணவர்கள் நல வாரியம்‘ **(Medicalstudents’welfareboard)** அமைக்க வேண்டும் என்ற சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் நீண்ட காலக் கோரிக்கையையும் உடனடியாக தமிழக அரசு நிறைவேற்ற வேண்டும். அவ்வாரியத்தை மாணவர்கள் தொடர்பு கொள்ள நிரந்தர தொலைபேசி எண்கள், மின்னஞ்சல், வலைத்தள வசதிகளை செய்து தர வேண்டும்.

தொடர்புக்கு: **9940664343**

# ஆசிஸ் மிஸ்ரா மகனுக்கான பிணையை ரத்து செய்யக் கோரி விவசாயிகள் சங்கம் போராட்டம்




உ.பி. லக்கிம்பூர் கேரியில் பேரணியாக சென்ற விவசாயிகளின் மீது கார்களை ஏற்றி நான்கு விவசாயிகள் மற்றும் ஒரு ஊடகவியலாளர் இறப்புக்கு காரணமான மத்திய உள்துறை இணையமைச்சரின் மகனான ஆசிஸ் மிஸ்ராவை அலகாபாத் உயர் நீதிமன்றம் பிணையில் விடுதலை செய்திருப்பதை கண்டித்தும், உடன் இந்த பிணையை ரத்து செய்திட வேண்டும் என்றும், மத்திய உள்துறை இணை அமைச்சர் அஜய்மிஸ்ரா டேனியை அமைச்சர் பொறுப்பிலிருந்து விடுவித்து அவர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் ஐக்கிய விவசாயிகள் முன்னணியின் சார்பில் தமிழ்நாடு அளவில் மாவட்ட தலைநகரங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் எழுச்சியுடன் நடந்தது.

நாகப்பட்டினத்தில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட செயலாளர், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர்.கே.பாபுஜி தலைமை ஏற்றார்.

தமிழ்நாடு விவசாய சங்கத்தின் பொதுச்செயலாளர் பி. எஸ். மாசிலாமணி, நாகை மாலி எம்எல்ஏ, சாமி நடராஜன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

இதில் தமிழ்நாடு விவசாய சங்க மாவட்ட தலைவர் வி.சரபோஜி, மாவட்ட செயலாளர் கோவை சுப்ரமணியம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# பல்கலை கழக மாணவர் தேர்தலில் திருநங்கை போட்டி



கேரள மாநிலம் காலடியில் ஸ்ரீ சங்கராச்சார்யா சம்ஸ்கிருத பல்கலைக்கழகம் அமைந்துள்ளது. இந்த பல்கலைக்கழகத்தில் மாணவர் அமைப்பு யூனியன் தேர்தல் மார்ச் 4ம் தேதி நடைபெற்றது. தேர்தலில் பல்கலைக் கழகத்தில் பயிலும் திருநங்கை நாதிரா மெஹ்ரீன் சேர் மன் பதவிக்கு போட்டியிட்டுள்ளார். அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் (ஏஐஎஸ்எஃப்) சார்பில் தேர்தலில் போட்டியிடுகிறார். ஏஐஎஸ்எஃப் மாநிலக் குழு உறுப்பினராக கடந்த 3 ஆண்டுகளாக திருநங்கை நாதிரா பணியாற்றுகிறார். இதுகுறித்து நாதிரா கூறியதாவது: ‘‘இங்கு எம்.ஏ. (தியேட்டர்) முதலாண் டில் படிக்கிறேன். என்னைத் தேர்தலில் போட்டியிடுமாறு சக மாணவ, மாணவிகள் உற்சாகப்படுத்தினர்.திருநங்கைகள், தாங்கள் தேர்ந்தெடுத்த துறையில் சிறந்து விளங்க அவர்களை நம்ப வைப்பதற்கும், அவர்கள் மீதான நம்பிக்கையை அதிகரிக்கவும் இந்தத் தேர்தல் உதவும். என்னை பலரும் உற்சாகப்படுத்தி வருகின்றனர். தேர்தலில் நிச்சயம் வெற்றி பெறுவேன்.’’ இவ்வாறு நாதிரா கூறினார். தற்போது இவர் மாடலிங்கும் செய்து வருகிறார்.



- பி.எல்.சுந்தரம்



# தெங்குமரஹாடவை உயிரோடு புதைக்க குழிவெட்டும் புலிகள் காப்பகம்..!

**‘மச்சான பார்தீங்களா? மமலை வழைத் தோப்புக்குள்ளே?’ என்ற எஸ்.ஜானகி அவர்களின் குரல், இளையராஜா அவர்களின் மண்ணின் மணம் கமழும் முதல் திரையிசை, இயற்கை எழில் சூழ்ந்த காட்சிகள், இவைதான் தெங்குமரஹாடாவை பொது வெளியின் கவனத்திற்கு கொண்டு வந்தது.**

ஆனால், ‘அன்னக்கிளி’யின் சிறகுகளை பிய்த்தெறிய ‘புலிகள் காப்பக’த்தின் பெயரால் வனத்துறை முயற்சிகளை தொடங்கிவிட்டது. தெங்கு மரஹாடாவில் வாழும் மக்களுக்கு போக்குவரத்து வசதியில்லை, வன விலங்கு தொல்லை, மருத்துவம், கல்வி வசதியில்லை, விளை பொருட்களை விவசாயிகள் விற்பது சிரமம், கூட்டுறவுசங்க உறுப்பினர்கள், நிலத்தை குத்தகைக்கு கொடுத்து விட்டார்கள்.

நூறாண்டுகளாகவும் அதற்கு முன்பாகவும் மக்கள் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் போதுதான் அந்த காட்டிற்கு யானைகளும் வந்தது; புலிகளும் வந்தது. அதனால்தான் காப்பகமும் வந்தது; அதற்கு விருதும் வந்தது. நிதியும் வந்தது; யானைகளும் புலிகளும் அதிகமும் ஆனது.

இப்போது புதிதாக மக்களால் வன விலங்குகளுக்கு ஆபத்து என்பது எதனால்? ஆபத்து ஏற்பட்டிருக்குமானால், எங்களின் ஆண்டாண்டுகால வாழ்க்கை முறையால் அழிந்தல்லவா இருக்கும்? விலங்குகள் ஓடி அல்லவா இருக்கும்?

சத்தியமங்கலம் காட்டில் புலிகள் இருப்பது என்பதே, மக்களால் வனத்திற்கோ வனவிலங்குகளுக்கோ ஆபத்து ஏதுமில்லை என்பதைத்தானே உணர்த்துகிறது?

அப்புறம் ஏன் வனத்துறை தடியைத் தூக்கி வந்து மக்களை விரட்டுகிறது? வனத்துறை வன வலங்குகளின் வேட்டையை தடுக்கட்டும், வன நில ஆக்கிரமிப்பை தடுக்கட்டும், மரக்கடத்தலை தடுக்கட்டும், யார் வேண்டாமென்றது?

காட்டில் உள்ள மரங்களையெல்லாம் வெட்டி இரயில் பாதை அமைக்க அனுப்பியது யார்?

முன்பு வெள்ளையர்களையும், பின்பு ஜமீன்தார்களையும் புலி வேட்டைக்கு அனுப்பி, தங்களின் ‘ஆண்மையை’ நிரூபிக்க வைத்தது யார்? வெறும் 25 காசுகளுக்கு ஒரு டன் புற்களை காகித ஆலைகளுக்கு ‘சட்டப்படி’ சப்ளை செய்தது யார்? பங்களாக்களில் தேக்குகட்டிலையும் ஊஞ்சலையும் தூங்கவும் ஆடவும் விட்டது யார்?

வயிற்றுப்பாட்டிற்காக வனத்தில் அல்லாடிக் கொண்டிருக்கும் மக்கள் காட்டை அழித்தார்களா? புலி வேட்டையாடினார்களா?

புலிகள் காப்பகமென்பதே சட்டவிரோதமானது. 2006 ஆம் ஆண்டு, பழங்குடியினர் மற்றும் பாரம்பரியமாக வனத்தில் வாழும் மக்களின் வனநில உரிமைகளை அங்கீகரிக்கும் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இச்சட்டத்தை முடக்க செய்யும் தந்திரம் தான் புலிகள் காப்பகமென்பது. புலிகள் காப்பகத்திற்கும் இச்சட்டம் பொருந்தும் என்பதை வனத்துறை மறந்து; மறைத்து விடுகிறது.

2006 ஆம் ஆண்டு வன விலங்கு பாதுகாப்பு சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டது. அத்திருத்தம், ஒரு பகுதி புலிகள் காப்பகமாக அறிவிக்கப்படும்முன் என்னென்ன செய்ய வேண்டும் எனச் சொல்லியிருப்பதை மக்களின் பாரம்பரிய வன உரிமைகள் ஆங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டுமென்பதை நாட்டின் எந்த புலிகள் காப்பகமும் கடைபிடிப்பதில்லை.

இவர்களின் நோக்கம் வனத்தையோ வனவிலங்குகளையோ காப்பதல்ல. மனிதர்களே இல்லாத காட்டை உருவாக்கி, அவர்களை வெளியேற்றி, தடையில்லாமல் கார்பரேட்டுகளுக்கு கொடுப்பதுதான். ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான ஏக்கர் வன நிலங்கள், சுரங்கங்களுக்காகவும், அணைகளுக்காகவும், இரயில் தடத்திற்காகவும், இராணுவ பயன்பாட்டிற்காகவும், மின் உற்பத்திக்காகவும் வகை மற்றம் செய்யப்படுகிறதே?

இதெல்லாம் வன அழிப்பில்லையா? நாங்கள் சுள்ளி பொறுக்கினால் மட்டும் வனம் அழிந்து விடுமா? கடந்த பத்தாண்டுகளில் வனமல்லா பயன் பாட்டிற்காக மாற்றம் செய்யப்பட்ட வன நிலங்கள் எத்தனை லட்சம் ஏக்கர்?

நாடாளுமன்றத்திலேயே தெரிவிக்கப்பட்ட புள்ளி விபரங்கள் உள்ளனவே? சமீபத்தில், சேலம் சென்னை 8 வழிப்பாதைக்கு கூட வன நிலம் ஒதுக்கப்பட்டுள்ளதே?

தெங்குமர ஹாடாவிற்கோ, மாக்கம்பாளையத்திற்கோ, மல்லியம்மன் துர்க்கத்திற்கோ சாலை வசதி செய்ய 50 ஏக்கர் வன நிலத்தை ஒதுக்கினால் வனத்திற்கு என்ன கேடு வந்து விடும்? இதனால் பயனடையும் வர்க்கம் வேறு. அதனால் பயனடையும் வர்க்கம் வேறு. அது தானே காரணமாக இருக்க முடியும்?

**தெங்கு மரஹாடாவிற்கு சாலை அமைத்து, மோயாற்றின் குறுக்கே பாலம் அமைத்து, வன விலங்குகள் ஊருக்குள் வாரமல் தடுக்க நடவடிக்கை எடுத்திருந்தால், நீங்கள் கோடிகளை கொட்டிக் கொடுத்தாலும் அம்மக்களை வெளியேற சம்மதிக்க வைக்க முடியாது. அவர்கள் வாழ எதுவும் வழி செய்யாமல், கொஞ்சம் கொஞ்சமாக சுருக்கு கயிற்றை கழுத்தில் போட்டு இறுக்கி, அவர்களையே சொல்ல வைக்கும் தந்திரமல்லவா இது? ஏன் இவ்வளவு நாளாக சாலை போடவில்லை? ஏன் பாலம் அமைக்கவில்லை? இப்போதுதானே தெரிகிறது?**


தெங்குமரஹாடா, சத்தியமங்கலம் புலிகள் காப்கத்தின் பலவீனமான ஒரு கண்ணி. அதை முதலில் உடைத்துவிட்டால், பிறகு மற்றவை எளிதாகிவிடும். ஆகவே முதல் முயற்சி அங்கே தொடங்கப்பட்டுள்ளது. இது வனத்துறையின் திட்டமிட்ட சதி.

தெங்குரஹாடாவிற்கு சாலை அமைக்க வேண்டும். மோயற்றின் குறுக்கே பாலம் அமைக்க வேண்டும் வன விலங்குகள் விளை நிலத்திற்கு வராமல் தடுக்க, குறைந்தபட்சம் பட்டாசு வெடிக்கவாவது விட வேண்டும். அந்த வனத்தில் புலிகளும், யானைகளும், மக்களும் எப்போதும் போல் சேர்ந்து வாழவேண்டும்; வாழ்வார்கள்.

இதற்கு அரசு வழி செய்ய வேண்டும். மக்கள் வலியுறுத்த வேண்டும்.

‘தண்ணீர்... தண்ணீர்’ திரைப்படத்தின் ‘அத்திப்பட்டி ‘கிராமமாகிவிடும்... அத்திப்பட்டி.. தண்ணீர் இலலாமல் காணாமல் போனது.. தெங்குமரஹாடா... சிறுவாணிக்கு நிகரான... சுவையான மோயாற்று தண்ணீரிலேயே மூழ்கடிக்கப்படும்.

தொடர்புக்கு: **94430 82372**



# திருமண விழாவில் ஜனசக்தி வளர்ச்சி நிதி

சென்னை சைதாப்பேட்டை எஸ்.மாதவன் – மல்லிகா தம்பதியரின் அன்பு மகன் அபினேஷ் எம்.சி.ஏவுக்கும் – சென்னை எம்.எஸ்.குருமூர்த்தி –விஜயநளினி தம்பதியரின் அன்பு மகள் அனுநர்மதா எம்.எஸ்.சி.க்கும் பிப்.19 அன்று நடைபெற்ற திருமண வரவேற்பின் போது மணமக்களை வாழ்த்திய இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு அவர்களிடம் ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ5000 வழங்கப்பட்டது. உடன் மணமகனின் மைத்துனர் வழக்கறிஞர் கே.மொரார்ஜி–வாணி இணையர் உள்ளனர். மணமக்கள் நீடூழிவாழ ஜனசக்தி வாழ்த்துகிறது.

### மேற்கு வங்க மாணவர் பெருமன்ற நிர்வாகி

# அனிஷ்கான் படுகொலை

## நீதி கேட்டு சென்னையில் ஆர்ப்பாட்டம்



மேற்கு வங்க மாநிலத்தில் சமூக விரோத செயலில் ஈடுபட்டு வந்த திரிணாமுல் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் மீது அலியா பல்கலைக்கழகத்தின் மாணவர் தலைவர் அனிஷ் கான் புகார் அளித்ததால், காவல்துறையினர் மூலமே படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். படுகொலைக்கு நீதி கேட்டும், மாற்றுக் கருத்து கொண்டவர்கள் மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வரும் மம்தா அரசைக் கண்டித்தும் அனைத்திந்திய மாணவர் பெருமன்றம், இந்திய மாணவர் சங்கம் சார்பில் பிப். 25 அன்று சென்னையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு மாணவர் பெருமன்ற வடசென்னை மாவட்டத் தலைவர் த.அன்பரசு, மாணவர் சங்க தென்சென்னை மாவட்டத் தலைவர் பாரதி ஆகியோர் தலைமை தாங்கினார். மாணவர் பெருமன்ற மாநில செயலாளர் தினேஷ் சீரங்கராஜ், மாணவர் சங்க மாநில செயலாளர் வீ.மாரியப்பன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். இதில் மாணவர் பெருமன்ற மாநில துணைச் செயலாளர் இரா.இராமசாமி, மாநில துணைத் தலைவர் ஆ.பிரகாஷ், மாணவர் சங்க மாநில நிர்வாகி பிரகாஷ் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## இந்த வார தம்பிக்குறள்

### 61. மல்லல் நிறைந்த மனம்

**மல்லல் நிறைந்த மனமது மாநிலத்து**
**அல்லல் அழிக்கும் அற.**

வலிமை மிகுந்த நெஞ்சமே, உலகில் துன்பங்களை முற்றிலுமாக அழிக்க வல்லதாகும்.

**தன்னுயிர் தானறப் பேணான் தரணியில்**
**மன்பதைப் பேணு மவன்**

தன்னுயிரை மட்டுமே காத்துக் கொள்ளும் ஆசை இல்லாதவன், பிற உயிர்களுக்கு உண்டாகும் துன்பங்களை நீக்கிக் காப்பவனாக இருப்பான்.

# வாசகர் டுவிட்

**ஆசிரியர் ஜனசக்தி,**

நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் 2022 திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வெற்றி என்பது அரசியல் வெற்றி என்று மாநிலச் செயலாளர் மிகப் பொருத்தமாக கூறியிருக்கிறார். இதை அமைப்பு நிலை வெற்றியாக முன்னெடுக்க வேண்டும்.

– **க.சுந்தரம்**, நீடாமங்கலம்

**ஆசிரியர் ஜனசக்தி,**

பாசிச பாஜக ஆட்சியில் பெருக்கெடுத்து பாயும் கார்ப்பரேட் ஊழல்களையும், கொரோனா காலத்தில்கூட பெரும் பணக்காரர்கள் எண்ணிக்கை 101லிருந்து 141ஆக அதிகரித்திருக்கிறது என்பதையும் த.லெனின் கட்டுரை விவரித்திருக்கிறது.

பாசிச மதவெறி என்ற தலைப்பில் ஆர்.கே. கட்டுரை நரம்பை முறுக்கேற்றுகிறது.

– **பாலமுருகன்**, ஒட்டப்பிடாரம்

**ஆசிரியர் ஜனசக்தி,**

உக்ரைன் போர் சூழல் குறித்த ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை போருக்கான உண்மையான காரணங்களை விளக்கிக் காட்டுகிறது. ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டம் தொடர வேண்டும்.

என்ன காரணம் என்றாலும் போர் தீர்வாகுமா? என்ற கேள்விக்கு விடை தேட வேண்டும்.

– **மகாதேவன்,**
கள்ளக்குறிச்சி

**ஆசிரியர் ஜனசக்தி,**

அனில் ராஜிம்வாலே எழுதிய பூபேஷ் குப்தா கட்டுரையை படிக்கும்போது ஏராளமான பூபேஷ் குப்தாக்கள் உருவாக வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகிறது.

முதல் பக்கத்தில் மூளையில் இடம்பெறும் எதிரும் – புதிரும் வானதி சீனிவாசனின் வாயை அடைத்து விட்டது.

– **ஜெ.சாந்தி,**
தண்டையார் பேட்டை



### இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கத்தின்

# முப்பெரும் ஆளுமைகள் நூல் வெளியீட்டு விழா!

கோவை வழக்கறிஞர் கே. சுப்பிரமணியன் எழுதிய "இந்திய கம்யூனிஸ்ட் இயக்கத்தின் முப்பெரும் ஆளுமைகள்" எனும் நூலை எதிர் வெளியீடு பதிப்பகம் வெளியிட்டுள்ளது. அந்நூலினை பிப்.25 சென்னை புத்தகக் கண்காட்சி அரங்கில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா.நல்லகண்ணு வெளியிட்டு சிறப்பித்தார்.

இந்திய கலாச்சார நட்புறவுக் கழகத்தின் மாநில பொதுச் செயலாளர் எஸ்.ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு கலை இலக்கிய பெரு மன்றத்தின் மாநில பொருளாளர் ப.பா.ரமணி, கல்வியாளர் எஸ் பாஸ்கரன் ஆகியோர் நூலின் பிரதிகளை பெற்றுக் கொண்டு சிறப்பித்தனர்.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் சென்னை மாவட்ட செயலாளர் பேரா.கணபதி இளங்கோ, இந்திய கலாச்சார நட்புறவுக் கழகத்தின் துணை செயலாளர் எல். அசோக்குமார், சென்னை மாவட்ட செயலாளர் செந்தில்குமார் இந்திய வழக்கறிஞர்கள் சங்கத்தின் ஆதிமூலம், ஸ்டாலின் திரைப்பட இயக்குனர் ஏ. பி.ஆர். ராஜா, பேராசிரியை சித்ரா உள்ளிட்ட பலரும் நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தனர் நூலாசிரியர் வழக்கறிஞர் கே.சுப்பிரமணியம் ஏற்புரை வழங்கி நன்றி தெரிவித்தார்.

### போக்குவரத்து கழக சேவை சிறந்திட

# உரிய நிதி ஒதுக்கப்பட வேண்டும்!

## பொன் விழாவில் தமிழ்நாடு அரசுக்கு ஏஐடியூசி கோரிக்கை!




அரசு போக்குவரத்துக் கழகங்கள் 50 வது ஆண்டு பொன்விழா நிகழ்ச்சி தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையத்தில் சங்க பொதுச்செயலாளர் டி.கஸ்தூரி தலைமையில் நடைபெற்றது. ஓய்வு பெற்றோர் சங்க பொதுச்செயலாளர் பி.அப்பாத்துரை முன்னிலை வகித்தார். ஏஐடியூசி மாநில செயலாளர். சி.சந்திரகுமார் நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். சம்மேளன துணைத் தலைவர் துரை.மதிவாணன், வங்கி ஊழியர் சங்க மாவட்ட பொதுச்செயலாளர் க.அன்பழகன், ஏஐடியூசி மாவட்ட தலைவர் வெ.சேவையா, நுகர்பொருள் வாணிப கழக சங்க மாநில பொருளாளர் தி.கோவிந்தராஜன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். போக்குவரத்து கழக 50 வது ஆண்டு விழா நிகழ்ச்சியில், கடுமையான நிதி நெருக்கடியில் போக்குவரத்து கழகங்கள் இருந்தாலும் மக்கள் பயண சேவையை விடாது, முழுமையாக இயக்கி வருகின்றது. மக்கள் பயண சேவையை மேம்படுத்தவும், கழகங்கள் பாதுகாத்திடவும் தமிழ்நாடு அரசு உரிய நிதியை உடனே வழங்க வேண்டும் என விழாவில் வலியுறுத்தப்பட்டது.



# உயர்மின் கோபுரத்திற்கு எதிராக திருவள்ளூரில் போராட்டம்

திருவள்ளூர் மாவட்டம் அதிகத்தூர் கிராமத்தின் வழியாக உயர் மின் அழுத்த கேபிள்கள் மூலமாக மின்சாரத்தை கொண்டு செல்ல உயரமான மின்சார கோபுரங்கள் அமைக்கப்படுகின்றன. இங்குள்ள தனியார் கார் தொழிற்சாலைக்கு இந்த மின்சாரம் கொண்டு செல்லப்படுகிறது. இதனைக் கண்டித்து கிராம பொது மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தமிழ்நாடு விவசாயிகள் சங்கத் தலைவரும், மேல்நல்லாத்தூர் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவருமான கே.ஆறுமுகம் 80அடி உயர மின் கம்பத்தில் ஏறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார். திருவள்ளூர் டி.எஸ்.பி. சந்திரன், ஆயுதப்படை டி.எஸ்.பி. பாஸ்கரன் ஆகியோர், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் கே.கஜேந்திரன், துணைச் செயலாளர் வி.சரவணன் ஆகியோருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். போராட்டக்காரர்களின் கோரிக்கையை ஏற்று வேலைகள் நிறுத்தப்பட்டன. அரசுக்கு மக்களின் உணர்வுகள் தெரிவிக்கப்படும் என உறுதியளிக்கப்பட்டது.




### பணிநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் பிரச்சனையில்

# முதல்வர் தலையிடக் கோரி தொடர் உண்ணாவிரதம்

பி.சி.ஏ. கார் கம்பெனியிலிருந்து பணிநீக்கம் செய்யப்பட்ட 22 நிரந்த தொழிலாளர்களையும், 158 ஒப்பந்த தொழி லாளர்களையும் மீண்டும் பணி அமர்த்தக் கோரி – தமிழக முதல் வர் தலையிடக் கோரி தொடர் உண்ணா விரதம்

திருவள்ளூர் மேல்நல்லாத்தூரில் அமைந் துள்ள (இந்துஸ்தான் மோட்டார்ஸ்) பி.சி.ஏ.நிர்வாகம் கடந்த மூன்று ஆண்டுகளாக பணி நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு பணி வழங் காமல் வஞ்சித்துவருகிறது.

இது குறித்து தமிழக முதல்வர் கவனத்திற்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் கொண்டு சென்றுள்ளார். நான்கு மாதங்களாகியும் இதுவரை பிரச்சினைக்கு தீர்வுகிடைக்கவில்லை.

தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அலு வலகம் முன் போராட்டம் நடத்தி அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. தொடர் போராட்டங்களின் மூலம் தீர்வு காண கோரிக்கை வைத்து தற்போது தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்று வருகிறது.

போராட்டத்திற்கு நிலம் கொடுத்த விவசாயிகள் சங்கத்தின் தலைவர் கே.ஆறுமுகம், இ.சீனிவாசன், து. தலைவர் எச்.இஸ்மாயில், வி.சரவணன் ஆகியோர் தலைமை தாங்கினர். சி.ஜெய்ஸ், ஜெ.கார்த்திக், வி.கருப்பையா, ஜி.ஆதிகேசவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பிப்.28 அன்று நடைபெற்ற போராட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எஸ்.கண்ணன் துவக்கவுரையாற்றினார். இதில் ஏஐடி யூசி மாநில பொதுச் செயலாளர் டி.எம். மூர்த்தி முடித்து வைத்து உரை யாற்றினார். வி.சி.க., புரட்சி பாரதம், சிபிஎம் உள்ளிட்ட கட்சிகளின் நிர் வாகிகளும், நுங்கம்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் பிரபாகரனும் கலந்து கொண்டனர். மார்ச் 1 அன்று நடைபெற்ற போராட்டத்தில் ஏஐடியூசி மாநில துணைப் பொதுச் செயலாளர் கே. இரவி துவக்கவுரையாற்றினார். காங் கிரஸ் மாவட்டச் செயலாளர், மேல் நல்லாத்தூர் ஊராட்சி மன்ற உறுப் பினர்கள், அதிகத்தூர் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

ஏஐடியூசி மாநிலச் செயலாளர் எம். ராதாகிருஷ்ணன் உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்து வைத்தார். பி.மாரியப்பன், ஆர்.துரைசாமி ஆகி யோர் பங்கேற்றனர்.

### 128 குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட

# வீட்டுமனைகளை அளந்து தரக் கோரி போராட்டம் நடத்த முடிவு

தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கம் புதுத்தெரு கிளை பேரவை கூட்டம் எம்.மருதம்பாள் தலைமையில் சோமரசம்பேட்டையில் உள்ள ஏஐடியுசி அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் திருச்சி மாவட்ட துணைச் செயலாளர் எம்.ஆர். முருகன் கலந்து கொண்டு சிறப் புரையாற்றினார். கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது தலைவராக எம்.மருதம்பாள், துணைத் தலைவராக எஸ். பத்மாவதி, செயலாளராக ஆர்.ஹேமலதா, துணைச் செயலாளராக எம்.ராதா, பொருளாளராக கே. அமராவதி உள் ளிட்டவர்கள் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

புதிய நிர்வாகிகளை வாழ்த்தி மணிகண்டம் ஒன்றிய பொருளாளர் எஸ். முத்தழகு, பெண்கள் சங்க மாநிலக்குழு உறுப்பினர் டி.நிர்மலா ஆகியோர் உரையாற்றினர்.

பேரவையில் கீழ்க்கண்ட தீர்மா னங்கள் ஏகமனதாக நிறை வேற்றப்பட்டது

சோமரசம்பேட்டை, அதவத்தூர், அல்லித்துறை, நாச்சிகுறிச்சி ஆகிய பகுதிகளில் வசிக்கும் சொந்த வீடு இல்லாத தொழிலாளர்கள் 128 குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட இலவச வீட்டுமனை பட்டா இடத்தை 27 மாதமாகியும் இன்று வரை பிரித்து அளந்து வழங்காததை கண்டித்து ஸ்ரீரங்கம் வட்டாட்சியர் அல்லது ஸ்ரீரங்கம் கோட்டாட்சியர் அலுவலகம் முன்பாக தொடர் போராட்டங்கள் நடத்துவது என ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் கே.சுபாஷினி, எம். செல்லம்மாள், வி.கவிதா, அமுதா, எஸ்.அழகுநிலா, எம். காளியம்மாள், ஆர்.தீப்.எஸ்.முபாரக், எம். சிவகாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். கிளை செயலாளர் ஆர்.பிரேமலதா நன்றி கூறினார்.

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்

# கிளை மாநாடுகள்

**எட்டிக்குழி:** தருமபுரி மாவட்டம், பென்னாரம் வட்டம் எட்டிக்குழி கிராமத்தில் கிளை மாநாடு நடைபெற்றது. கூட்டத்திற்கு முனுசாமி தலைமை வகித்தார். மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் வழக்கறிஞர் சி.மாதையன் கலந்து கொண்டு இன்றைய அரசியல் நிலை குறித்து பேசினார். இதில் கிளை செயலாளராக முனுசாமி, துணை செயலாளராக அர்ஜூனன், பொருளாளராக அழகம்மாள் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**கூரம்பட்டி, தீர்த்தகுளம்:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கூரம்பட்டி,தீர்த்தகுளம் கிளை மாநாடு நிர்வாகி முனியப்பன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட பொருளாளர் எம்.மாதேஸ்வரன் சிறப்புரையாற்றினார்.

**நேரு நகர்:** தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி வட்டம் தளவாய்அள்ளி ஊராட்சி நேரு நகரில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கிளை மாநாடு தங்கவேல் தலைமையில் நடைபெற்றது. கிளை செயலாளராக சி.ஜெயகண்ணன், துணை செயலாளராக எம்.தங்கவேல் பொருளாளராக ஏ.ராஜா ஆகியோர் புதிய நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர்.

**எஸ்.பழையபாளையம்:** நாமக்கல் மாவட்டம் எஸ்.பழையபாளையம் கிளை மாநாடு எஸ்.முத்துசாமி தலைமையில் நடைபெற்றது. இதில் கட்சியின் மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.குழந்தான், கட்சியின் மாநில கட்டுப்பாட்டுகுழு உறுப்பினர் எஸ்.மணிவேல், கட்சியின் நாமக்கல் நகர செயலாளர் கே.என்.சுந்தரம் மற்றும் கட்சியின் தோழர்கள் கலந்து கொண்டனர். புதிய கிளை செயலாளராக பி.வி.சிவகுமார், துணை செயலாளராக எஸ்.தங்கம், பொருளாளராக என்.ஜீவானந்தம் ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.





**கந்தசாமி பிள்ளை:** சேலம் மாவட்டம், அஸ்தம்பட்டி மண் டலம், கந்தசாமி பிள்ளை தெரு2 கிளை மாநாடு நடை பெற்றது. டி.காஜா செரீப் தலைமை வகித்தார். மண்டல செயலாளர் ஆர்.எல்.முத்துராஜகோபால் அரசியல் விளக்க உரையாற்றினார். கிளைச் செயலாளராக எம்.கௌதம், துணைச்செயலாளராக டி.காஜா செரீப், பொருளாளராக எம்.அப்பாஸ் தேர்வு செய்யப்பட்டனர். பல்வேறு கட்சிகளிலிருந்து ஒரு பெண் உட்பட 11 பேர் கட்சியில் இணைந்தனர்.




# உக்ரைனில் யுத்தம் கூடாது

## சென்னையில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்

ரஷ்ய, உக்ரைன் போரை நிறுத்தக் கோரியும், அமெரிக்க தலைமையிலான நேட்டோ ராணுவ படைகளை கலைக்கக் கோரியும், ஐக்கிய நாடுகள் சபையை வலியுறுத்தி கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடசென்னை மாவட்டச் செயலாளர் எம்.எஸ். மூர்த்தி தலைமையில் பிப்.28 அன்று வியாசர்பாடியில் டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக்கல்லூரி அருகில் நடைபெற்றது. மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

ஆர்ப்பாட்டத்தில் வட சென்னை மாவட்ட துணைச் செய லாளர் எம்.வசந்தகுமார், பெரம்பூர் பகுதிச் செயலாளர் ஆ.சுப்பரமணி, 42ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் எம்.ரேணுகா, தலித் உரிமை இயக்கத்தின் மாநிலச் செயலாளர் கீ.சு. குமார், தலைமைக்குழு உறுப்பினர் லி.உதயகுமார், வடசென்னை மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் சு.பாஸ்கர், ஜி.சுப்பிரமணி, அருள், கருணாகரன், வட்ட செயலாளர் முனுசாமி, நாகராஜ், மாதர் சம்மேளனத் தலைவர் செண்பகம், மகசின்புரம் கிளைச்செயலாளர் ஆர்.பார்த்திபன், பகுதிக்குழு உறுப்பினர் க.ராஜாங்கம், 37ஆவது வட்டச் செயலாளர் காத்தவராயன், 34ஆவது வட்டச் செயலாளர் க.பாபு உட்பட கட்சியின் முன்னணி நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டனர்.



### செந்தில் பாலாஜியிடம் வாழ்த்து பெற்ற கவுன்சிலர்

புலியூர் பேரூராட்சி ஒன்றாவது வார்டில் வெற்றி பெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கவுன்சிலர் கே.கலாராணி, மாவட்ட செயலாளர் எம்.ரத்தினம் தலைமையில் திமுக மாவட்ட பொறுப்பாளரும், மின்துறை அமைச்சருமான வி.செந்தில் பாலாஜி அவர்களை சந்தித்து வாழ்த்து பெற்றார். உடன் மாவட்ட துணை செயலாளர் எஸ்.மோகன்குமார், இளைஞர் பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் வி.லட்சுமி காந்தன் ஆகியோர் உடனிருந்தனர்.

**மார்ச் 18 அன்று கடற்கரை மாவட்டங்களில் ஆர்ப்பாட்டம்,**

# மார்ச் 28,29 பொது வேலைநிறுத்தத்தில் பங்கேற்போம்

## மீனவர் தொழிலாளர் சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழு முடிவு

தமிழ்நாட்டில் இயங்கும் அனைத்து மீனவர் சங்கங்களின் கூட்டம் பிப்.28 அன்று தமிழ்நாடு மீனவத் தொழிலாளர்கள் சங்க பொதுச்செயலாளர் பி.சின்னத்தம்பி தலைமையில் சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள ஏஐடியுசி அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது.

கூட்டத்தில் டி.எம்.முர்த்தி, ஆர்.ஆறுமுகம், ம.இராதா கிருஷ்ணன் பா.கருணாநிதி, வி.ஆதிமூலம், எஸ்.காளி முத்து, எம்.லோகநாதன், எம்.பொதும்பொன்னு (ஏஐடியுசி) எஸ்.ஜெயசங்கரன் (சிஐடியு) சி.தா.சேரன், ஜென்னிஸ் (விசிக) என்.இப்ராஹிம், டி.பார்த்தீபன் (மனிதநேய ஜனநாயக தொழிற்சங்கம்) கு.பாரதி (தென்னிந்திய மீனவர் சங்கம்), லிங்கன் (வழக்கறிஞர்) ஜெ. கோசுமணி (தமிழ்நாடு மீனவர் மக்கள் சங்கம்) கபடி பி.மாறன் (தமிழ்நாடு மீனவர் முன்னேற்ற சங்கம்), டாக்டர் ஆர்.வி.குமரவேல் (தேசிய மீனவர் பேரவை) பு.கெனிஷ் (எ) கைசன், தர்மராஜ் (மீனவம் காப்போம் மக்கள் இயக்கம்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

கீழ்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப் பட்டன:

**மாநில, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு உருவாக்குதல்:**

தமிழ்நாடு மீனவர் தொழிலாளர் சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழு என்ற பெயரில் சேர்ந்து செயல்படுவது என்றும், ஒருங்கிணைப்புக் குழுவை விரிவுபடுத்துவது என்றும், மாவட்ட அளவிலான குழுக்களை உருவாக்குவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

**கோரிக்கைகள்:**

ஒன்றிய அரசாங்கம் மீனவர்களையும், மீன்பிடித் தொழிலையும் பாதுகாப்பதாக கூறி 'நீலப் பொருளாதாரக் கொள்கை', 'மீன்வள திருத்த மசோதா 2021', 'சாகர்மாலா திட்டம்' ஆகியவற்றை அமுலாக்குவதில் தீவிரம் காட்டி வருகிறது. ஆனால் உண்மையில் இது மீனவர்களுக்கும், மீன்பிடித் தொழிலை நம்பியுள்ள தொழிலாளர்களுக்கும், இந்தியாவின் கடல்வள பாதுகாப்பிற்கும் நேர் எதிரானவை ஆகும்.

இந்த மீனவர்களின் வாழ்வாதாரத்தை அழித்து விட்டு, மீன்பிடித் தொழிலை சர்வதேச கார்ப்பரேட் நிறுவனங்களிடம் ஒன்றிய அரசு ஒப்படைக்கிறது. கடற்கரை கனிமச் சுரங்கங்களை தோண்டி எடுத்தல், சுற்றுலா மேம்பாடு எனும் பெயரில் கடற்கரைகளை உல்லாச விடுதிகளைக் கட்டி ஆக்கிரமித்து மீனவர் கிராமங்களை வெளியேற்றுதல், சுற்றுச்சூழலை மாசுபடுத்துதல், நீலப் பொருளாதாரக் கொள்கை, மீன்வள திருத்த மசோதா, சாகர்மாலா திட்டம் ஆகியவற்றை கைவிடுமாறு ஒன்றிய அரசை இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

இலங்கை கடற்படை தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவது, கைது செய்வது, மீன்பிடி படகுகளை கைப்பற்றுவது, சேதப் படுத்துவது என்னும் தொடர்ந்த இலங்கை அரசின் அத்துமீறல்களை தடுத்து நிறுத்த ஒன்றிய அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஒன்றிய அரசு எடுத்து வரும் தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் எதிரான நடவடிக்கைகளைக் கண்டித்து, 2022 மார்ச் 28,29 தேதிகளில் நடைபெறும் பொது வேலை நிறுத்தத்தில் மீனவர்கள் அனைவரும் பங் கேற்பதென கூட்டம் முடிவு செய்கிறது.

மீனவர், மீன் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்ட அளவில் 18.3.2022 அன்று கடற்கரை மாவட்டங்களில் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வது எனவும் முடிவு செய்யப்பட்டது.

அனைத்து தொழிற்சங்கங்கள் சார்பில் தமிழ்நாடு முழுவதும் 22.3.2022 அன்று நடைபெறும் ஆர்ப்பாட்டங்களிலும், 28.3.2022 மறியல் மற்றும் 29.3.2022 ஆர்ப்பாட்டம் ஆகியவற்றிலும் மீனவர் அமைப்புகள் பங்கேற்பது என முடிவு செய்யப்பட்டது.

இவ்வாறு மீனவர் தொழிலாளர் சங்கங்களின் ஒருங்கிணைப்புக் குழு அறிவித்துள்ளது.

## சீர்காழியில் கே.பி.எஸ். மணி நூற்றாண்டு விழா

அயோத்திதாசர் வாசகர் வட்டம் சார்பில் கே.பி.எஸ்.மணி அவர்களின் நூற்றாண்டு விழா சீர்காழியில் ரெத்தினம்பால் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இதில் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் அகில இந்திய பொதுச் செயலாளர் இரா.திருமலை பங்கேற்று பேசினார். மாவட்ட செயலாளர் அ.சீனிவாசன், ஒன்றிய செயலாளர் மு.செல்லப்பன் மாவட்ட குழு உறுப்பினர் எஸ்.சுந்தரய்யா, அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாவட்ட தலைவர் மூவேந்தர், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் மா.பிரபாகரன், ஆசிரியர் கூட்டமைப்பின் மாவட்ட செயலாளர் எல்.சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**மார்ச் 28, 29 பொது வேலை நிறுத்தத்தை**

## வெற்றிபெறச் செய்வோம்!

தமிழ்நாடு கட்டுமான ஏஐடியூசி சங்கத்தின் தஞ்சை மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் தஞ்சாவூரில் ஏஐடியூசி கூட்டரங்கில் சங்க மாவட்ட தலைவர் சி.சந்திரகுமார் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் ஆர். தில்லைவனம் நலவாரிய செயல்பாடுகள் குறித்து பேசினார். ஏஐடியூசி மாவட்ட தலைவர் வெ.சேவையா, அரசுபோக்குவரத்து சங்க மாநில துணை தலைவர் துரை. மதிவாணன் வாழ்த்துரை வழங்கினர். கூட்டத்தில் கட்டுமான நல வாரியம் உள்ளிட்டு நல வாரிய செயல்பாடுகளை ஒன்றிய அரசு சீர்குலைத்து வருவதையும்,முடக்க நினைப்பதையும் கண்டித்து வருகின்ற மார்ச் 28 ,29 தேதிகளில் நடைபெறும் நாடு தழுவிய பொது வேலை நிறுத்தத்தில் தஞ்சை மாவட்ட கட்டுமான சங்கம் முழுமையாக பங்கேற்பது என்று முடிவு செய்யப்பட்டது.

## இராஜபாளையம் கிழக்கு ஒன்றிய இடைக்கமிட்டி மாநாடு



விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் கிழக்கு ஒன்றிய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது மாநாடு, சத்திரப்பட்டி கு.பழனிச்சாமி நினைவரங்கில் நடைபெற்றது.

அய்யனார், மகாலட்சுமி ஆகியோர் தலைமை வகித்தனர். பாலசுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்தினார். மூத்த தோழர் கே.சுந்தர்ராஜ் கட்சி கொடியை ஏற்றி வைத்தார்.

மாநில நிர்வாககுழு உறுப்பினர் டி.லெனின் மாநாட்டை தொடங்கி வைத்துப் பேசினார். மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம், மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், மாவட்ட நிர்வாககுழு உறுப்பினர்கள் வி.இரவி, நடராஜன், இளைஞர் பெருமன்ற மாவட்ட செயலாளர் கணேசமூர்த்தி ஆகியோர் வாழ்த்தி பேசினர். ஒன்றிய செயலாளர் ஆர்.பி.முத்துமாரி வேலை அறிக்கை தாக்கல் செய்தார். ஒன்றிய குழுவிற்கு 24 பேர்களும், செயற்குழுவிற்கு 9பேர்களும், அதில் செயலாளராக எ.இராமச்சந்திரன், துணை செயலாளராக ஆர்.ஆறுமுகம், பொருளாளராக எ.கலுசுபோத்தி ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர்.

நூல் விலையேற்றத்தின் காரணமாக நசிந்து வரும் பேண்டேஜ் நெசவு தொழிலை பாதுகாக்கவும், அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்பட்ட அரசு சுகாதார நிலையமாக மாற்றிட வேண்டும், கிழவன் கோவில் பகுதிக்கு சுடுகாடு அமைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவெற்றப்பட்டன. பி.மோகன் நன்றி கூறினார்.

## சிதம்பர் நடராஜர் ஆலயத்தை அரசு கட்டுப்பாட்டில் கொண்டு வருக!


### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆர்ப்பாட்டம்



சிதம்பரம் நடராஜர் ஆலயம் சமூக விரோதிகள் மற்றும் சட்ட விரோதிகளின் புகலிடமாக மாறாமல் தடுத்திட, தமிழக அரசு தனிச் சட்டம் இயற்றி அரசு கட்டுப்பாட்டில் கொண்டு வர வலியுறுத்தியும், சிற்றம்பல மேடையில் அனைத்து பக்தர்களும் இலவசமாக வழிபட நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் டி.மணிவாசகம் தலைமையில் பிப்.26 அன்று கீழ சன்னிதி சிதம்பரத்தில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

## அழகு தமிழ் பழகு கவிதைகள்

நம் தாய் மொழி தமிழ் மொழி. தமிழ் மொழியில் பேசுதல், படித்தல், எழுதுதல், வாசித்தல் நம்மைப் பிறர் நேசிக்கவும் வழிவகுக்கும். நேசித்தல் தான் வாழ்வில் சுவாசித்தல் என்கிற கொள்கையுடைய படைப்பாளி ஞா. சிவகாமி அவர்கள் எழுதிய நூலே 'அழகு தமிழ்ப் பழகு' எனும் இக் கவிதை நூல். விண்வெளியில் சாதனை புரியும் இந்தியாவே, மிஷன் சக்தி, விஷன் சக்தி என்கிறாயே மனித சக்தியின் வயிற்றுப் பசியை எப்போது தீர்ப்பாய் என்கிற சாட்டை சொடுக்கியே தனது கற்பனை குதிரையை தட்டி விடுகிறார். பச்சிளங்குழந்தையை பாழும் கிணற்றில் வீசி கொலை செய் யும் தாய், என்ன கொடுமை இது? 'இதயத்தில் வலி இதயமற்ற இவர்களை திருத்த என்ன வழி' எனக் கேட்கிறார். 'என் சமையல் அறையில், நான் உப்பு மில்லை, நான் சர்க்கரையும் இல்லை, நான் சத்துமாவு' ஒரு பெண் குடும்பத்தின் எல்லாமுமாக இருக்கிறாள் என்பதை சத்தான சிவகாமி என்ற கவிதையில் குறியீடாக வைத்துள்ளார். "ஒரே இந்தியா, ஒரே மொழி, ஒரே கலாச்சாரம்,மூளையில் கருத்து திணிப்பு,வயிற்றுக்குள் மலம் திணிப்பு" இவர்களின் ஒரே இந்தியா. ஒரே சாதி, அனைவரும் ஒன்றே என சமத்துவம் பேசாது மாறாக உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்கின்ற பேதம் பிரித்து மனிதர்களை சாதியின் பெயரால் கொடுமை செய்யும். இவர்கள் நடிப்பு தேசபக்தர்கள் என்பதை 'ஓர் இந்தியா' கவிதை சுட்டிக்காட்டுகிறது. கொரோனாவின் பாதிப்புகள், அதன் கோரங் கள் குறித்த பல கவிதைகள் இந்நூலில் உள்ளது. விழிப்போம் எழுவோம் விரட்டுவோம் கொரோனாவை என்று அறைகூவி அழைக்கிறார் மக்களை. பெண்களை அலைபேசியில் அழைத்து ஆபாசமாக பேசுவது ஆண்மை அல்ல! அசிங்கம். 'பெரியாரைத் துணைக் கொள்' நான் சொல்லவில்லை அவ்வை சொன்னது அன்றோ என்கிறார். பெரியாரின் தேவை இன்று பெண்களுக்கு மட்டுமல்ல, சமூகத்திற்கே அவசியப்படுகிறது.





பட்டியலினத்தவர் இறந்தால் இன்றும் கூட புதைப்பதற்கு இடம் இல்லாத அவலத்தை கோடிட்டு காட்டுகிறார். ஓடினால்தான் நீர்..ஆறு, நின்றால் குட்டை... நீ ஓடு...ஓடு ..! என நம்பிக்கை ஊட்டுகிறார். எளிமையான கவிதை வரிகள் இதுவே 'அழகு தமிழ் பழகு ' எனும் ஞா சிவகாமி அவர் களின் கவிதை நூல். அனைவரும் வாங்கிப் படிக்கவும் – **இன்சுவை பாரதி**

**நூலாசிரியர் : ஞா. சிவகாமி**
**வெளியீடு : முல்லை பதிப்பகம், 323/10, கதிரவன் காலனி, அண்ணா நகர் மேற்கு, சென்னை – 40, செல்: 9840358301**
**பக்கங்கள் : 96 விலை : ரூ.100**

# நூல் நயம்

## டாக்டர் அம்பேத்கர் வாழ்க்கை வரலாறும் தாழ்த்தப்பட்ட மக்கள் பிரச்சனையும்

உலகத்தில் எந்த நாட்டிலும் இல்லாத தீண்டாமை என்னும் பெரும் கொடுமை இந்திய சமூகத்தில் இருந்தது. மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதி மக்கள்', தீண்டப்படாதோர்' அல்லது அருகில் 'வரக் கூடா தோர்' அல்லது 'பார்க்க தகாதோர்' என ஒதுக்கப்பட்டனர். இந்திய உப கண்டத்தில் பல்வேறு பகுதிகளில் இவர்கள் பல்வேறு பெயர்களால் அழைக் கப்பட்டனர். இவர்கள் இந்து மதத்தில் இருந்தாலும், இந்து மதத்தில் இருந்த உயர் ஜாதி இந்துக்கள் என கூறப்படுவோர் தாழ்த்தப்பட்டோரை மனிதர்களாகவே கருதவில்லை. இவர்களுக்கு மிருகங்களுக்கு கொடுக் கப்படும் அந்தஸ்துகள் கூட கொடுக்கப்படுவதில்லை. இதற்கு பிரதான கார ணங்கள் வேதங்களும், உபநிடதங்களும் ஆகும். ஏனெனில், இந்து மதம்,சனாதன தர்மம் அனைத்துமே வர்ணாஸ்ரம தர்மத்தின் அஸ்தி வாரத்தின் மீது கட்டப்பட்ட கட்டிடங்கள் ஆகும். வருணாசிரம தரும மும், ஜாதி பிரிவினையும் பிறவியில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்னும் பேதங்கள் நீடித்தது , சூத்திரர்கள் அல்லது சண்டாளர்கள் என்று வேதங்கள கூறும் தாழ்த்தப்பட்டவர்கள் சொல்லொண்ணா கொடுமை களுக்கு இரையாகக் காரணமாய் இருந்து வந்துள்ளனர். இப்படிப் பெரும் கொடுமைகளுக்கு ஆளான அந்த மக்களை விடுவிப்பதற்கு பிறந்த மனிதனின் பெயர்தான் அம்பேத்கர். எளிய குடும் பத்தில் பிறந்தாலும் தனது அயராத படிப்பின் கார ணமாக சிகரத்தை தொட்டவர். "உங்கள் சோக முகங்களை காண்பதும், உங்கள் வேதனைமிக்க குரலைக் கேட்பதும் எனக்கு அளவுகடந்த வருத் தத்தை ஏற்படுத்துகின்றன. நீங்கள் எத்தனை எத் தனையோ காலமாக சொல்லொணா துயரத்திற்கு இரையாகி உள்ளீர்கள்.




ஆனால் உங்கள் அடி மைச் சங்கிலிகளை முத்தமிட்டுக் கொண்டு இருக் கிறீர்கள். பூமிக்கு நீங்கள் ஒரு பாரமே தவிர வேறொன்றுமில்லை. அடிமையில் மோகம் கொள் ளாதீர்கள். வீறு கொண்டு எழுங்கள். உயர்ந்த வன் ஆனாலும் சரி, தாழ்ந்தவன் ஆனாலும் சரி பிறர் போல் நீங்களும் உண்ண உணவு,இருக்க இல்லம் பெற வேண்டியது உங்கள் பிறவி உரிமையாகும். மனிதனாக வாழ, போராடுங்கள், வெற்றி பெறுங்கள்". என வீர ஆவேசம் ஊட்டி ஊமையாய் கிடந்த மக்களை பேச வைத்தவர் அம்பேத்கர். இந்த நூல் அம்பேத்கரின் முழுமையான வாழ்க்கை வரலாற்று நூல் அல்ல, ஆனால் அன்றைய தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக,பொருளாதார பிரச்சனைகள் குறித்த ஒரு ஆய்வு நூலாகும். அந்த மக்களின் துயர வாழ்க்கையை அருமையாக படம்பிடித்துள்ளார் நூலாசிரியர். பல வரலாற்று சம்பவங்களும் இதில் இடம்பிடித்துள்ளன.

இந்நூலை அருமையான எளிய நடையில் நூலாசிரியர் ஏ.எஸ்.கே. எழுதியுள்ளார். அனைவரும் இந்நூலை வாங்கிப் படிக்கவும்

**– இன்சுவை பாரதி**

**நூலாசிரியர் : ஏ.எஸ்.கே**
**வெளியீடு : பாவை பப்ளிகேஷன்ஸ், 142, ஜானி ஜான்கான் சாலை இராயப்பேட்டை, சென்னை–14, செல்: 044 28482441**
**பக்கங்கள் : 224 விலை : ரூ.170**


**செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்**

சுழலும் உலகம்

## உக்ரைன் போர்:

# அணு ஆயுதப் போராக மாறக்கூடிய பேரபாயம்

### டில்மன் ருப் எச்சரிக்கை



அணு மின் உலைகள் அழிவுகர அணு ஆயுதங்களாகவும், உக்ரைனில் நடைபெறும் போர் அணு ஆயுதப் போராகவும் மாறக்கூடிய பேரபாயம் நம்மைச் சூழ்ந்துள்ளதாக அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற அறிஞர் டில்மன் ருப் **(Tilman Ruff)** எச்சரித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியிருப்பதாவது:

உக்ரைனில் தொடங்கியிருக்கும் போர் நடவடிக் கைகள் மனிதகுலத்திற்கு ஒரு மாபெரும் அழிவை உண்டாக்கக்கூடிய அபாயத்தைக் கொண் டுள்ளது. அணு மின் உலைகள் அழிவுகர அணு ஆயுதங்களாகவும், உக்ரைனில் நடைபெறும் போர் அணு ஆயுதப் போராகவும் மாறக்கூடிய பேரபாயம் உலக மானுடத்தை அச்சுறுத்துகிறது.

அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ள தகவல் களின் அடிப்படையில், வழக்கமாகப் பயன்படுத்தப்படும் ஆயு தங்களைக் கொண்டு நடத்தப்படும் போராக இது தொடர்ந்தால், உக்ரைனில் 25,000 முதல் 50,000 அப்பாவி மக்கள் உயிரிழக்க நேரிடும். 5000 – 25000 உக்ரைன் நாட்டு வீரர்களும், 3000 – 10000 ரஷ்ய வீரர்களும், 10 முதல் 50 லட்சம் மக்கள் தங்கள் வீடுகளை இழந்து அகதிகளாகும் அவல நிலை உண்டாகும்.

நேட்டோ அமைப்பின் படைகளும், இதர நாடுகளும் இந்தப் போரில் சிக்கிக் கொண்டால், பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகரிக்கும் என்று ஊகிக்கப் படுகிறது. இதுவரை மனிதகுலம் சந்தித்த போர்களில் அணுஆயுதம் போன்ற பேரழிவுகர ஆயுதங்கள் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டதில்லை. ஆயினும், அவற்றின் விளைவுகள் மிக மோசமாகவே இருந்தன. இரண்டாம் உலகப் போரில், தங்களது உறவினர்களை இழக்காத குடும்பங்களை ரஷ்யாவிலும், உக்ரைனிலும் காண்பது மிகவும் அரிதான விஷயமாகும். 1.4 கோடி ரஷ்யர்களும், 70 லட்சம் உக்ரைனியர்களும் கொல்லப்பட்டுள்ளார்கள். கிழக்கு மற்றும் மேற்குலக நாடுகளின் தொடர்ச்சியான தாக்குதல்களால் (போர்களால்) உக்ரைன் நாடு சீர்குலைந்து நிற்கிறது. இன்றைய நவீன ஆயுதங்கள் நீண்ட தொலைவில் உள்ள இலக்குகளையும் மிகத் துல்லியமாகத் தாக்கி அழிக்கக்கூடியவை என்பதோடு மாபெரும் நாசத்தை ஏற்படுத்தக்கூடியவை ஆகும்.

கொரோனா பெருந்தொற்று நெருக்கடி காலத்திலும் கூட, இராணுவ செலவினம் கவலையளிக்கத்தக்க வகையில் அதிகரித்து வருகிறது. 2020 ஆம் ஆண்டில் இராணுவ செலவினம் சற்று ஏறக்குறைய 1981 பில்லியன் அமெரிக்க டாலர் ஆகும். உக்ரைனில் நடைபெறும் போரால் ரஷ்ய மற்றும் உக்ரைன் நாட்டு மக்கள் மட்டுமின்றி அவற்றின் அண்டை நாட்டு மக்கள், அமெரிக்கா மற்றும் நேட்டோ உறுப்பு நாடுகளின் மக்களும் கடுமையான பாதிப்புக்கு உள்ளாக நேரிடும்.

உக்ரைனில் நடைபெறும் இந்தப் போர் பின்வரும் இரு பெரும் அபாயங்களை நமது பூவுலகின் முன் நிறுத்தியிருக்கிறது.

(1) அணு மின் உலைகள் அழிவுகர ஆயுதங்களாகப் பயன்படுத்தப்படும்!

(2) உக்ரைனில் நடைபெறும் போர் அணு ஆயுதப் போராக மாறக் கூடும்!

அணு மின் உலைகள் மாபெரும் ஆற்றல் வாய்ந்த கதிர் வீச்சு ஆயுதங்களாகப் பயன்படுத்தப் பட லாம். உலகின் மிக மோசமான அணு விபத்து நடைபெற்ற செர்னோபில் பகுதி அமைந்துள்ள உக்ரைன் நாட்டில் வெவ்வேறு பகுதிகளில் இயங்கி வரும் 4 அணு மின் நிலையங்களில் 15 அணு மின் உலைகள் உள்ளன. இவற்றில் மிகப் பெரிய அணு உலை அந்நாட்டின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள சப்போரியா **(Zaporozhye)** நகரில் (டானெட்ஸ்க் நகரிலிருந்து 330 கிலோமீட்டர் தொலைவில், டானெட்ஸ்க் பகுதியின் எல்லை யிலிருந்து 200 கிலோமீட்டர் தொலைவில்) அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இங்கு 6 அணு உலைகள் (ஒவ்வொன்றும் 950 மெகாவாட் திறன் கொண்டது) உள்ளன. உக்ரைன் நாட்டு மின்சாரத் தேவையில் நான்கில் ஒரு பங்கை இந்த அணு மின் நிலையம் உற்பத்தி செய்கிறது. இந்த அணு மின் நிலையம் ஐரோப்பாவின் இரண்டாவது பெரிய அணு மின் நிலையமாகும்.

இந்த அணு மின் நிலையத்தில் உள்ள 6 அணு உலைகளும் அழுத்த நீர் அணு உலை **(Pressurized Water Reactor)** வகை யைச் சார்ந்தவை ஆகும். இவ்வகை அழுத்த நீர் அணு உலையில், முதன்மை வெப்பமாற்றி அல்லது குளிர்வியாக **(coolant)** நீர் பயன்படுத்தப்படுகிறது. எனவே, இந்த அணு உலைகளின் மையப் பகுதியைச் சீர்குலைக்க பெரிய இராணுவத் தாக்குதல் எதுவும் தேவையில்லை. முதன்மை வெப்பமாற்றியான நீர் தீர்ந்த மறுநிமிடமே, அணு உலைகள் வெடித்து, கதிர்வீச்சின் கடும் விளைவுகள் தீவிரமடையும்.

இந்தப் பின்னணியில், உக்ரைன் நாட்டில் உள்ள அணு மின் நிலையங்கள் பாதிப்புக்கு உள்ளாகும் பட்சத்தில், தற்போது தொடங்கியிருக்கும் போர் அணு உலைகளை கதிர்வீச்சு அபாயம் கொண்ட அழிவுகர ஆயுதங்களாக மாற்றிவிடும்.

உக்ரைனில் தொடங்கியிருக்கும் தாக்குதல் முதல் கட்டமாக இராணுவம் மற்றும் விமானத் தளங்கள், நுண்ணறிவுத்துறை ஆகியவற்றின் கேந்திரமான பகுதிகளை இலக்காகக் கொண்டு நடைபெறும். போரின் இறுதிக் கட்டத்தில் எந்தத் தரப்பு தோல்வியை நோக்கி செல்வதாக இருந்தாலும் ரஷ்யா மற்றும் அமெரிக்கா/நேட்டோ ஆகிய இரு தரப்பின் இராணுவக் கோட்பாடுகளும் அணு ஆயுதப் பயன்பாட்டை அனுமதிக்கும். ரஷ்யா மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளும் 1600க்கும் மேற்பட்ட அணு ஆயுதங்களைத் தயார் நிலையில் குவித்து வைத்துள்ளன. பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளும் அணு ஆயுதங்களை வைத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது ஆகும். தற்போதைய உக்ரைன் போர் நெருக்கடியானது வரலாறு, அரசியல் மற்றும் ஆளுமைகள் தொடர்புடையதாக மட்டுமின்றி, நூற்றுக்கணக்கான இராணுவ அதிகாரிகள், ஆலோசகர்கள் மற்றும் சிக்கல் நிறைந்த அதி நவீன தொலைத்தொடர்பு, அறிவியல் தொழிநுட்ப அமைப்புகள் ஆகிவற்றோடு தொடர்புடையதாக உள்ளது. எனவே, எதுவும் எப்போது வேண்டுமானாலும் நடைபெறலாம் என்ற அபாயம் சூழ்ந்துள்ளது.

அணு ஆயுதப் போர் அபாயத்தை உடனடியாகத் தவிர்க்க, சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு இடையே ராஜ்ஜிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதுவே தற்போதைய அவசரத் தேவை ஆகும். குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் அணு ஆயுதங்களை அழித்திட அவற்றை வைத்திருக்கும் நாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ள மேலும் தீவிரமாக முயல வேண்டும். இவ்வாறு டில்மன் ருப் கூறியுள்ளார்.


நன்றி: *தோழர் ம.இராதாகிருஷ்ணன்,*
தமிழில்: *அருண் அசோகன்*

# உக்ரைனில் அமைதி நிலவ வேண்டும்

## உலக சமாதானக் கழகம் அறிக்கை

உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கைகள் குறித்து உலக சமாதானக் கழகம் **(World Peace Council)** விடுத்துள்ள அறிக்கை:

உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கைகள் மற்றும் அங்கு நிலவும் சூழல் குறித்தும் உலக சமாதான கழகம் ஆழ்ந்த கவலை கொள்கிறது. அரசியல் ரீதியிலான, ஆக்கப்பூர்வ பேச்சுவார்த்தை மூலமாக சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை மீண்டும் உறுதிப் படுத்துமாறு சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருக்கும் உலக சமாதான கழகம் அறைகூவல் விடுக்கிறது. மேலும், தீவிரப் போக்கை அடையக்கூடிய அபாயம் கொண்ட இந்த இராணுவ மோதல் மூலமாக ரஷ்யா, உக்ரைன் மக்களுக்கு மட்டுமின்றி, அந்தப் பிராந்தியத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் எவ்வித நன்மையும் ஏற்படப்போவதில்லை.



2014 ஆம் ஆண்டு ஏகாதிபத்திய சக்திகளின் ஆதர வுடன் உக்ரைனில் பிற்போக்காளர்கள் திடீர் வன்முறை வழியாக ஆட்சியைக் கைப்பற்றிய காலகட்டத்தில் இருந்து, அமெரிக்கா, நேட்டோ,மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் அரசியல் மற்றும் இராணுவ சூழ்ச்சிகள் குறித்து உலக சமாதான குழு தெளிவான நிலைப்பாட்டை மேற் கொண் டது. கிழக்கு ஐரோப்பாவில் நேட்டோவின் இராணுவ விரி வாக்கத்தையும், அதன் மூலமாக ரஷ்ய கூட்டமைப்பைச் சுற்றி வளைக்கும் முயற்சியையும் நாம் தொடர்ந்து எதிர்த்தும், கண்டித்தும் வருகிறோம். அதுபோலவே, டான்பாஸின் கிழக்கு மாகாணங்களில் உள்ள மக்கள் மீது உக்ரைன் இரா ணுவம் நடத்தி வரும் கொடூரமான தாக்குதல்களையும் நாம் கண்டித்திருக்கிறோம். எனினும், உக்ரைன் மாகாணங்களின் சுதந்திரத்தை ரஷ்யா தன்னிச்சையாக அங்கீகரித்திருப்பது ஐ. நா. சபை சாசனத்தின் அடிப்படையான கோட்பாடுகளைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாக உள்ளது என்று உலக சமாதான கழகம் கருதுகிறது. அது மட்டுமின்றி, இது போன்ற நடைமுறைகளை இனிவரும் காலங்களில் ஏகாதிபத்திய அரசாங்கங்கள் உலகின் பிற நாடுகளில் மேற்கொள்ளவிருக்கும் அவற்றின் நடவடிக்கைகளை நியாயப்படுத்தப் பயன்படுத்திக் கொள்ளும் என்றும் உலக சமாதான குழு கருதுகிறது. தற்போதைய போர் நெருக்கடிக்கு அடிப்படை காரணமான நேட்டோ அமைப்பின் கிழக்கு நோக்கிய விரிவாக்கத்தையும், உக்ரைனை அந்த விரிவாக்கத்திற்குள் கொண்டு வர மேற்கொள்ளப்படும் முயற்சியையும் உலக சமாதான கழகம் கடுமையாக எதிர்க்கிறது. இயற்கை, எரிவாயு வளங்கள், குழாய் கட்ட மைப்புகள் மற்றும் சந்தைகள் ஆகியவற்றின் மீதான ஆதிக்கம் உள்ளிட்டவையே தற்போதைய சூழலுக்கான அடிப்படை காரணங்கள் ஆகும். இந்தப் போர் ஏற்படுத்தவுள்ள கடும் விளைவுகள் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவிப்பதோடு, உடனடியாகப் போர்நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும் என்று அனைத்து தரப்பினருக்கும் அறைகூவல் விடுக்கிறோம்.

உக்ரைனில் அமைதி நிலவ வேண்டும்!

ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டும்!

ரஷ்யாவின் எல்லை பகுதிகளில் உள்ள படைகள் மற்றும் ஏவுகணைகளை நேட்டோ அமைப்பு திரும்பப் பெற வேண்டும்!

உலக சமாதான கழகம் ஏகாதிபத்திய போர் மற்றும் ஆக்கிரமிப்பை எதிர்க்கிறது. அதன் அடிப்படையில், உகந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உறுப்பினர்களுக்கும், நேச சக்திகளுக்கும் அறைகூவல் விடுக்கிறது.

இவ்வாறு உலக சமாதான குழு விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# ‘எனக்கு மேடை அமைத்துக் கொடுத்த தகப்பன் தா.பா.’






## தா.பாண்டியன் படத்திறப்பு விழாவில் - சாலமன் பாப்பையா பேச்சு

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் தா.பாண்டியன் அவர்களது படத்திறப்பு புகழஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது.**

இந்த நிகழ்ச்சியில் பேராசிரியர் சாலமன் பாப்பையா கலந்து கொண்டு தா.பாண்டியன் உருவப்படத்தை திறந்து வைத்து மலரஞ்சலி செலுத்தி பேசுகையில், முதன் முதலில் “எனக்கு மேடை அமைத்து கொடுத்த தகப்பன் தா.பாண்டியன்” என்றார்.

1961 புதுக்கோட்டையில் நடைபெற்ற தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற கூட்டத்தில் என்னை பேசுமாறு அழைத்தார்.

கூட்ட அழைப்பிதழை அனுப்பியும் வைத்தார். அங்கே யார் எவர் என அறிமுகமில்லாத நிலை.

கூட்டம் நடைபெற்ற இடத்திற்கு நான் நுழையும் போது அங்கு தோழர் ஜீவா, ஜெயகாந்தன், தொ.மு.சி.ரகுநாதன் போன்றோர் இருந்தனர். தா.பாண்டியன் அங்கு வரவில்லை!

பாரதி பற்றிய தலைப்பில் பட்டிமன்ற கூட்டம் காலை யில் நடைபெற்ற போது ஜீவா கூட்டத்தின் நடுவில் அமர்ந்து பேச்சாளர்களின் பேச்சுக்களை கவனமாக கேட்டுக் கொண்டிருந்தார்.

கூட்டம் முடிந்த நிலையில் தோழர் இருங்க காரில் போவோம் என குரல் ஒன்று கணீரென எதிரொலிக்க, மாலை யில் காரைக்குடியில் கூட்டம். ஜீவா அங்கே பேசினார்.

அந்த கூட்டத்திற்கு தா.பாண்டியன் வந்துவிட்டார்.ஏலே சாமி வந்துட்டியா! என என்னை அழைத்தார்.

அங்கே வேறு யாரையும் அறியாத நிலையில் தா.பாண்டியனுடன் ஒட்டிக்கொண்டேன்.

பிறகு காரில் ஜீவா, தாபா, நான் மூவரும் சிவகங்கை வந் தோம். அங்கே ஒரு கூட்டம். கூட்ட ஏற்பாடு கவிஞர் மீரா. அந்த கூட்டத்தில் பொன்னிவளவன், சிவகாமசுந்தரி நான் மூவரும் பேசினோம்.

நான் பேசும் நேரத்தை குறைக்க ஒருவர் என் பேச்சை நிறுத்த கோரினார். ஜீவா அவர்களுக்கு வந்ததே கோபம் என் பேச்சை நிறுத்த கூறியவரை கடுமையாக திட்டினார்.

அதன் பிறகு1961ல் முதல் முறையாக எட்டயபுரத்தில் பாரதியார் விழா. மூன்றுநாள் விழா.

அதில் பங்கேற்று பேசினேன். அங்கேயே என்னை கல்கத்தாவில் நடைபெறும் நிகழ்ச்சியில் ஒரு வாரம் நடைபெறும் விழா பங்கேற்க அழைப்பு விடுத்தனர்.

சென்னை தாண்டாத நான் கல்கத்தா செல்லும் முன் சென்னையில் உள்ள கம்யூனிஸ்ட் அலுவலகம் போனேன்.

போனநிலையில் மதுரையை சேர்ந்த வக்கீல் குற்றாலம் அங்கிருந்தார். ஜீவா சாப்பிட்டுக் கொண்டிருந்தார்.

ஜீவா என்னை பார்த்ததும் கல்கத்தா போய் விட்டு வா! பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பற்றி அதிகம் பேசுகிறாய், மேலும் அதிகமாக கூட்டம் போடவேண்டும் போய்வா! ‘வாழ்த்துக்கள்’ என்றார்.

1963ஆகஸ்டு என் திருமணத்தை நடத்தி வைத்தவர் தோழர் தா.பா தான். என்னை பற்றி என் மனைவியிடம் அறிமுகம் செய்துவைத்தார்.

தனக்கும் இந்த இயக்கத்திற்கு தொலைவு உண்டு. எனக்கு இயக்கம் பற்றி அதிகம் தெரியாத நிலையில் ‘சாமி போதும்‘ இயக்கம் வேண்டாம் என்றார். ஏனெனில்

தோழர் தா.பாண்டியன் அவர்களுக்கு என் குடும்பம் பற்றியும் தெரியும். கம்யூனிஸ்ட் கட்சியின் நிலையும் புரியும்.

என் இறுதி மூச்சு உள்ளவரை என் நாக்கு பேசிக்கொண்டே இருக்கும் என்றார் தா.பா.

இதை சொல்ல தைரியம் வேண்டும். அது தா.பா அவர்களால் மட்டுமே முடியும் என நிறைவுரையாற்றினார்.

மதிமுக மாவட்ட செயலாளர் பூமிநாதன் இந்தியக் கம்யூ., கட்சியின் மாநில நிர்வாக குழு தோழர்கள் வெ.அழகிரிசாமி, த.இந்திரஜித், மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பாக மாநகர மாவட்ட செயலாளர் ம.கணேசன், விஜயராசன், பெரியாரிய இயக்கத்தின் சார்பாக வரதராஜன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் எம்.எஸ். முருகன், புறநகர் செயலாளர் காளிதாஸ் மற்றும் தா.பா. குடும்பத்தினர் அவரது சகோதர் தா.நவராஜன் உட்பட பலர் நிகழ்ச்சியில் பங்கேற்று புகழஞ்சலி செலுத்தினர்.

இந்நிகழ்ச்சியை போக்குவரத்து சங்கத்தின் ஏஐடியூசி மாவட்ட தலைவர் உசிலம்பட்டி ஜீவா தலைமையில் எம்.நந்தாசிங் நிகழ்ச்சியை தொகுத்தளித்தார்.



### தோழர் தா.பாண்டியன் நினைவிடத்தில் மலரஞ்சலி

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தோழர் தா.பாண்டியன் அவர்களது முதலாம் ஆண்டு நினைவு தினத்தில் அவர்களது நினைவிடத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாநகர் மாவட்ட குழுவின் சார்பில் மாவட்ட செயலாளர் எம்.எஸ்.முருகன், செயற்குழு தோழர்கள் எம்.சரவணன், பா.ராஜலெட்சுமி, ஜனசக்தி என்.ஜீவா மற்றும் இருளாண்டி உட்பட தோழர்களால் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.















JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201 Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023 WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 05.03.2022 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57













Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.